மஞ்சரி

ஜய - ஆடி
ஜூலை, 1954

யட்ச கானம்
சாவு எப்படி இருக்கும்?
ருஷியாவில் ஸம்ஸ்கிருதம்
எது இன்பம்? (கதை)
மூன்று ஆப்பிள் கதை

-6-
அணா

பந்தத்தின் காரணம்

எல்லாப் பறவைகளும் சுயேச்சையாகத் திரியும்போது; கிளியே, நீ மட்டும் என் கூட்டில் அடைபட்டாய்? இது உன் இனிய பேச்சினால் வந்த பயன்.

—அந்யோக்தி.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாவை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்	கி. தாமோதரன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.	கி. சாவித்திரி அம்மாள்
த. நா. ஸேனாபதி	சீதா தேவி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி	'ஆர்வி'
கௌரி அம்மாள்	மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 7] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: :: ஜூலை 1954 [இதழ் 7

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

குதிரைக்குக் 'குர்ரமு' என்றால், யானைக்கு 'அர்ரமு' என்று ஒரேவிதமாய் நியாயம் பேசுவது பொருந்தாது; அறிவுடைமையும் ஆகாது. அந்நியருக்குச் சொந்தமான திட்டுக்கள் இனியும் இந்திய மண்ணில் இருக்க முடியாது. ஆனால், புதுச்சேரி போன்ற திட்டுக்கள், பிரான்ஸ் வசம் இருக்கின்றன; கோவா, போர்ச்சுகல் வசம் இருக்கிறது. பிரான்ஸும் போர்ச்சுகலும் மரியாதையாய் வெளியேறுவதுதான் அழகு. அவை அப்படிச் செய்ய மறுப்பது மேலும் மேலும் பல விபரீத விளைவுகளுக்குத்தான் காரணமாகும். சமீபத்தில் பிரான்ஸுக்கு இந்தியப் பிரதிநிதியை அழைத்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். முடிவு ஏற்படவில்லை. இதற்கிடையில், ஏதோ பிரமாத யுத்தத்துக்குத் தயாராவதுபோல, பிரெஞ்சுத் துருப்புகள் புதுச்சேரியில் வந்து இறங்கியிருக்கின்றன. எல்லையில் அரண்களெல்லாம் வெட்டுகிறார்களாம்! ஒரு காலத்தில் கைக்கு எட்டாமற் போன சாம்ராஜ்யத்தை இந்திய நாட்டில் பிரெஞ்சுக்காரர்கள் மறுபடி முயன்று சம்பாதித்துக்கொள்ளப் போகிறார்களா என்ன? இந்தச் சிறு திட்டுக்கள்பற்றியெல்லாம் மக்களின் அபிப்பிராயத்தைக் கணிக்க ஓட்டு எடுக்க வேண்டும் என்பதற்கு அர்த்தமே இல்லை. ஸார் ஓட்டு, காஷ்மீர் ஓட்டு என்பது போல் இரு ராஜ்ய எல்லைப்புற மக்கள் ஓட்டு அல்ல இது. என்றிருந்தாலும் இந்தச் சிறு திட்டுக்கள் இந்தியாவுடன் சேர்ந்தேயாக வேண்டும். இவை பிரெஞ்சுக்காரருக்கு ஒரு நாளும் பயனில்லை. இவைகளை அவர்கள் இனி ஒரு காலத்தும் அழகாய் ஆளமுடியாது. இந்திய நாட்டுக்கு ஊறு செய்யும் புரையோடிப் புண்களாகவே இவை மாறி வருகின்றன. இந்தியா இதைச் சகியாது. பிரான்ஸுக்கு இதனால் லாபமில்லை. ஏனோ இன்னமும் இப்படிப் பிடிவாதம் செய்து வருகிறது பிரான்ஸ்!

* * *

பல துறைப் பயிற்சிப் பள்ளிகள் (மல்டி - பர்ப்பஸ் ஹைஸ்கூல்ஸ்) ஐந்நூறு உடனடியாகத் தொடங்கினால், அவைகளுக்குத் தாராளமாகப் பொருள் (ஸப்ஸிடி) உதவ, இந்திய சர்க்கார் தயாராயிருக்கிறது. ஏற்கனவே இருக்கும் பள்ளிகளில் இப்படிப் பல துறைப் பயிற்சிக்கு மாற விரும்புகிறவைகளும் இந்த ஐந்நூறில் அடங்கும். இந்த ஏற்பாட்டை ஆதரிப்போரும் இருக்

கிறார்கள்; குறை கூறுவோரும் இருக்கிறார்கள். ஸெகண்டரி கல்வியின் நோக்கம் என்ன? வாழ்க்கைக்குப் போதிய வழி காட்டியாக இருப்பதா? காலேஜ் படிப்புக்கு ஏணியாக இருப்பதா? தொழில் பயிற்சியளிக்கும் சாதன மாயிருப்பதா? இப்படித் தனித் தனியாகக் கேள்விகளைக் கேட்டு, கட்சி பேசுவது சரியல்ல. இந்த எல்லா நோக்கங்களை யுமே பூர்த்தி செய்யக்கூடிய விதத் தில் ஸெகண்டரி பள்ளிக்கூடங் களை அமைக்கத்தான், இந்தப் புதிய ஏற்பாட்டை இந்திய சர்க் கார் கைக்கொண்டிருக்கிறார்கள். இதில் பல சிரமங்கள் இருக்கலாம்; இருக்கின்றன என்றே சொல் கிறார்கள். ஆயினும், ஸெகண்டரி கல்வியில் சீர்திருத்தம் மிக அவசி யம் என்பதை யாரும் மறுக்க முடி யாது. படிப்பின் தரத்தைக் கெடுக் காமல், வாழ்க்கைக்குப் பயன் படும் முறையில் ஸெகண்டரி கல்வியைத் திருத்தியமைக்க இந்த ஏற்பாட்டைக் கைக் கொண்டு ஊக்கத்தோடு உழைத்தால் நல்ல பலன் கிட்டும் என்றே தோன்று கிறது.

* * *

கிழக்கு வங்காளத்தில் முஸ் லிம் லீகை மற்றக் கட்சிகள் பொதுத் தேர்தலில் அடியோடு முறியடித்தன. ஹக் மந்திரி சபை அமைந்தது. அமைந்த சில நாளைக் குள் ஏதோ கலகம் நடந்தது. லீக் கட்சியாரின் சூழ்ச்சியாலேயே கல கம் நடந்ததாக, ஹக் கட்சியினர் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கல கமே அது என்றும், அதைச் சமா ளிக்க ஹக் சர்க்காரால் முடிய வில்லையென்றும் கராச்சி சர்க்கார் குற்றம் சாட்டினார்கள். ஹக் மந் திரி சபையை 'டிஸ்மிஸ்' செய்து, கவர்னர் ஆட்சியை அங்கே சுமத்திவிட்டார்கள். இதில் அமெரிக்காவின் சூழ்ச்சி கலந் திருக்கிறது என்று சொல்கிற வரும் உண்டு. எது எப்படியானு லும் சரி; ஜனங்கள் தேர்ந் தெடுத்த பிரதிநிதிகள் கிழக்கு வங்காளத்தில் ஆட்சி செலுத்த முடியவில்லை. அங்கே ஜனநாயகம் போய்விட்டது. ஏதேச்சாதிகாரம் நடக்கிறது. பாகிஸ்தான் கதையே இப்படித்தான் இருக்கிறது. முன்னே பாகிஸ்தான் பிரதம மந்திரியான நாஜிமுத்தீனையே இப்படித்தான் தள்ளினார்கள். அங்கே அடிக்கடி அதிகாரச் சூழ்ச்சி நடந்தவண்ணமாயிருக் கிறதே யொழிய, ஜனநாயகப் பயிர் வளரக் காணோம். நேற்றுவரை நம்மோடு நாமாக இருந்தது பாகிஸ்தான்; இன்று பக்கத்து நாடாக அமைந்திருக்கிறது அது. அதில் நிகழும் இந்த மாதிரி சம்ப வங்கள் நமக்குக் கவலையும் வருத்தமும் தருகின்றன.

இந்தக் காலத்தில்—

ஒரு மனிதனைப் பார்த்து அவன் ஒரு கோடீசுவரனா, அல்லது உண்மையிலேயே தனவந்தனா என்று நம்மால் சொல்லவே முடியவில்லை.

—மேரி வில்ஸன்

கனவு நேரம்

★

பல நிகழ்ச்சி ஒரு கனவிலே நடக்கலாம். ஆனால், அந்தக் கனவு நிகழ்ந்த நேரம் எவ்வளவு? இந்த ஆராய்ச்சி பற்றிய கட்டுரையை 'யுவர் ஹெல்த்' பத்திரிகையில் டாக்டர் டபிள்யூ. ஷ்வீஸ் ஹிமேர் என்பவர் எழுதியிருக்கிறர்.

படுக்கை அறையில் உள்ள ஒரு பொருள் கீழே விழுந்து உடைந்து பெருஞ்சத்தம் உண்டாக்குகிறது. தூங்கினவன் விழிக்கிறான். சத்தத்தின் கடைசி எதிரொலி எழும்போதுதான் அவன் விழிக்கிறான். ஆயினும், பொருள் விழுவதற்கும் அவன் விழிப்பதற்குமிடையில் உள்ள ஒரே ஒரு கண நேரத்தில், அந்தச் சத்தத்தின் பயனாகத் தொடர்ந்து பல உருவெளித் தோற்றங்கள் அவனுடைய பிரக்ஞையில் எழுகின்றன.

பீரங்கிப் படைகள் அணி வகுக்கின்றன. பீரங்கிகள் குறி பார்த்து நிற்கின்றன. 'சுடு' என்ற உத்தரவு பிறக்கிறது. தடார், தடார் என்ற உறுமலுடன் குண்டுகள் பாய்கின்றன. தூங்கினவனுக்கு இப்படி எல்லாம் சத்தம் கேட்கிறது. அவன் விழித்தெழும் ஒரே கண நேரத்தில் இவ்விசம கனவு-யுத்தம் ஒன்று நிகழ்ந்து விடுகிறது.

பிரெஞ்சுப் புரட்சி நிகழ்ந்த பயங்கர நாட்களில் தாம் வாழ்ந்ததுபோல, பிரெஞ்சு விஞ்ஞானி ஒருவர் கனவு கண்டார். புரட்சி நீதிபதிகள் முன்பு அவரைக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். பயங்கரக் கொடுமைகள் புரிந்த பிரபலஸ்தர்களை யெல்லாம் அவர் கண்டார். அவருக்குக் கொலைத் தண்டனை விதித்தார்கள். கொலைக் களத்தில் அவரைக் கொண்டு போய் நிறுத்தினார்கள். சிரச்சேதம் செய்யும் 'கில்லடீன்' என்ற கருவி அமைத்த மேடையில் அவர் ஏறி நின்றார். கத்தி அவர் கழுத்திலே விழுந்தது. உடலிலிருந்து தலை துண்டாகிப் பிரிந்ததுபோல் அவருக்குத் தோன்றியது.

பதைத்து நடுங்கிக்கொண்டே அவர் கண் விழித்தார். படுக்கைத் தலை மாட்டில் கட்டில்மீது அலங்காரமாய்ச் செதுக்கியிருந்த ஒரு சட்டம் முறிந்து தம் கழுத்திலே 'கில்லடீன்' கத்திபோல விழுந்து காயப்படுத்தியிருந்ததை அவர் கண்டார். இப்படி அது தாக்கியதன் பலனாக ஒரு பெரிய நாடகமே அவர் மனத்தில் உதயமாகிவிட்டது!

கனவின் இயல்புபற்றி ஆராயும் விஞ்ஞானிகள் பலர் இந்த மாதிரி அநுபவங்களை யெல்லாம் கவனித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஒரு கனவு நிகழும்

நேரம் எவ்வளவு என்பதைக் கறாராக நிர்ணயிக்க முடியாது என்பதுதான் அவர்களின் முடிவு. ஆனால் எல்லா ஆராய்ச்சிக்காரர்களும் இந்த முடிவைக் கொண்டு திருப்தி அடையவில்லை. கனவு நிகழும் நேரம் நீளமா குறுகலா என்பதையாவது கண்டு பிடிப்பது சாத்தியம் என்றே அவர்களில் சிலர் எண்ணுகிறார்கள்.

ஸதர்ன் கலிஃபோர்னியா யூனிவர்சிட்டி வைத்திய ஆராய்ச்சியாளரான ப்ரொஃபஸர் டேவிட் க்ளீன் என்பவர் இதுபற்றிப் பல சோதனைகள் புரிந்திருக்கிறார். தம் மாணவர்களில் பலருக்கு ஹிப்னடிஸத்தின் மூலம் தூக்க மூட்டினார். அப்போது ஓசையால் காதையோ மணத்தால் மூக்கையோ இதே மாதிரி வேறு புலன்களையோ உறுத்தி அவர்கள் கனவு காணச் செய்தார். எந்தக் கணத்தில் இப்படி அவர்கள் புலனுக்கு உறுத்தல் உண்டாக்கினாரோ அதிலிருந்து அவர்கள் விழித்தெழும் கணம் வரை ஆகும் நேரத்தைக் கணக்கிட 'ஸ்டாப் வாட்ச்' என்ற கடிகாரத்தை உபயோகித்தார். விழித்ததும் கவனமாகத் தங்கள் கனவு விவரம் முழுவதையும் சொல்லும்படி அவர்களுக்குச் சொல்லியிருந்தார்.

ஒரு மாணவன் தூங்கியபோது 'தீ! தீ!' என்ற கூக்குரலைப் போட்டார். அவன் விழித்தெழுந்த போது சொன்னது இது: "என் வீட்டுக்கு அருகே நான் ஒரு காரை ஓட்டிச் சென்றுகொண்டிருந்தேன். ஏதோ சத்தம் கேட்டது. காரை நிறுத்தினேன். மற்றொரு கார், ஒரு மலையிலிருந்து கீழே விழுந்துவிட்டது. காயமடைந்த ஒரு மனிதன் அதன் கீழேயிருந்து முண்டி முண்டி வெளியே வந்தான். அவனைத் தவிர ஒரு பெண்ணையும் காருக்குக் கீழே கண்டேன். அவள் கடுங் காயமுற்றிருந்தாள். நாங்கள் இருவரும் அவளை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றோம்."

இதோடு அவன் விழித்து விட்டான். கடிகாரத்தைப் பார்த்தபோது, இருபது ஸெகண்டு ஆகியிருந்தது. இதுவே கனவு நிகழ்ந்த நேரம்.

உயரத்திலிருந்து கீழே விழுவது போல் கனவு காணும் நேரம் மிகவும் குறுகியதாயிருக்கிறது. ஆயினும், கண்ணுக்கெட்டாத உயரத்திலிருந்து கீழே விழுவது போலக் கனவு உண்டாகிறது. தூங்கிய சிறிது நேரத்துக்கெல்லாம் இந்த மாதிரி கனவு பெரும்பாலும் தோன்றுகிறது. தேகம் அசைவதால் அதன் சம நிலை மையம் (ஸெண்டர் அவ் ஈக்விலிப்ரியம்) மாறும்போது இந்தக் கனவு ஏற்படுகிறது.

ஒரு பரீட்சையிலிருந்து இது உண்மை என்று ருசுவாயிற்று. சாய்வான ஒரு கட்டிலில் ஒரு மாணவனைப் படுக்கவிட்டார்கள். அவன் தலை ஒரு தலையணையில் சாய்ந்திருந்தது. அவன் தூங்கியவுடனே கால் பக்கத்தில் கட்டில் மீது ஒரு பாரத்தை வைத்து அந்தப் பகுதி அவன் உடம்பை விடச் சற்றுக் கீழே சாயும்படி செய்தார்கள். அந்தக் கணத்திலே அவன் கனவு காணத் தொடங்கி விட்டான். எங்கேயோ பாதாளத்தில் போய் விழுந்துகொண்டிருப்பதுபோல அவனுக்குத் தோன்றி விட்டது.

ஒரே பரீட்சை வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு வித

மான கனவை உண்டாக்கக் கூடும். மிருதுவான ஒரு பொருளால் பல பேரைத் தூங்கும்போது தடவினார்கள். தன் கையை ஏதோ பசு நக்குவதுபோல ஒருவன் கனவு கண்டான். தான் ஆஸ்பத்திரியில் கிடப்பது போலவும், தன் கையை ஒரு பெண் வந்து தடவுவதுபோலவும் இன்னொருவன் கனவு கண்டான். ஒரு பெரிய நாய் வந்து தன் கையிலே ஒண்டுவது மாதிரி மற்றொருவன் கனவு கண்டான். பெரிய அங்கோரா பூனை ஒன்று வந்து தன் புஜத்திலே உராய்வதாக நாலாவது மனிதன் கனவு கண்டான். எல்லார் கனவு நேரமும் மிகக் குறுகியதாகவே இருந்தது.

ஒரு மனிதன் பல மணி நேரம் படுத்துறங்கி, தொடர்ந்து கனவு கண்டுகொண்டிருக்கலாம். ஆனால் கனவில் காணும் நிகழ்ச்சிகளுக்கு உண்மையாக ஆகக்கூடிய நேரத்தைவிட மிகவும் அற்ப நேரத்திலேயே அந்தக் கனவு நிகழ்ந்துவிடுகிறது.

ஐந்தே ஸெகண்டில் நிகழ்ந்தது ஒரு கனவு. ஆராய்ந்த கனவுகளுக்குள் இதுவே மிகவும் குறுகிய காலத்தில் நிகழ்ந்தது. பெரும்பாலும் ஒரு கனவு நிகழும் நேரம் முப்பது ஸெகண்டு.

சில கனவுகள் இன்னும் அதிக நேரங்கூட நீடிக்கின்றன. கலைஞர்களின் பல கலா சிருஷ்டிகளும் கவிஞர்களின் பல கவிதைகளும் கனவின் தூண்டுதலாலேயே உருவாயின என்று தெரிகிறது. வயலின் வாசிப்பதிலும் சாகித்தியம் அமைப்பதிலும் புகழ்பெற்ற டார்ட்டினி என்பவர், பிரசித்திபெற்ற 'ட்ரில் டி டையபிள்' என்ற தம் பாட்டை ஒரு கனவில் தான் கேட்டாராம். தாம் பல சமயம் தம் கனவிலே கவிகள் இயற்றியதாகவும், அவைகள் அவ்வளவு மோசமாக இல்லையென்றும் வால்டேர் கூறுகிறார்.

நீரில் எழும் குமிழியும் நுரையும் போன்றவைதான் பெரும்பாலும் கனவுகள். பிரக்ஞையின் மேல்மட்டத்தில் அவை திரைத்தெழுந்து பிறகு சிதறிப் போகின்றன. ஆயினும் இந்த நுரை மனத்தின் அடி ஆழத்திலிருந்தே கிளம்பி வருகிறது. ஏதோ ஒரு சம்பவத்தினாலோ, த்வனியாலோ இது உண்டாகிறது. இத்தகைய கனவின் முழு இயல்பையும் அறிந்துகொள்ள விஞ்ஞானிகள் முயல்கிறார்கள். விஞ்ஞான ஆராய்ச்சிப் பேரிலட்சியங்களிலே இதுவும் ஒன்றாகும்.

கக்குவானுக்குப் புது மருந்து

இங்கிலாந்தில் வைத்திய ஆராய்ச்சிக் கழகத்தார் பல பரிசோதனைகள் செய்தபின், கக்குவானுக்கு க்ளோரோம் ஃபெனிகல், ஆரியோமைசின் ஆகிய இரண்டு 'ஆண்டிபயோடிக்' மருந்துகளும் கைகண்டவை என்று முடிவு கட்டியிருக்கிறார்கள். ஆரம்பத்திலேயே இந்த மருந்துகளைக் கொடுப்பதனால் வியாதியின் கடுமை குறைவதோடு இரைப்பும் நாளுக்கு நாள் மட்டுப்படுகிறது. இருமல் வந்து ஒரு வாரத்துக்கு அப்புறம் இந்த மருந்துகளைக் கொடுத்தால் ஒரு பயனும் ஏற்படுவதில்லை.

—'யுவர் ஹெல்த்'

கன்னட நாட்டுப்புற மக்களின்
மனத்தைக் கவரும் இந்த நாட்டியம்
புத்துயிர் பெற்றிருக்கிறது.

யட்சகானம்

பஸவானி ராம சர்மா



நவநிதிக்குத் தலைவனான குபேரனுடைய தர்பாரிலும் நடராஜப் பெருமானுடைய திவ்விய சந்நிதியிலும் யட்சர்களும் கின்னரர்களும் ஆடிய உன்னத நாடகமே யட்சகானம் என்கிறார்கள். யட்சர்களிடமிருந்து மானிடர் இதைக் கற்றுக்கொண்டார்களாம். கடந்த 7,8 நூற்றாண்டுகளாக யட்சகான மண்டலியார் தசாவதாரமேளம், பாகவதர் ஆட்டம் என்பவற்றின் மூலமாய்க் கன்னட நாட்டு ஜனங்களுக்கு யட்சகானத்தைக் காண்பிக்கிறார்கள்.

நாட்டின் உயிர் நாடியாகிய கிராமங்களில் வேர் ஊன்றி விட்ட உயிருள்ள கலை இது. கிராமத்துச் சாமானிய மக்களுடைய ரஸனைக்கு ஏற்றது யட்சகானமே.

இந்தக் கலை கர்நாடகத்தில், விசேஷமாகத் தென்கன்னடம், வடகன்னடம் ஜில்லாக்களிலும், மைசூரின் மலை நாட்டுப் பகுதிகளிலும் கிராமமக்களின் வாழ்க்கையோடு இணைந்திருக்கிறது.

பாகவதர் ஆட்டம்: இந்த ஆட்டத்துக்குத் தசாவதார ஆட்டம், பாகவதர் ஆட்டம் என்று இரண்டு பெயர்கள் உண்டு. மகா விஷ்ணுவின் தசாவதார சம்பந்தமான கதைகளை இயற்றி அபிநயிப்பதால், தசாவதார ஆட்டம் என்று பெயர். இந்த ஆட்டம் தொடங்கியது முதல் முடியும் வரை அரங்கத்தின் பின்புறத்தில் ஒரு சிங்காசனம் அமைத்து அதன்மேல் ஒருவர் உட்கார்ந்து பதங்களையும் பத்தியங்களையும் சமயோசிதமாகச் சொல்லிக்கொண்டிருப்பார். இவர்தான் பாகவதர். இவரே இந்த ஆட்டத்தில் பத்தியம், நாட்டியம், கீர்த்தனம், அபிநயம், கதைப் பிரசங்கம் எல்லாவற்றுக்கும் உயிர் நாடியாக விளங்குவார். இவர் சூத்திரதாரியாக இருப்பதாலேயே பாகவதர் ஆட்டம் என்று இதற்கு மற்றொரு பெயர். 700, 800

காப்பிரைட்: பிரஜாமத (கன்னடம்), பெங்களூர்.

வருஷங்களுக்கு முன்பிருந்தே சாஸ்திரீய முறை தவறாமல் இது நடந்துவருகிறது. முதலில் வடகன்னடம், தென்கன்னடம் ஜில்லாவைச் சார்ந்த கவிஞர்கள், தசாவதாரக் கதைகளைப் பத்தியமாகக் கன்னடத்தில் அமைத்தார்கள். பத்தியமாய் இருந்தாலும் காவியமாய் இருந்தாலும் அவற்றைப் பிரசங்கம் என்றே குறிப்பிடுவார்கள். ரதி கல்யாணம், அபிமன்யு போர், ருக்மிணீ ஸ்வயம்வரம், லங்காதகனம், கிருஷ்ண லீலை, சூடாமணி, ஐராவதம் முதலிய பிரசங்கங்கள்பிரசித்தி பெற்றவை.

சுருக்கம்: மேலே சொன்ன பிரசங்கங்களும் வேஷமும் இல்லாமல் மூலத்துக்குப் பொருளைமட்டும் சொல்லும் முறை முதலில் ஆரம்பமாயிற்று. இதற்கு ஜாகர (கண் விழித்தல்), தாளமத்தலெ என்ற பெயர்கள் உண்டு. கிராமத்து ஜனங்களுக்கு ஓய்வு கிடைத்த மாதங்களில் எல்லாரும் குறிப்பிட்ட ஓரிடத்தில் கூடி 'ஜாகர'ங்களை நடத்துவார்கள். இரவு 10 மணிக்குத் தொடங்கி விடிய விடிய இது நடப்பதும் உண்டு. யட்சகானப் பத்தியங்களுக்கு ஆற்றொழுக்குப் போல் பொருள் சொல்லக்கூடிய வாக்கு வன்மை உள்ள ஏழெட்டுப் பேர், உள்ளத்தைத் தொடும்படி பேசி மகிழ்விப்பார்கள். இதுமட்டும் போதாது; அபிநயமும் வேண்டுமென்ற கொள்கை பிற்காலத்தில் உறுதி பெற்றது. இப்படித் தசாவதார மேளம் பல நூற்றாண்டுகளாகப் பட்டணவாசிகளின் செயற்கை முறையை அணுக விடாமல், சுத்தமான நாட்டு மக்களின் சுதந்தர ரஸனை சிறக்க வளர்ந்து வந்தது. மழைக் காலத்தில் நடிகர்கள் பிரசங்கத்தையும் பொருளையும் நன்றாகப் பழகிக்கொள்வார்கள். யட்சகானம் நிருத்தியத்தைப் பிரதானமாகக் கொண்டது. இதில் நடிகர்கள் நாட்டியம், நர்த்தனம் என்ற இரண்டு வகைகளாலேயே, தாம் ஏற்ற பாத்திரத்தின் குணத்தை வெளியிடவேண்டும். பேச்சுமூலம் வெளியிடுவதில்லை. மேடைக்கு வரும்போது நடிகர்கள் குதித்துக்கொண்டே வரவேண்டும். இது தான் சம்பிரதாயம். ஒவ்வொரு நடிகரும் காலடி வைக்கும் முறையையும், தாள லயத்துடன் குதிப்பதால் அந்த அந்தப் பாத்திரத்தின் பாவத்தைச் சபையோருக்குத் தெரிவிக்கும் முறையையும் தீர்மானமாக அறிந்திருக்க வேண்டும். இதில் நல்ல திறமை பெற்றுச் சபையோரைச் சந்தோஷப்படுத்த வேண்டும்.

மேடை அமைப்பு: கிராமத்தில் கூட்டங் கூட்டமாக ஜனங்கள்

வருவார்கள். ஏழைகளும் பணக்காரர்களும் சமமாக உட்கார்ந்து ஆனந்திக்கும்படி மேடை அமைந்திருக்க வேண்டும். மேடைக்கு வேண்டிய சாமக்கிரிகளும் நகை நட்டுகளும், இயற்கையாகவும் சுலபமாகத் தயாரிக்கக் கூடியவையாகவும் இருக்க வேண்டும். இயற்கையும் எளிமையும் யட்சகான நாட்டியத்தில் நிறைந்து ததம்பும். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உட்காருவதற்கு மைதானத்தின் நடுவில் சுமார் இருபதடி அகலத்தில் பச்சைப்பந்தல் அமைத்து மாவிலைத் தளிர்களால் தோரணங் கட்டிவிடுவதே சுலபமான வழி. இதுதான் மேடை. பிறகு கால்மணி நேரம் சிரமப்பட்டால், பாகவதருடைய ஆசனம் தயாராகிவிடும். ஜால்ராக்களும் மத்தளங்களும் இன்றியமையாதவை. பாகவதர் தாளம் போட்டுக்கொண்டு எடுப்பான குரலில் இனிமையாகவும் சுருதி சுத்தமாகவும் பாடுவார். பாகவதருடைய தாளத்துக்குத் தகுந்தபடி மத்தளக்காரர் கடைசி வரையில் வாசிப்பார். தாளத்தோடு ஒன்றிய பாகவதரின் பாட்டுத் தொடங்கியதும், ஜனங்கள் மெய்மறந்து விடுவார்கள்.

இயற்கையும் எளிமையும் நிறைந்த இந்த ஆட்டத்தில் ஆடம்பரச் செலவுக்கு இடம் இல்லை. கிராமத்தில் சுலபமாகக் கிடைக்கக் கூடிய அரிதாரம், மை, பலப்பம் முதலிய சரக்குகளை வேஷத்துக்கு உபயோகிப்பார்கள். அட்டை, நெட்டி, மரம் இவற்றைக்கொண்டு கிரீடம், தோள்வளைகள் முதலிய ஆபரணங்களைச் செய்துகொள்வார்கள். முக்கியமாக அபிநயத்தில் நல்ல திறமையும் நாட்டியத்தில் பிறர் மனத்தை வசீகரிக்கும் தன்மையும் இருக்கவேண்டும். சொல்லும் வாக்கியங்களைப் பாத்திரத்தின் அமைப்புக்கேற்றபடியும் தெளிவாகவும் சுவாரஸ்யத்துடனும்லாகவமாகவும் சொல்லவேண்டும். வேஷத்திலும் நகை நட்டுகளிலும் ஆடம்பரம் வேண்டியதில்லை. ஒவ்வொரு பிரசித்தமான கோயிலிலும் அந்தத் தேவஸ்தானத்தின் ஆதரவில் ஒரு மேளம் தோன்றி நடந்து வருகிறது.

நாகரிகத்தின் படையெடுப்பு இந்தக் காலத்தில் யட்சகானத்தையும் ஓரளவு தாக்கிவிட்டது. சினிமாக்களும் நாடகங்களும் முன்னேற முன்னேற யட்சகானத்தின் வீழ்ச்சியும் ஆரம்பமாகிவிட்டது. படிப்பாளிகள் இதில் சேர முன்வருவது குறைந்துவிட்டது. அதனாலேயே கலை க்ஷீணதசைக்கு வந்துவிட்டது. ஆனால் சமீபத்தில் சில பெரியோர்களும் கலையபிமானிகளும் நிலைமையை உணர்ந்து யட்சகானத்தின் மறு மலர்ச்சிக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட முன்வந்திருக்கிறார்கள். ரசிகர்களான இளைஞர்கள், வருவாய் உள்ள தொழிலை விட்டுவிட்டு ஆயுள் பூராவும் இதில் ஈடுபட்டுக் கலைக்காகவே உழைக்கிறார்கள். பழங்காலத்து வித்தைகளில் முக்கியமான லலித கலையைப் பற்றிக் கிராமங் கிராமமாகச் சென்று பிரசாரம் செய்கிறார்கள். பக்தர்கள், தெய்வங்கள் சம்பந்தப்பட்ட கதைகளை நடத்துகிறார்கள். இதன்மூலம் நம் நாட்டின் பண்பாட்டையும் ஏழை எளியவர்களும் உணரும்படி செய்கிறார்கள். இந்தக் கலையில் ஜனங்களுக்குப் புது ஊக்கம் பிறந்திருக்கிறது.

[இதோ சில கேள்விகள்: எங்கே, உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 14-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

(1) ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியின் சம்பளம் 30,000 டாலர், 50,000 டாலர், 1,00,000 டாலர் - இந்த மூன்றில் எது?

(2) மகாத்மா காந்தி வெள்ளாட்டுப் பாலையே சாப்பிடுவார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால், பசுவின் பாலைவிட வெள்ளாட்டின் பால் உயர்ந்ததா, இல்லையா என்று தெரியுமோ?

(3) மலேயா ஃபெடரேஷனின் தலைநகர் எது? சிங்கப்பூரா, கோலாலம்பூரா, மலாக்காவா?

(4) கோல்ஃப் பந்தாட்டம் முதல்முதல் தோன்றியது எந்த நாட்டில்?

(5) பூமி சுழலுகிறது என்று வான சாஸ்திரம் சொல்கிறது. அது எந்தத் திசையிலிருந்து எந்தத் திசைக்குச் சுழலுகிறது? உங்கள் சொந்த யுக்தியைக் கொண்டு இதைச் சொல்லி விடலாம்.

(6) க்ஷயரோகம் பாரம்பர்ய நியதிப்படி பெற்றோரிடமிருந்து குழந்தைக்கும் வந்துவிடும் என்பது சரியா, தவறா?

(7) நிலக்கரியை இன்று ரெயில் எஞ்சின் முதலிய எத்தனையோ யந்திரங்களுக்கு எரிபொருளாக உபயோகிக்கிறார்கள். சக்தி தரும் பெருஞ் செல்வமாக மதிக்கிறார்கள். இந்த நிலக்கரியை முதல் முதலாகக் கண்டுபிடித்தவர் யார்?

(8) கிளி அதிக காலம் வாழுமா? யானை அதிக காலம் வாழுமா?

(9) உலகத்திலேயே மிக உயரமான இடத்தில் வாழும் ஜீவன் எது தெரியுமா?

(10) 'கான்ஸர்' என்ற புற்று நோயை ஒழிக்க இன்று உலகெங்குமே பிரசாரம் நடக்கிறது. இந்தக் கொடிய நோய் ஒட்டுவார் ஒட்டியா?

(11) தவளைக்குப் பல் உண்டா, இல்லையா?

(12) பொதுவாகப் பதினைந்து வயதுக்குப் பிறகு மூளை பருப்பதில்லை என்பது உண்மையா?

(13) பால் மலச்சிக்கல் உண்டாக்கும் உணவா?

(14) கையால் தொட்டால் அப்படியே பொடிப் பொடியாய் உதிர்ந்து போகக்கூடிய அளவுக்கு மிக மெல்லிய தகடாக அடித்துவிடத் தக்க உலோகம் எது?

(15) நீங்கள் பார்க்கும் உருவத்தின் பிம்பம் உங்கள் கண்ணிலே நேராக இருக்கிறதா? தலைகீழாக இருக்கிறதா?

(16) கடிகார முள்களைப் பார்க்கும்போது, மூன்றடிக்கப் பத்து நிமிஷம் இருக்கிறது. இப்போது பெரிய முள் இருக்கும் இடத்தில் சின்ன முள்ளும் சின்னது இருக்கும் இடத்தில் பெரிய முள்ளும் இருந்தால், மணி என்னவாக இருக்கும்?

திருவள்ளுவர் வாக்குக்கும் இதற்கும் சம்பந்தமில்லே; இது வேறு விஷயம்.

பொய் அல்லாத பொய்

★

பழைய பிரிட்டிஷ் ஐ. ஸி. எஸ். ஆட்சிக் காலத்தில் இந்தியர்களுக்குள் இரண்டாவது கோஷ்டியில் பரீட்சையில் தேறி வந்தவர் ஸ்ரீ ரமேசசந்திர தத்தர். சர்க்கார் மாளிகை விருந்தில் இந்திய உத்தியோகஸ்தர்களோடு அவர்கள் மனைவிமாரையும் அழைக்காமல் இருக்கிறார்களே என்ற ஒரு குறை அவருக்கு உண்டு. இதைக் கர்சன் பிரபுவிடம் அவர் சொன்னாராம். கர்சனுக்கும் அவர் கேட்டது சரி என்றுதான் பட்டது; தம் ராணுவக் காரியதரிசியை அழைத்து இதைப்பற்றி விசாரித்தார். காரியதரிசி, இப்படி இந்திய உத்தியோகஸ்தர்களின் மனைவிமாரையும் அழைப்பது வழக்கமில்லே என்றாராம். "அது இருக்கட்டும். எப்போதிலிருந்து இந்த முறை ஏற்பட்டது?" என்று விசாரித்தார் கர்சன். ராணுவக் காரியதரிசி தம் ஆபீஸிலுள்ள பழைய தஸ்தாவேஜிகளையெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். 1890, 1880, 1870, இப்படி 1860 வரை எந்த ஆண்டு தஸ்தாவேஜியைக் கவனித்தாலும் இந்திய உத்தியோகஸ்தர்களை மட்டுந்தான் விருந்துக்கு அழைத்திருந்தார்களே தவிர, அவர்கள் மனைவிமாரை அழைத்ததாகவே தெரியவில்லே. இன்னும் பழைய தஸ்தாவேஜிகளைப் பரிசோதித்துப் பார்க்கும்படி உத்தரவு பிறந்தது. கடைசியில் இது எப்போது தொடங்கியது என்று கண்டு பிடித்துவிட்டார்கள்.

1833-இல் பெண்டிங்க் பிரபு கவர்னர்-ஜெனரலாக இருந்த போது, ராஜா, ராணி, பாபுக்கள், ஸ்ரீமான்கள் எல்லாரையுமே முதல்முதலாக, பிரமாதமாக நடக்கவிருந்த உத்தியான விருந்து ஒன்றுக்கு அழைத்திருந்தார். 1804-இல் கட்டிய வெல்லஸ்லி பிரபுவின் மாளிகைத் தோட்டத்தில்தான் இது நடந்தது. இப்போது இதுதான் கல்கத்தா ராஜபவனமாக விளங்குகிறது. பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தமாதிரி புது ரீதியில் தங்களுக்கு அழைப்பு வந்ததைப் பார்த்ததும் இந்தியர்களுக்கு ஒரே வியப்பாக இருந்தது. இந்தமாதிரி விசேஷங்களுக்குத் தங்களோடு தங்கள் மனைவிமாரையும் அழைத்து வருவது தவறான காரியம் என்று அவர்கள் எண்ணி வந்தகாலம் அது. ஆனல் அப்படித் தாங்கள் போகாவிட்டாலும் கவர்னர்-ஜெனரல் துரையவர்கள் தம்மை அவமதித்ததாக எண்ணிக் கொள்ளப் போகிறாரே என்று அவர்களுடைய மனைவிமாருக்குத் திகில். கடைசியில் அந்தக் காலத்துக்கு ஏற்ற விதத்தில் இதைச் சமாளிக்க ஒரு யுக்தி கண்டு பிடித்தார்கள். அதன்படி விருந்துக்கு

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 20-6-'54), கல்கத்தா.

அழைத்திருந்த இந்தியர் ஒவ்வொருவரும் ஒரு பெண்பிள்ளையோடு ஜோடி ஜோடியாகத்தான் வந்தார். அதாவது, அவர்கள் மனைவிமார் வீட்டில் தங்கி விட்டார்கள்; இவர்களுக்குப் பதிலாக வேறு யாரோ பெண்பிள்ளைகள் விருந்துக்கு வந்தார்கள். விருந்து நன்றாகவே நடந்து முடிந்தது. ஆயினும் விஷயம் மெல்ல அம்பலமாகிவிட்டது. இதற்கப்புறம் பிரிட்டிஷ் ஆட்சியில் சர்க்கார் மாளிகை விருந்துகளுக்கு இந்தியப் பெண்களை அழைக்கவே கூடாது என்று சர்க்கார் தடை விதித்து விட்டார்கள். கடைசியில் கர்சன் பிரபு வந்தார். ரமேசசந்திர தத்தர் சொன்னதன்மேல் அந்தத் தடையை நீக்கினார் கர்சன்.

இன்னும் ஒரு சிறு சம்பவம்: திவ்விய ஞானம் என்ற தியாஸஃபி மார்க்கத்தைக் கண்டுபிடித்தவர் மதாம் பிளாவட்ஸ்கி அம்மை. அவள் ருஷியா தேசத்தைச் சேர்ந்தவள்; ஜெர்மன்காரரை மணந்தாள். 1882-இல் அந்த அம்மாள் சிம்லாவுக்குப் போயிருந்தாள். அங்கே மிஸ்டர் ஏ. ஓ. ஹ்யூம் என்ற அதிகாரியின் வீட்டில் அவளை விருந்துக்கு அழைத்தார்கள். இந்த ஹ்யூம் என்பவர் ஐ. ஸி. எஸ்., காரர். மூன்று ஆண்டுகள் கழித்து 'ரிடயர்' ஆனபின் இந்திய தேசியக் காங்கிரசை ஸ்தாபித்தவர்களுள் முக்கியமானவர். அதற்குக் கொஞ்ச நாளைக்கு முன்னால்தான் பிளாவட்ஸ்கி அம்மை அமெரிக்காவிலிருந்து வந்திருந்தாள். அவளுக்கு யோகசக்தி உண்டு, திபேத்திய குருவான குட்-ஹூமி என்பவரிடமிருந்து மானஸத்தந்தி மூலம் விசேஷ நிகழ்ச்சிகளை அறிந்து சொல்வாள் என்று கேள்வி. விருந்தின்போது மிஸஸ் ஹ்யூம், "என் கழுத்துச் சங்கிலி காணாமல் போய்க் கிட்டத் தட்ட ஆறுமாத காலமாகிறது. அது எங்கே இருக்கிறதென்று சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். பிளாவட்ஸ்கி அம்மை 'யோகசக்தியால் தம் குருவுடன் மானஸத் தந்தி பேசிவிட்டு'ச் சில நிமிஷ நேரத்தில், அந்தப் பங்களாத் தோட்டத்திலேயே ஓர் இடத்தைக் காட்டி அந்தச் சங்கிலி அங்கே இருப்பதாகச் சொன்னார். அங்கே மறுநாள் காலை தோண்டிப் பார்த்தபோது சங்கிலி கிடைத்தது. இந்தச் செய்தி அந்தக் காலத்தில் ஊரெல்லாம் பிரமாதப் பட்டது. ஆனால் பின்னால் பிரிட்டிஷ் பாதிரிகள் சிலர் இது 'சுத்தப் புரட்டு' என்று 'நிரூபி'த்தார்களாம்.

இந்தியர்கள் சர்க்கார் மாளிகை விருந்தின்போது பொய் சொல்லி ஏமாற்றியதற்கும் மதாம் பிளாவட்ஸ்கியின் 'தந்திர'த்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ஒன்று பயங்கொள்ளித்தனத்தினால் சொன்னது. இன்னொன்று துணிந்து சொன்னது. பாதிரிகள் சொன்னதுபோல் அந்த அம்மாள் செய்தது 'புரட்'டாக இருக்கலாம்; கல்கத்தா சீமான்களோ வேறு வழியில்லாத குறையால் தான் பொய் சொல்லவேண்டி வந்தது. அந்தக் காலத்தில் அப்படி விநோதமாகச் சில சந்தர்ப்பங்களில் நடந்துகொள்ள வேண்டித்தான் இருந்தது; என்ன செய்வார்கள், பாவம்! ஏன், இப்போதுகூட இன்னொரு விதத்தில் அந்த மாதிரி விநோதத்தைப் பார்க்கத்தான் பார்க்

கிறோம். சென்ற நூற்றாண்டில் நம்மவர்கள் மனைவிமாரைப் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அநுமதிப்பதில்லை. இன்று அவர்களே தங்கள் சேலை அழகை அந்நியருக்குக் காட்டிக் காட்சியளிக்கும்படி செய்ய எவ்வளவு கவலையும் பிரயாசையும் படுகிறோம்! நாம் நம் மனைவிமாரை விளம்பரப்படுத்த எடுத்துக்கொள்ளும் பிரயாசைக்கும் கவலைக்கும் அந்தக் காலத்து இந்தியர் வெட்கப்பட்டுக்கொண்டு மனைவிமாரை வீட்டில் நிறுத்திவைத்ததற்கும் அப்படி என்ன வித்தியாசம்! சர்க்காரின் தாசாநுதாசர்கள் என்ற முறையில் தம் சுயமரியாதைக்குப் பங்கம் நேர்ந்தாலும் நேரட்டும் என்று அந்தக் காலத்தில் அப்படிச் செய்தார்கள். நாமோ சர்வதேச விவகாரங்களில் நாமும் மற்ற நாட்டாருக்குச் சமமாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்படி விளம்பரப்படுத்துகிறோம். அவர்களைவிட இப்போது நாம் ஒரு படி மேலே போய் இருக்கிறோம். அவர்கள் ஒரேயடியாகப் பொய் சொல்லித் தர்ம சங்கடத்திலிருந்து தப்பப் பார்த்தார்கள். நாமோ நம் நாட்டு உண்மை இயல்பை மறந்து உலகம் மெச்ச வேஷம் போடுகிறோம்; அவ்வளவுதான் விஷயம்.

ஆனால் இங்கே குறிப்பிட விரும்புவது நம் சொந்த வாழ்க்கையில் பொய் பேசுகிறோமே, அதைப் பற்றித்தான். இல்லாத ஒன்றைச் சொல்வதுதான் பொய் என்று கருதுவது சரியல்ல. நேர்மையோடு எதைச் சொன்னாலும் அது பொய் ஆகாது. நாம் சொல்வது பொய்யாக இருந்தாலும் அது நம் மனச் சாட்சிக்கு விரோதமாக இருக்கக்கூடாது; இதுதான் முக்கியம். ஒரு சாமானை விற்கும் ஆசாமி, வாங்குபவரிடம் இன்னார் இன்ன அளவு அதிக விலை கொடுத்து இதை வாங்கினார்கள் என்று ஒருகாலும் சொல்லமாட்டார். என்னதான் சகித்துக் கொண்டு போகும் மனுஷராக இருந்தாலும் சரி, தம்மைப்பற்றி நோண்டி நோண்டி ஒரு நண்பர் விசாரிக்கும்பட்சத்தில், அந்த மனுஷர் ஏதாவது புளுகித்தான் வைப்பார். பிறத்தியாருடைய மனைவிமாரையோ கணவன்மாரையோபற்றித் தங்களுக்கு இன்ன அபிப்பிராயம் உண்டு என்று எந்தத் தம்பதியும் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். ஓர் இடத்தில் வேலை பார்க்கும் சிப்பந்தி எப்போதுமே தன் எஜமானரிடம் பொய் சொல்லாமல் நடந்துகொள்கிறான், அவர் கேட்ட கேள்விக்கெல்லாம் அப்படியே உண்மையாகப் பதில் தருகிறான் என்றால், இல்லை என்றுதான் சொல்வேன். வக்கீல்கள் பொய் சொல்கிறார்களே என்றால், அது அவர்கள் பரம்பரை உரிமை. இந்தக் காலத்தில் நரம்புக் கோளாறுள்ள நோயாளிகள் விஷயத்தில் டாக்டர்களும் இப்படித்தான் ஏதாவது பொய் சொல்ல வேண்டியிருக்கிறது. பத்திரிகையாளரைப் பற்றியோ கேட்கவே வேண்டியதில்லை. அவர்கள் நிலை மகா மோசம். தம்மை வந்து சந்திக்கிறவர்களுக்கெல்லாம் தம் மனத்தில் உள்ளதைச் சொன்னால், அவர்கள் பாடு அதோகதிதான்.

இதனால் நாம் புளுகிலேயே உழல்கிறோம் என்று அர்த்தமில்லை; அப்படி எண்ணுவதும் சுத்த

மோசந்தான். நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அசல் உண்மையைச் சொல்ல முடியாது. பேச்சளவில் பொய் சொல்லித்தான் தீர வேண்டியிருக்கும். இருந்தாலும், உண்மையின் அம்சம் அதில் தூக்கி நிற்க வேண்டும். ஆயினும், மிகவும் நெருக்கடியான நிலைமை என்றால், துணிந்து பொய் சொல்ல வேண்டியதுதான். சத்தியத்தையே உயிர் போனாலும் கடைப்பிடிக்கும் உயர்ந்த வாழ்வு முறைபற்றி இங்கே சொல்லவில்லை. அன்றாட வாழ்வைக் கவனிப்போம். ''பொய் சொல்லாதே'' என்ற நீதி நெறி வாக்கியம் நடைமுறையில் சாத்தியமற்றது. இந்த மாதிரி முதுமொழிகள் தோன்றிய காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்! இன்றைய வாழ்க்கையே புது விதச் சிக்கல்கள் நிறைந்து விளங்குகிறது. நம் குணங்களே ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்த மாதிரி இல்லை. இதையெல்லாம் பிராய்டு தாமே உண்டாக்கினரா, இப்படிக் குண வேறுபாடு இருப்பதாகக் கண்டறிந்து தான் விளக்கினரா என்பதுபற்றி எனக்குத் தெரியாது; என்றாலும், இப்படிப் பல குண வேறுபாடுகள் என்னவோ இருக்கின்றன; ஆகவே, எல்லாருமே ஒரே மாதிரி சத்தியசந்தர்களாக இருப்பார்கள் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. உலகத்தில் பத்துப் பேரோடு நாம் பழகும்போது அவர்களில் ஒன்பது பேர் என்ன நினைக்கிறார்கள்? நாமும் அவர்களைப்போல் அபிப்பிராயப்பட வேண்டும் என்றுதான். அப்படியிருக்க, அவசியம் நேரும் போது, உண்மையைச் சொல்லிப் பிறருக்கு அதிருப்தி ஏற்படும்படி நடந்துகொள்வதைவிடப் பொய் சொன்னால்தான் என்ன முழுகி விட்டது?

பழைய நீதிநெறி முறைப்படி சத்தியத்தைக் கடைப்பிடித்தொழுகுவதென்றால், இந்தக் காலத்தில் செல்லாது. கல்கத்தாவில் ஒரு ப்ரொஃபஸர் இருந்தாராம். அவர் ஒரு நாள் தெரு வழியே போய்க்கொண்டிருக்கும்போது ஓர் ஆசாமி, ஏதோ ஒரு நாடகக் கொட்டகையின் பெயரைச் சொல்லி அது எங்கே இருக்கிறது என்று கேட்டானும். அவர் முதலில், ''அது எங்கே இருக்கிறதோ, எனக்குத் தெரியாது!'' என்று எரிந்து விழுந்தாராம். ஆனல் மறு கணமே அந்த இடம் தமக்குத் தெரிந்திருந்தும் தாம் இப்படிச் சொன்னது பொய் என்று படவே மறுபடியும் எரிச்சலுடன், ''இதோ பார்: அது எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியும் (அதன் பெயரைச் சொல்லக்கூட அவருக்கு அவ்வளவு வெறுப்பு); ஆனாலும் நான் சொல்ல மாட்டேன்'' என்றாராம். இந்த ரகத்தைச் சேர்ந்த சத்தியசந்தர்களாக இருப்பது கேலிக்கு இடந்தருவதோடு, அர்த்தமற்ற அசட்டுத்தனமுமாகும். இந்த மாதிரி உண்மையைக் கடைப்பிடிப்பதால் ஒரு பலனும் இல்லை. இதைவிட அந்த ப்ரொஃபஸர் தமக்குத் தெரியாது என்று பொய் சொல்லியிருந்தாலே தேவலை; அதற்கு மாறாக உண்மையைச் சொன்னதால் அவருக்குக் கீர்த்தியுமில்லை; நன்மையும் இல்லை. பருப்பை விட்டு மேல் தோல் அல்லது கொட்டையைப் பிரமாதமாகப் பாராட்டுகிறமாதிரிதான்

இது; பொருளில்லாத ஒன்றைக் கண்ணை மூடிக்கொண்டு பின் பற்றுகிற மாதிரிதான்.

இந்த விஷயத்தில்தான் பழைய காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் அதிக வேற்றுமை இருக்கிறது. இன்று உலகில் நாம் ஏதோ இழுத்துப் பறித்துக் கொண்டு வாழ்கிறோம் என்று சொல்ல வேண்டுமே யொழிய இதை வேறு என்ன என்பது? இப்படிப் பொருத்தமற்றிருக்கும் நம் வாழ்வின் பலனையும் கண்ணெதிரே அநுபவித்துத்தான் வருகிறோம். சச்சரவும் துன்பமுந்தான் நாம் கண்ட பலன். பழைய படி நெறி முறைகளைத் தொகுத்து அவற்றின்படி ஒழுகுவது என்னவோ இனி அரிதுதான். ஆகவே, இனி ஒவ்வொருவரும்-அவர் ஆணுயிருந்தாலும் சரி, பெண்ணுயிருந்தாலும் சரி-நேர்மையாக நடப்பது ஒன்றுதான் வழி. அந்த அடிப்படையில்தான் நாம் பிறரைச் சத்திய சந்தர் என்றோ, புருகுணி என்றோ தீர்மானிக்க வேண்டும். ஆனாலும் இந்த 'நேர்மை' என்பதே வெவ்வேறு வகையாகவும் வெவ்வேறு இயல்புடையதாகவும் இருக்கிறதே; அதை ஒப்புக்கொண்டு தானே தீர வேண்டும்? இதைப் பற்றி ஆராயும்போது ஐன்ஸ்டீனின் 'ரிலேடிவிடி' கொள்கைப்படி அமைந்த கற்பனை உலகந்தான் நமக்கு நினைவு வருகிறது. அங்கே ஐம்புல உணர்ச்சி மட்டுமின்றி எல்லா நற்குணங்களும் பரஸ்பர சம்பந்தமுள்ளவை என்ற அடிப்படை உண்மை அமைந்திருப்பதைக் காணலாம். இதற்குமேல் ஊன்றி ஆராய எனக்குச் சக்தி இல்லை.

க்விஸ் விடை

(1) 1,00,000. (2) ஆடோ மாடோ தின்ற தீவனத்தைப் பொறுத்தது அந்த விஷயம். ஆட்டின் பாலில் கொஞ்சம் கொழுப்பு அதிகம். அவ்வளவுதான் வித்தியாசம். (3) கோலாலம்பூர். (4) ஹாலந்து நாட்டில். (5) மேற்கேயிருந்து கிழக்கே. (6) தவறு. ஆனால் ரோகியோடு குழந்தையும் சரி, பிறரும் சரி, நெருங்கிப் பழகினால் ரோகம் ஒட்டிக்கொள்ளக் கூடும். (7) சீனக்காரர்கள். (8) யானை. (9) எவரெஸ்ட் சிகரத்தில் 22,000 அடி உயரத்தில் வாழும் 'ஆட்டிட் ஸ்பைடர்' என்ற ஒரு வகைச் சிலந்திதான். (10) அல்ல. (11) உண்டு. (12) உண்மைதான். (13) அல்ல; ஆனால், பாலைமட்டும் உண்டால் முற்றும் ஜீர்ணமாகிவிடுவதால், அப்படித் தோன்றக் கூடும். (14) தங்கம். (15) தலை கீழாக. (16) பத்தடித்துச் சுமார் பதினைந்து நிமிஷம் ஆகியிருக்கும்.

ஊரார் இவற்றைக் குற்றம் என்று சொல்வார்கள்.
ஆனுல் இவருக்கு இவை பொழுதுபோக்கு.

என் பொழுதுபோக்கு

ஜி. ஜி. பார்க்கி

நான் எப்பொழுதும் வாழைப் பழம் வாங்குவதைப் பார்த்துச் சிலர் என்ன நினைக்கிருர்கள், தெரியுமா? எனக்கு வாழைப்பழம் என்ருல் உயிர் என்று நினைக்கிருர்கள். ஆனுல் அது என் பொழுதுபோக்குகளில் ஒன்று. பழத்தைத் தின்றதும் தோலைத் தெருவில் எறிவேன். எனக்கு நல்ல பழக்கம் இல்லை என்று நீங்கள் சொல்லலாம். அது தான் இல்லை.

வாழைப்பழத் தோலைத் தெருவில் எறிந்துவிட்டு, மாடி வராந்தாவில் நின்றுகொண்டு நான் மணிக்கணக்காக வேடிக்கை பார்க்கிறேன். இதனுல் எனக்குப் பொழுது நன்ருகப் போகிறது. ஒரே விஷயத்தில் மனத்தைச் செலுத்தும் அப்பியாசம் ஏற்படுகிறது. வாழ்க்கையை ஆராயவும் முடிகிறது. இவை என் சொந்த லாபங்கள்.

பிறருக்கும் இதனுல் நன்மை ஏற்படுகிறது. வழிப் போக்கர்கள் யாராவது வாழைப்பழத் தோலில் சறுக்கி விழுந்தால் நாலு பேர் கொஞ்ச நேரத்துக்குச் சிரித்து ஆனந்தப்படுகிருர்கள். அதிலும் விழுகிறவள் பெண்ணுக இருந்தால் அந்த ஆனந்தம் அளவை மீறி விடுகிறது. வயிற்றுக்காக ஓடியாடிப் பாடுபடும் இந்த உலகத்திலே ஜனங்கள் சில நிமிஷமாவது தங்கள் துன்பங்களை மறந்து சிரிப்பது ஒரு நல்ல காரியந்தானே? இனிமேல் வழியைப் பார்த்து நடக்க வேண்டும் என்ற அறிவும் விழுகிறவர்களுக்கு ஏற்படுகிறது. நீங்கள் என்னதான் தொண்டை வறளக் கத்திஞலும் இந்த அறிவு அவர்களுக்குச் சுலபமாக ஏற்படாது. சொந்த அநுபவத்திலிருந்து அவர்கள் பெறும் அறிவு தான் நிலைக்கும். அப்படி அவர்களுடைய கைகால்கள் உடைந்தாலும் அதனுல் டாக்டர்களுக்கு லாபம் உண்டாகிறது. தெருவில் போகிறவர்கள் அவர்களைத் தூக்கி வண்டியில் போட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்விடுகிருர்கள். இதனுல் உலகில் அன்பும் இரக்கமும் பாந்தவியமும் தாமாகப் பரவுகின்றன.

சினிமா பார்ப்பது எனக்கு அவ்வளவாகப் பிடிக்காவிட்டாலும் சில சமயம் பொழுதுபோக்காய்ப் போவதுண்டு. மேல் வகுப்பில்தான் நான் உட்காருவது வழக்கம். கூடவே இரண்டொரு பிளேடும் எடுத்துச் செல்வேன். நான் ஜேபடித் திருடன் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். எல்லாரும் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது நான் அந்தப் பிளேடுகளினுல் நாற்காலி மெத்தைகளைக் கிழிப்பேன். இது எவ்வளவு மகத்தான காரியம்

காப்பிரைட்: வஸந்த் (மராட்டி: ஜூன் '54), பம்பாய்-4.

என்பது உங்களுக்குச் சொன்னால் தான் தெரியும்.

வெறும் பிரசாரம் செய்வதனால் சமத்துவம் வந்துவிடாது. நான் கம்யூனிஸ்ட்டும் அல்ல, ஸோஷலிஸ்ட்டும் அல்ல. நான் பொழுதுபோக்காகச் சில நிர்மாண வேலைகளைச் செய்கிறவன். வாயைத் திறக்காமல் என் வேலையை மௌனமாகச் செய்கிறேன். இந்த மெத்தை பணக்காரத்தனத்துக்கு அடையாளம். மேல் வகுப்பில் மெத்தை இல்லையென்றால் கீழ் வகுப்புக்கும் இதற்கும் ஒரு வித்தியாசமும் இராது. பணக்காரர்கள் கிழிந்த மெத்தையில் உட்காருவதனால், சில நாள் கழித்து மெத்தை இல்லாமலே உட்காரும் பழக்கம் அவர்களுக்கு வந்துவிடும். இருட்டிலேதான் சினிமாப் படம் காட்டவேண்டும் என்ற விதியை ஏற்படுத்திய மகாநுபாவனுக்கும், படம் ஆரம்பிப்பதற்கு முன்னால் விளக்குகளை அணைக்கும் டோர்கீப்பருக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் தினமும் விடிகாலையில் எழுந்து மக்களுக்கு ஒரு பெரிய தொண்டு செய்கிறேன். உலாவப் போகும்போது வழியில் இருக்கும் வீடுகளிலும் பங்களாக்களிலும் பூந்தோட்டம் இருந்தால், பூக்களைப் பறித்துக்கொண்டே போவேன். இதனால் தினந்தோறும் அழகிய புது மலர்கள் எனக்குக் கிடைக்கின்றன. வீட்டுக்காரர்களுக்கும் இதனால் நன்மை ஏற்படுகிறது. எப்படி, தெரியுமா? நாலைந்து நாளாகப் பூக்கள் மறைவதைக் கண்டதும் அவர்கள் விடிகாலையில் எழுந்து அவற்றைப் பறித்துவிடுவார்கள். இதனால் அதிகாலையில் எழுந்திருக்கும் நல்ல பழக்கம் அவர்களுக்கு உண்டாகிறது. நீங்கள் எவ்வளவுதான் பிரசாரம் செய்தாலும் இந்த நன்மை ஏற்படுமா?

எங்காவது பொதுக்கூட்டம் நடந்தால் அங்கே என்னைக் கட்டாயம் பார்க்கலாம். நான் கூட்டத்தில் முந்திக்கொள்வதுமில்லை; பிந்திக்கொள்வதுமில்லை. நடுவில் உட்காருவேன். யார் பேச வந்தாலும், "போதும், போதும், நிறுத்துங்கள்!" என்று கூச்சல் போட்டுக் கூட்டம் நடக்கவிடாமல் செய்துவிடுவேன். அக்கம் பக்கத்திலுள்ள ஜனங்களும் எனக்கு உதவி செய்கிறார்கள். வீண் பேச்சைவிட ஏதாவது நல்ல காரியம் செய்வதுதான் மக்களுக்குப் பயன்படும் என்பதை நான் நடைமுறையில் காண்பிக்கிறேன்.

பெரிய மனிதர்கள் எல்லாரும் தங்கள் பொழுதுபோக்கைப் பற்றிப் பிரசாரம் செய்துகொள்கிறார்களே! நான் ஒரு சாமானிய மனிதன். என் பொழுதுபோக்கை யாரும் பிரசாரம் செய்ய வேண்டியதில்லை; அது தானாக நடக்கும்; அதனால் எல்லாருக்கும் நன்மையே உண்டாகும்.

முயற்சி

சக்தி உள்ள இடத்தில் முயற்சி அதிகப் பலன் தரும். சக்தி இல்லாத இடத்தில் முயற்சி அந்தக் குறையை நிரப்பும். முயற்சி இருந்தால் முடியாத காரியமும் இல்லை; முயற்சி இராவிட்டால் முடிகிற காரியமும் இல்லை. —ரெய்னால்ட்ஸ்

விவசாயியின் மனக்கோட்டை

ஒரு விவசாயி ஒரு நாள் திறந்த வெளியில் போய்க்கொண் டிருந்தான். அங்கே ஒரு முயல் புதருக்குள் படுத்திருப்பதை அவன் கண்டான். அதைப் பிடிக்க விரும்பிய அவன், சத்தம் செய்யாமல் ஜாக்கிரதையாகப் புதருக்குள் சென்றான். அவனுடைய சிந்தனையும் உடனே வேலை செய்ய ஆரம்பித்தது:

'இந்த முயலைப் பிடித்துக்கொண்டு போய் ஒரு வெள்ளிக் காசுக்கு விற்று, அதைக் கொண்டு ஒரு பன்றிக்குட்டி வாங்குவேன். அது வளர்ந்ததும் பன்னிரண்டு குட்டிகள் போடும். இப்படியே அந்தக் குட்டிகளும் வளர்ந்து தலைக்குப் பன்னிரண்டு குட்டிகள் போடும். அந்தக் குட்டிகளை விற்று நான் ஒரு வீடு கட்டுவேன். பிறகு ஓர் அழகியை மணந்துகொள்வேன். அவள் குழந்தைகளைப் பெறுவாள். பெண் குழந்தைகள் அவளைப்போல அழகாகவும், ஆண்குழந்தைகள் என்னைப்போல முரடாகவும் இருக்கும்.

'அறுவடைக் காலத்தில் நான் நிறையக் கூலியாட்களை வைத்துக்கொள்வேன். என் பிள்ளைகள் அவர்களைப் படாத பாடு படுத்துவார்கள். அப்பொழுது நான் என்ன செய்வேன், தெரியுமா?'

இப்படி நினைத்த விவசாயி உடனே தன் பிள்ளைகள் எதிரே நிற்பதை மனக்கண்ணால் கண்டு, "அடே பசங்களா! நானும் ஒரு காலத்தில் ஏழையாக இருந்தவன் தான். இந்த ஏழைகளை ஏன் இப்படிப் படுத்துகிறீர்கள்?" என்று உரக்கக் கத்தினான்.

அந்தச் சத்தத்திலே முயல் ஒரே பாய்ச்சலாக ஓடி மறைந்து விட்டது.

—'ஸோவியத் நாடு'

கணக்கில் பிறந்த குண்டு

★

விஞ்ஞானி ஒருவர் வேடிக்கையாக நாலு வருஷத்துக்கு முன் ஒரு கணக்குப் போட்டார். அதில்தான் பிறந்தது ஹைட்ரஜன் குண்டு. தாம் படைத்த அந்தப் பூதத்தை அடக்க அவரே இன்று அரும் பாடு படுகிறார்.

ஹைட்ரஜன் குண்டுபற்றிப் பிரமாதப்படுகிறது. ஆனால் அதோடு சம்பந்தப்பட்ட ஒருவரை-அதைக் கண்டுபிடித்த விஞ்ஞானியை-உலகம் மறந்தே போய்விட்டது. அந்த மனுஷருக்கும் ஏனோ இதைக் கண்டு பிடித்தோம் என்றுதான் இருக்கிறது இப்போது.

ஹைட்ரஜன் குண்டைக் கண்டுபிடித்தவர் வியன்னா யூனிவர்சிட்டியின் பௌதிக ப்ரொஃபஸர் டாக்டர் ஹான்ஸ் திர்ரிங் என்பவர்தான். அவரே ஹைட்ரஜன் பூதத்தைக் கிளப்பி விட்டோமே என்று வருத்தப்பட்டு அதை அடக்க இன்று அரும்பாடு படுகிறார்.

"ஹைட்ரஜன் குண்டு சம்பந்தமாக ஆராய்ந்து அதைத் தயாரிக்க முடியும் என்று கண்டபோது அதை ஏதோ சமாஷான கணக்கு என்ற முறையில்தான் போட்டுப் பார்த்தேன். அது சாத்தியந்தான் என்பதை நிரூபிக்க இப்படிச் சில நாடுகள் கோடிக்கணக்கான பவுன்களைச் செலவழிக்கும் என்று நான் கனவில்கூட எண்ணியதில்லை" என்கிறார் அவர்.

இந்த ஆஸ்திரிய நாட்டுப்ரொஃபஸர் ஆஜானுபாகுவாய் இருப்பார்; எல்லாரிடமும் பிரியமாய்ப் பழகும் சுபாவம் உள்ளவர். 1946-இல் இவர் அணுக்குண்டு சம்பந்தமாக மிகவும் தெளிவான விவரம் அடங்கிய ஒரு சிறு நூல் எழுதினார். அதில் ஹைட்ரஜன் குண்டு தயாரிக்க முடியும் என்பதைப் படங்களுடன் விவரமாக விளக்கியிருந்தார்.

அப்போது அதை யாரும் கவனிக்கவேயில்லை. நாலு ஆண்டுகள் கழித்து அமெரிக்கப் பௌதிக சாஸ்திரி ஒருவர் அதை அமெரிக்கக் காங்கிரஸின் மேற்பார்வையில் நடக்கும் அணு சக்திக் கமிட்டியாரிடம் காட்டினார்.

அந்தக் கமிட்டியார் ப்ரொஃபஸர் திர்ரிங்கின் முடிவுகளைத் திரும்பத் திரும்ப அலசி ஆராய்ந்தார்கள்; கடைசியில் அதை நடைமுறையில் செய்வது நிச்சயமாகச் சாத்தியம் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

உடனே ஜனாதிபதி ட்ரூமன், ஹைட்ரஜன் குண்டு ஆராய்ச்சிக்காக ஆயிரம் கோடி டாலர்கள் செலவிடப்போவதாக அறிவித்தார்.

மூலம்: தி எம்பயர் ந்யூஸ் (ஆங்கிலம்), லண்டன்.

ப்ரொஃபஸர் திர்ரிங்குக்கு இதைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது. "இந்தத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வர வேண்டாமே" என்று வேண்டிக் கொண்டார்.

ஐந்து நாளேக்கெல்லாம் பல அமெரிக்க யூனிவர்சிட்டிகளேச் சேர்ந்த பிரபல பௌதிக ப்ரொஃபஸர்கள் பன்னிரண்டு பேர் அவரை ஆதரித்து அந்தமாதிரி குண்டு எதையும் தயாரிக்க வேண்டாம் என்று அமெரிக்க அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்கள்.

"இதை யுத்தகாலத்தில் உபயோகிக்கும் போர்க்கருவி என்று இனிச் சொல்வதற்கில்லை. வீணே லட்சக்கணக்கில் மக்களைக் கொல்லும் சாதனம் என்றுதான் சொல்ல வேண்டும்" என்று அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தார்கள்.

ஆனல் ஹைட்ரஜன் தயாரிக்கும் வேலை இதனுல் நின்றுவிடவில்லை. ஆஸ்திரிய விஞ்ஞானி போட்ட 'விசித்திரக் கணக்கு' உலகத்துக்கே பெருங் கேடாக உருவாகி வந்தது.

ஹைட்ரஜன் குண்டைப்பற்றி ப்ரொஃபஸர் திர்ரிங்கின் அபிப்பிராயம் இதுதான்:

"உலகத்தை அழிக்க வந்த குண்டு என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். ஏனென்ருல், கோபால்ட் என்ற உலோகத்தில் செய்த குப்பியில் வைத்து அந்த மாதிரி ஒரு குண்டை வெடித்தால் போதும்: உலகத்தில் ஜீவப் பிராணிகளே ஒன்றுகூட இராதபடி நசித்துவிடும்.

"இப்படி வெடித்த இடத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான சதுர மைல் பரப்பு உருத் தெரியாமல் போகும்; அதுமட்டுமா? வெடித்தால் உண்டான ரேடியோ-ஆக்டிவிட்டி (கதிர் வீச்சு) காரணமாக உலகத்தில் இருக்கும் பறவைகள், விலங்குகள், மீன், தாவரம், மனித சமூகம் எல்லாமே அழிந்துபோகும்.

"கணித ரீதியிலும் சரி, பௌதிக ரீதியிலும் சரி இது சாத்தியமே. நிலைமை என்னவோ மிஞ்சிவிட்டது. இதவும் இது போன்ற அணுசக்திக் கருவிகளும் அபிவிருத்தி அடையாதபடி தடுப்பதென்ருல் லேசான காரியமல்ல.

"இது அணுயுகம். ஆகவே, ராஜதந்திரிகள் இனிமேலாவது பழைய அரசியல் சச்சரவும் போட்டியும் செல்லாது என்று தெரிந்துகொண்டு அதன்படி நடக்க வேண்டும். சர்வதேச விவகாரங்களில் பரஸ்பரம் சகித்துக்கொண்டு போகும் உயர்ந்த மனேபாவம் வேண்டும். அதற்கான வழி வகைகளேயே நாம் ஆராயவேண்டும். இல்லாவிட்டால் உலகமே அணுசக்தியினுல் அழியவேண்டியிருக்கும்."

நிருபணம்

ஒரு குச்சி வளைந்திருக்கிறது என்பதை நிரூபிக்க, அது பற்றி வாதித்துப் பயனில்லை; பழித்துப் பயனில்லை. அதன் பக்கத்திலே நேரான குச்சி ஒன்றை வைத்துவிடுவதே சரியான வழி.

—ட்வைட் னுமான் மூடி, 'காரோனெட்.'

வேறுபட்ட நியாயம்

கூபா நகரத்துப் பெண்மணிகளில் சிலர் பிரசித்தி பெற்ற இமாம் அபூ ஹனீபா அவர்களைச் சந்தித்து ஒரு கேள்வி கேட்டார்கள்:

"ஒருவன் முறையுள்ள நான்கு பெண்களை ஏககாலத்தில் மணக்க அநுமதி இருக்கும்போது, ஒரு பெண் அப்படி இரண்டு கணவர்களைக்கூட மணக்க ஏன் சட்டமில்லை?" என்பதே அந்தக் கேள்வி.

இமாம் ஹனீபாவுக்கு விளக்கம் தெரியவில்லை. சித்தம் கலங்க, சிந்தை குழம்ப எண்ணிப் எண்ணிப் பார்த்தார்கள். விடை கிடைக்கவில்லை. வாடிய முகத்தோடு வீடு திரும்பிய தந்தையைக் கண்டு, மகள் ஹனீபா என்னவோ ஏதோ என்று வருந்தினள். ஆனல், தந்தை தம்மைக் குழப்பும் பிரச்னையைக் கூறியதும் அவள் முகம் மலர்ந்தது.

"தந்தையே, உங்கள் புகழ் விளங்கும் காலமெல்லாம், என் பெயரும் வாழ வழி செய்யுங்கள். நான் விடை கண்டு தருகிறேன்" என்று மொழிந்தாள்.

தந்தையின் வாக்குறுதியைப் பெற்ற மகள், கேள்வி கேட்ட பெண்மணிகளை, ஆளுக்கு ஒரு சிறிது பாலோடு தம்மைச் சந்திக்கும்படி சொல்லியனுப்பினள்.

அவர்கள் கொண்டு வந்த பாலை யெல்லாம் ஒரு கலத்தில் விடுமாறு கூறினள். பிறகு எல்லாப் பெண்மணிகளும் பல பல பொருள்கள்பற்றி உரையாடிக்கொண் டிருந்தார்கள். பேச்சு முடிந்ததும், பெண்கள் போக விடை கேட்டார்கள்.

"சரி! போகும்பொழுது, அவரவர் கொண்டுவந்த பாலை அவரவர் எடுத்துக்கொண்டு செல்லுங்கள்" என்று கூறினள் இமாமின் மகள்.

பெண்கள் திகைத்துவிட்டார்கள்.

"நாங்கள் ஒவ்வொருவரும் கொண்டு வந்த பால் எது வென்று, இந்தக் கலத்தில் இனம் கண்டு பிடித்து எப்படி எடுக்க முடியும், அம்மா?" என்று வினவினர்கள்.

"அதில்தான் உங்கள் பிரச்னைக்கு விடை இருக்கிறது. பல கணவர்களை ஒரே காலத்தில் மணம் முடித்து மக்களைப் பெற்றெடுத்தால், எந்தக் குழந்தை எந்தக் கணவருக்குப் பிறந்தது என்பதை எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?" என்று பதில் அளித்தாள் இமாமின் மகள்.

பெண்கள் இதைக் கேட்டு, வியப்பும் திருப்தியும் அடைந்தவர்களாய் அகன்றார்கள்.

—எம். ஏ., 'மணிவிளக்கு.'



ஜப்பானில் கண்டது

எம். பி. வி. நரசிங்க ராவ்

அரசாங்க நெல் ஆராய்ச்சி நிபுணர் இவர். நேரில் தாம் கண்ட விவரங்களை இங்கே தந்திருக்கிறார். யுத்தத்தால் முதுகொடிந்த ஜப்பான், எப்படி முன்னேறி வருகிறது என்பதைப் பார்க்க வியப்பே ஏற்படுகிறது.

ஜப்பான் நடுவில் மலைத்தொடர் இருப்பதால் வேகமாய் ஓடும் ஆறுகளும், கண் கவரும் ஏரிகளும், ஆழமான பள்ளத்தாக்குகளும், மண்டிக்கிடக்கும் அடவிகளும் அதில் நிறைந்திருக்கின்றன. அதன் மொத்தப் பரப்பில் ஆறில் ஒரு பாகமான ஒன்றரைக் கோடி எக்கர்களே சாகுபடி யாகும் நிலங்கள். இந்தச் சிறிய இடத்திலேயே தன் எட்டுக் கோடியே நாற்பது லட்சம் ஜனங்களுக்கு வேண்டிய 85 முதல் 90 சத விகிதம் வரையுள்ள உணவுப் பண்டங்களைத் தானே தயாரித்துக்கொள்ளுகிறது அந்த நாடு. சாதாரணமாய்ப் பார்த்தால் ஜப்பான் நிலவளம் உள்ளதல்ல; என்றாலும் அங்கே 4,500 ராத்தல் நெல் விளைகிறது. ஜப்பானின் கோதுமை, உருளைக் கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு முதலியவற்றின் விளைச்சல் கூட, உலகத்தின் எந்தப் பகுதியின் விளைச்சலோடும் ஒப்பு நிற்கும்.

இப்படி அதிக விளைச்சல் பிடிப்பதற்குக் காரணங்கள் இவைதான்:

(1) செயற்கை உரத்தைப் பெருவாரியாக உபயோகிப்பது.

(2) எல்லாவிதக் கழிவுப் பொருள்களையும் (மலக்கழிவும் உட்பட) சேமித்துக் கம்போஸ்ட் செய்து எருவாக்குவது.

(3) பொறுக்குத்தரத் தினிசுப் பயிர்களைப் பயிர் செய்வது.

(4) பரவலாகத் தாக்கும் நோய் கொடிகளைக் காலத்தில் மருந்தடித்து மட்டுப்படுத்துவது.

(5) பலதரப்பட்ட பயிர்களையும் பயிரிடும் நுட்பமான முறைகளைக் கையாளுவது.

(6) பயிர்களின் எல்லா வளர்ச்சி நிலைகளிலும் தகுந்த பராமரிப்புச் செய்வது.

தேசிய அரசாங்கத்தின்கீழ், நாட்டை 46 பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவற்றை 'ப்ரிஃபேக்சர்'கள் என்கிறார்கள். ஒவ்வொரு 'ப்ரிஃபேச்ச'ரையும், தேர்ந்

மூலம்: மேழிச் செல்வம் (தமிழ்: ஆண்டு மலர்'54), விவசாய இலாகா, சென்னை.

தெடுக்கப் பெற்றுச் சம்பளம் வாங்கும் கவர்னரும் அவருடன் சேர்ந்த அசெம்பளியினரும் ஆட்சி புரிவார்கள். போலீஸ் உள்பட எல்லா இலாகாக்களும் இவர்கள் அதிகாரத்துக்குட்பட்டவை. ஒவ்வொரு 'ப்ரிஃபேக்ச'ரிலும் சிறப்பான விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்று உண்டு.

அந்த நிலையத்தில், ரசாயனம், பயிர் முன்னேற்றம், நோய் நொடி, விவசாயக் கருவி முதலிய பல நூல் அறிஞர்களும் நிறைந்திருப்பார்கள். தேசிய அரசாங்கத்தின்கீழ் எட்டு வட்டார நிலையங்கள் வேறு இருக்கின்றன. அவை தம்தம் வட்டார சம்பந்தமான விவசாயப் பிரச்னைகளைப் பரிசீலனை செய்யும். இந்த நிலையங்களின் தலைவர்கள் எல்லாம் அடிக்கடி கூடித் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுவார்கள். நெல், மண் அரிப்பு, தீவனம் முதலியவற்றைத் தேசம் முழுவதற்கும் பொருந்தும் வகையில் இணைத்துக் கவனிக்க ஒரு 'ப்ராஜெக்ட்' தலைவர் உண்டு. தேசிய சர்க்காரின் விவசாய-காட்டிலாகா மந்திரியின் காரியாலயத்தில் 19 'ப்ராஜெக்ட்' தலைவர்கள் இருக்கிறார்கள்.

ஜப்பானில் பலவிதச் சீர்திருத்த முறைகளையும் பரப்பத் தீவிர முயற்சி புரிகிறார்கள். கிராமத்துக்கொன்றாக இப்போது 10,000 பண்ணை ஆலோசகர்கள் இருக்கிறார்கள். இவர்கள் விவசாய உயர்தரக் கல்லூரியில் மூன்றாண்டு பயின்று 'ப்ரிஃபேக்சர்' ஆராய்ச்சி நிலையத்தில் இரண்டாண்டு பயிற்சி பெற்று, அதற்கென்றமைந்த கமிட்டி நடத்தும் பரீட்சையில் தேறினவர்கள். பண்ணை ஆலோசகர்களுக்கு வரவு செலவுக் கணக்குகளைப் பார்க்கும் வேலை எதுவும் இல்லை. கிராம உற்பத்திப் பெருக்கத்துக்கான எல்லா விவகாரங்களையும்மட்டும் அவர்கள் கவனிப்பார்கள். குடும்ப முன்னேற்ற ஆலோசகர்களாக ஆயிரம் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். சமூக சேவை, பொருளாதாரம் முதலிய கலைகளைப் படித்துத் தேர்ந்து பட்டம் பெற்ற பெண்கள் ஆறு மாதம் ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற பிறகு, அவர்களையே இந்த வேலைக்கு அமர்த்துகிறார்கள். சமையல், வீட்டுச் சீர்திருத்தம், உணவு, உடை, வழக்கங்கள் முதலியவற்றில் திருந்திய முறைகளைப்பற்றி மக்களுக்கு ஆலோசனை சொல்வதே இவர்களுடைய வேலை. ஆராய்ச்சி முடிவுகளை அறிந்து மக்களிடையே அவற்றைப் பரப்ப, அந்த அந்தத் துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் ஒவ்வொரு 'ப்ரிஃபேக்ச'ரிலும் ஒவ்வொருவர் இருக்கிறார்கள்.

கால நிலையை அறிவிக்கவும், பெருஞ் சேதம் உண்டாக்கக் கூடிய நோய் நொடிகள் வருவதை அறிந்து முன்னெச்சரிக்கை செய்யவும், கால நிலை அறியும் மூன்றாந்தர நிலையங்கள் 260 இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும், இரண்டு மூன்று அதிகாரிகள் இருப்பார்கள். அந்த அந்த வட்டாரத்தில் முக்கிய மாய்ச் சாகுபடியாகும் பயிர்கள் அந்த நிலையங்களில் இருக்கும். காலநிலை அறியும் அதிகாரிகள் காலநிலையைக் குறிப்பதோடு, நோய் நொடி வரும் அறிகுறி தெரிந்ததும் அதையும் குறித்துக் கொள்ளுவார்கள். அவற்றை அந்த வட்டாரத்திலிருக்கும் ஆராய்ச்சி நிலையத்துக்குத் தெரிவிப்பார்கள்.

இந்த விஷயத்தை ரேடியோ, அச்சிட்ட அறிக்கை இவற்றின் மூலம் வெளியிடுவார்கள். ஜப்பானிலிருக்கும் அறுபது லட்சம் பண்ணைகளில் பாதிப் பண்ணைகள் இந்தச் செய்திகளை ரேடியோ மூலம் தெரிந்துகொள்ளும் வசதியுடையவை.

ஏரி, ஓடும் ஆறு முதலியவைகளிலிருந்து மிக மலிவாக மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசம் முழுவதும் உபயோகிக்கிறார்கள். செயற்கை உரம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பல ஜப்பானிலேயே இருப்பதால், அதை வெளியிலிருந்து கொண்டுவரும் கஷ்டமின்றிக் காலத்தில் 'சப்ளை' செய்ய முடிகிறது. ஜப்பானுக்குத் தேவைப் படும் இருபது லட்சம் டன் அம்மோனியம் ஸல்ஃபேட்டையும் 50 000 டன் யூரியாவையும் அங்கேயே தயாரித்துக்கொள்ளுகிறார்கள். ஸூப்பர் ஃபாஸ்ஃபேட் மட்டும் வெளியிலிருந்து இறக்குமதியாகிறது. சிரசான், மயில்துத்தம் போன்ற மருந்துகளும் ஜப்பானிலேயே தயாராகின்றன. அதிகக் களைப்பின்றித் திறமையாக வேலை செய்வதற்கேற்ற கருவிகளே ஜப்பானில் பெரும்பாலும் இருக்கின்றன. ஜப்பானின் பல பாகங்களிலும் உள்ள தொழிற்சாலைகளிலேயே கை டிராக்டர்கள் (3-5 எச். பி.), கதிர் அடித்தெடுக்கும் யந்திரம் ($\frac{1}{2}$-2 எச். பி.), யந்திர ஸ்ப்ரேயர், வைக்கோலைக் கயிறாகத் திரிக்கும் யந்திரம் முதலியவை தயாராகின்றன.

உலகிலேயே கல்வி அதிகம் உடைய நாடு ஜப்பான். ஒன்பது ஆண்டு வரைக்கும் இலவசக் கட்டாயக் கல்வி (ஆறு ஆண்டு ஆரம்பக் கல்வியும், மூன்று ஆண்டு நடுத்தரக் கல்வியும்) ஆண் பெண் எல்லோருக்கும் கிடைக்கிறது. அதற்குப் பிறகு பயில, தொழில் நுட்ப உயர்தரப் பள்ளிகளும் பொது அறிவு உயர்தரப்பள்ளிகளும் இருக்கின்றன. ஆண், பெண்கள் அவரவர் தகுதிக்கும் விருப்பத்துக்கும் ஏற்றதைப் பயிலலாம். மூன்று ஆண்டுப் படிப்புள்ள விவசாய உயர்தரப் பள்ளிகள் 700 இருக்கின்றன. அதன் பிறகு விவசாயக் கல்லூரிகளில் சேரலாம்; அல்லது அவரவருடைய பண்ணைத் தொழிலை நடத்தப் போகலாம். ஜப்பானே கூட்டுறவு கொண்ட ஒரு பெரிய குடும்பம் போன்றது. ஜப்பானியர் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்கிறார்கள். இப்போது ஜப்பானில் 20, ஆயிரத்துக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் விவசாயக் கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொரு கிராமத்திலும் உண்டு. இந்தச் சங்கம் அந்தக் கிராமத்தின் சமூக நலன்பற்றிய எல்லாக் காரியங்களையும் கவனிக்கும். உழவர்களுக்கு வேண்டிய விவசாயத்தொழில் சம்பந்தமான எல்லாச் சாமான்களையும், வீட்டுக்குத் தேவையான சாமான்கள் சிலவற்றையும் வாங்கவும் விற்கவும், அவரவருடைய சொந்த உபயோகத்துக்குத் தேவையானவை போக மீதியுள்ள விளைபொருள்களை விற்கவும், கடனுகப் பணம் கொடுத்து உதவவும், கச்சாப் பொருள்களைப் பதன்படுத்தவும், சேமிப்புத் திட்டங்கள் மூலம் சிக்கனத்தை ஊக்குவிக்கவும், இன்னும் இவை போன்ற பிற காரியங்கள் புரியவும் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படுகின்றன.

ஜப்பானிய நெல் சாகுபடி

முறையில் உள்ள விசேஷ அம்சங்கள் இவையே:

(1) அவர்கள் செயற்கை உரங்களை அதிகமாகப் போடுகிறார்கள். அதாவது, 75 முதல் 100 ராத்தல் வரை நைட்ரஜன் (தழைச்சத்து), 40 முதல் 75 ராத்தல் வரை ஃபாஸ்ஃபரஸ்(தானியச் சத்து),30 ராத்தல் சாம்பல் சத்து இவைகளைத் தரும் செயற்கை உரங்களை உபயோகிக்கிறார்கள். எல்லாக் குடியானவர்களும் இந்தச் செயற்கை உரங்களை உபயோகிக்கிறார்கள். (நிலத்துக்குப் போடும் அளவு மட்டும் சிறிது சிறிது வித்தியாசப்படும்.) இந்தச் செயற்கை உரங்களைப் போடுவதற்குமுன் 2,000 முதல் 3,000 ராத்தல் வரை இயற்கை வளம் தரும் இந்திரியச் சத்து (ஆர்கானிக்) எருக்களைப் போடுகிறார்கள்.

(2) நெல் சாகுபடியாகும் என்பது லட்சம் ஏக்கரிலும் பயிர்களை வரிசை வரிசையாகவே நடுகிறார்கள். ஒரு வரிசைக்கும் மற்றொரு வரிசைக்கும் உள்ள இடை வெளியும் ஒரே வரிசையில் ஒரு பயிருக்கும் மற்றொரு பயிருக்கும் இடையில் உள்ள இடை வெளியும், அங்கங்குள்ள நிலைமைக்குத் தகுந்தபடி மாறுபடும். பொதுவாக 10 அங்குல நீளமும் 6 அங்குல அகலமும் உள்ள இடை வெளி இருக்கும்படி நடுவார்கள். வரிசையாக நடவு செய்யும் பலவிதக் கருவிகளின் உதவியால் இந்த முறையைச் சுலபமாகக் கையாளுகிறார்கள்.

(3) நடவான 15-ஆம் நாள் முதல் களை எடுப்பார்கள். அதன் பிறகு 15 நாட்களுக்கு ஒரு முறையாக மூன்று முறை 'ரோட்டரி இன்டர் கல்டிவேட்டர்' என்ற சுழலும் இடை உழவுக் கருவியால் வயலை நன்றாக உழுது விடுவார்கள். பயிர்கள் வரிசை வரிசையாக இருப்பதால் சேதமாவதில்லை.

(4) பயிர்களைத் தாக்கும் பூச்சிகளையும் நோய்களையும் பரவவிடாமல் சரியான காலத்தில் தடுப்பு முறைகளைக் கையாண்டு கட்டுப்படுத்துகிறார்கள். இவற்றில் எல்லாக் குடியானவர்களும் ஒன்று போல ஒத்துழைத்து நோய்நொடிகளைக் கட்டுப்படுத்துகிறார்கள்.

செயலும் படிப்பும்

அயல் நாட்டுக்கெல்லாம் போய்ச் சண்டை செய்துவிட்டு வந்த வாலிப ஸோல்ஜர் ஒருவன் காலேஜிலே சேர்ந்து படிக்க வந்தான்.

"யுத்தத்திலே நீ கற்ற மிக முக்கியமான படிப்பினை என்ன?" என்று ஒரு ப்ரொஃபஸர் அவனைக் கேட்டார்.

மாஜி ஸோல்ஜர் பல்லை இளித்துக்கொண்டே, "அதுவா? அது இதுதான்: சரித்திரத்தைச் சிருஷ்டிப்பதைவிட, அதைப் படிப்பது பரம சுலபம் என்பதுதான்" என்றான்.

—'ஜோக்கர்', கோப்பன்ஹேகன்

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிருர். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

மதுரம், சென்னை:

கேள்வி: என் குழந்தைக்கு வயது மூன்ருயிற்று. இன்னமும் விரல் சூப்புகிறது. இதைத் தடுப்பது எப்படி?

விடை: விரல் சூப்புவது சிறு குழந்தைக்கு இயல்பாயுள்ள குணம். அதனுல் குழந்தைக்கு ஒரு வகைத் திருப்தி ஏற்படுகிறது.

இரண்டுவயது வரை விரல் சூப்பிக் கொண்டிருந்த பிறகு குழந்தை அந்தப் பழக்கத்தைத் தானே விட்டுவிடும்.

பாலூட்டும்போது அவசரமில்லாமல் மெதுவாய் ஊட்ட வேண்டும். தாய்ப்பால் நின்ற பிறகும் புட்டியில் ரப்பர் வைத்து மெதுவாய் ஊட்டினுல், விரல் சூப்பும் பழக்கம் நின்றுவிடலாம். விளையாட்டுச் சாமான்களும் விளையாட வேறு குழந்தைகளும் இருந்தால் விரல் சூப்புவது பழக்கமாகாது. பலாத்காரமாய் இந்தப் பழக்கத்தை நிறுத்த முயல்வது வீண்.

பானு, சென்னை:

கே: பெண்கள் முன்காலத்தில் புல்லாக்கு அணிந்து வந்ததற்குச் சுகாதாரரீதியான காரணம் ஏதாவது உண்டா?

வி: புல்லாக்கை இந்தக் காலத்திலும் அநேகம் பெண்கள் அணிந்து வருகிருர்கள். சில வெள்ளைக்காரப் பெண்களும் புல்லாக்கு அணிந்து கொண்டு எப்படியிருக்குமென்று பார்த்துக்கொள்கிருர்கள்.

இதற்குச் சுகாதார ஆதாரம் ஒன்றையும் நான் அறியேன். ஒருவகையில் இந்த அலங்காரம் அழகாய்த்தான் இருக்கிறது. ஒரு பெண்ணுக்குப் புல்லாக்கு, மூக்குப் பொட்டு, பேஸரி எல்லாம் சரியானபடி அமைந்தால் அவளுடைய இயல்பான அழகைச்

சற்றுத் தூக்கலாகவே காட்டும் என்றுகூடச் சொல்லலாம்.

எஸ். ஏ. மூர்த்தி, சூரமங்கலம்:

கே: 'ப்லாஞ்சட்' என்கிறார்களே, அதன் சூட்சுமம் என்ன?

வி: 'ப்லாஞ்சட்' என்ற கருவி ஐரோப்பிய நாட்டிலிருந்து வந்தது. அதன்மேல் கைவைத்து அசைக்கும்போது, கையில் வைத்திருக்கும் பென்சில் எழுதலாம்.



எழுதுபவருடைய எண்ணத்துக்கு உள்ளம் விரும்புவதுபோல், அல்லது உள்ளம் அச்சப்படுவது போல் விடை கிடைக்கலாம். சில 'ப்லாஞ்சட்'டுகளில் ஆங்கில எழுத்துக்களே இருக்கும். 'ப்லாஞ்சட்'டில் ஒரு பகுதி எழுத்து எதிரேயிருந்து நகரலாம். அந்த எழுத்துக்களைக் கூட்டி வாசிக்கும்போது, நம் கேள்விகளுக்கு விடை நம் இச்சைப்படி அல்லது அச்சப்படி உருவாகும். இதுதான் என் அபிப்பிராயம். ரொம்ப நம்பிக்கை வைக்கிறவர்கள், அதற்கு ஆவிச்சக்தியிருப்பதாயும் நம்புவார்கள்.

கே. ஏ. கிருஷ்ணமூர்த்தி, மங்கலபுரம்:

கே: 'இயசினொஃபிலியா' என்னும் நோய் அடியோடு தீராமல் அடிக்கடி திரும்பித் தோன்றுவதற்குக் காரணம் என்ன?

வி: இந்த நோய்க்குப் பரிகாரம் இருக்கிறது. பெரும்பாலோருக்குத் தக்க வைத்தியம் செய்வதால் வியாதி முற்றும் தீர்ந்துவிடுகிறது. சிலருக்குத் திரும்பத் திரும்பத் தோன்றலாம். என் அநுபவத்தில், சற்று நீடித்து வைத்தியம் செய்தால், வியாதி முற்றும் நீங்கி விடுகிறது.

செல்வநாயகம், சென்னை:

கே: நெஞ்சு வலிக்கிறது. சாப்பிட்டபின் ஏப்பம் வருகிறது. இந்த நிலைகளுக்குக் காரணமும் பரிகாரமும் வேண்டும்.

வி: ஏப்பம் விடுவதோடு நெஞ்சு வலி உண்டாவது அஜீரணத்தின் அறிகுறி. அஜீரணத்துக்குக் காரணம் கண்டு பிடித்துப் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். இதுபற்றி வைத்தியரிடம் நேரில் கேட்டுக்கொள்வது நலம்.

வேங்கடாசலம், சென்னை:

கே: உடம்பில் பல பாகத்தில் முள்ளு முள்ளாகக் கடுகளவு சொறிகள் தோன்றின. ஜெனரல் ஆஸ்பத்திரியில் இவற்றை 'வார்ட்ஸ்' என்று சொல்லிச் சுட்டு நீக்கிவிட்டார்கள். ஆனால் மேலும் சில இடங்களில் இப்போது இவை திரும்பவும் தோன்றியிருக்கின்றன. இவற்றுக்கு வேறு பரிகாரம் இருக்கிறதா?

வி: 'வார்ட்ஸ்' நீங்க, சுடுவது ஒருவகைப் பரிகாரம். ரசாயன மருந்து இட்டும் குணப்படுத்தலாம். உடம்பில் வைட்டமின் 'ஏ' குறைவாயிருந்தாலும் இந்த மாதிரி ஏற்படலாம். வைத்தியரை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஹேமாவதி, வந்தவாசி:

கே: மணமான பின்பு அதற்கு முன்னே இருந்ததை விட ஒருத்திக்கு உடல் இளைப்பதற்கும் மாதவிடாய் அதிகமாவதற்கும் கார

ணம் என்ன? மணமாகி நான்கு வருஷங்களாயின. ஒரு தடவை நான்கு மாதக் கரு சிதைந்து போயிற்று.

வி: உடல் இளைப்பது, மாத விடாய் அதிகமாவது, அசதி இவையெல்லாம் கவனித்துச் சிகிச்சைசெய்துகொள்ள வேண்டிய நிலைகள். வைத்தியரிடம் நேரில் சென்று பரிசோதனை செய்து கொண்டு சிகிச்சை செய்துகொள்ள வேண்டும்.

லட்சுமி, கடலூர்:

கே: என் ஆறு வயதுக் குழந்தை டாக்டரிடம் போவ தென்றால் பயப்படுகிறான். அவனுக்கு வைத்தியம் செய்வது வெகு கஷ்டமாயிருக்கிறது.

வி: நம் வீடுகளில் குழந்தைகளை வசப்படுத்த, "டாக்டரைக் கொண்டு ஊசி குத்தச் சொல்லட்டுமா?" என்று சொல்வதை நான் எவ்வளவோ தடவை பார்த்திருக்கிறேன். இப்படி டாக்டரைப்

பூச்சாண்டியாக்கிவிட்டால் 'டாக்டர்' என்ற பெயரைச் சொன்னாலே குழந்தைகள் பயப்படும். இது முதியோருக்கு வேடிக்கையாயிருக்கலாம்; ஆனால் குழந்தைக்கு இது பெரும் வேதனையாகும். குழந்தைக்கு வைத்தியம் செய்வதற்குத் தனி அநுபவமும் திறமையும் வேண்டும். வைத்தியர் நடந்துகொள்வதைக் கண்டு, குழந்தை பயமில்லாமல் அவரை நம்பி அருகில் வரலாம். வீட்டுக்கு வழக்கமான வைத்தியரென்றால், முன்னதாகவே குழந்தைகளிடம் இதமாய்ப் பேசியும் வேறு விதத்திலும் பழகிக் கொள்வார். அப்போது குழந்தைக்கு டாக்டரிடம் பயம் போய் விடும்.

நடராஜன், மதுரை:

கே: மலச் சிக்கலால் வருந்தும் ஒருவர், தாம் இருக்கும் ஊரை விட்டு வேறோர் ஊருக்குச் சென்றால் மலச் சிக்கல் தானே நீங்குகிறது. மலச் சிக்கல் இல்லாத வேறொருவர் அவ்வூருக்குச் சென்றால் அவருக்கு மலச் சிக்கல் ஏற்படுகிறது. இது ஏன்?

வி: உடல் உறுப்புக்கள், சூழ்நிலைக்கு இசைந்து வேலை செய்யும். உஷ்ணமான ஊரில் தசைகள் தளர்ந்து போகும். அதனால் குடல் தசைகள் தளர்ந்து போகும்; மலத்தை அழுத்த இயலாமல் மலச் சிக்கல் ஏற்படும். வாயுமண்டலத்தில் ஈரம் அதிகம் இருந்தால் பெருங் குடல், உணவிலிருந்து அதிக ஈரம் வாங்கிக் கொள்ளாது. அதனால் மலம் இளகியிருக்கும்; கஷ்டமில்லாமல் வெளியாகும்.

நாட்டுப் புறத்தில் திறந்த வெளியில் மலங் கழிக்கும் பழக்கமுள்ளவர்கள் நகரங்களுக்கு வந்து பம்பாய்க் கக்கூசில் உட்காரும்போது, உள்ள நிலையால் மலச் சிக்கல் ஏற்படலாம். இது போலவே நகரவாசிகள் நாட்டுப்புறம் செல்லும்போதும் மலச் சிக்கலுக்கு ஆளாகலாம்.

தன் குற்றம் தனக்குத் தெரியாது

★

பிறரைக் குறை கூறுகிறவர்கள், அப்போது தங்களையே சோதித்துப் பார்த்துக்கொள்வது நலம். அதுதான் 'தாழ்மை மனப்பான்மை' என்ற மன நோய் பிடிக்காதிருக்க வழி. இதை விளக்கும் இந்தக் கட்டுரைக்கு ஆதாரம் 'யுவர் லைஃப்' என்ற பத்திரிகையில் உள்ள ஒரு விவரம்.

இன்று நேற்றல்ல; யுகக்கணக்காகப் பிறத்தியார் மேல் குற்றங் காணும் சுபாவம், சர்வ சகஜமாக மனிதர்களுக்கு உண்டு. இதைப்பற்றி ஆராய்ந்த லூவி. ஈ. பிஷ் என்ற அமெரிக்க டாக்டர் சில ரசமான தகவல்களைத் தெரிவித்திருக்கிறார்.

ஒரு சமயம் இளம் பெண் ஒருத்தி அவரிடம் வந்தாள். "அப்பா இறந்துபோன பிற்பாடு நானும் அம்மாவும் மட்டுந்தான் வீட்டில் இருக்கிறோம். வரவர அவள் எதற்கெடுத்தாலும் என்னிடம் குற்றங் கண்டுபிடிக்கிறாள். அதற்கு முன் இரண்டு பேரும் அந்நியோந்நியமாகவும் சந்தோஷமாகவும் இருந்து வந்தோம். இப்போது அடியோடு மாறிவிட்டாள். நான் சமைக்கும்போதும் வீட்டைச் சுத்தம் செய்யும்போதும் படுக்கை போடும்போதும் எப்போது பார்த்தாலும் ஏதாவது முணுமுணுத்துக் கொண்டேயிருக்கிறாள். வெளியே நாலு பேரோடு பழகவும் விடமாட்டேனென்கிறாள். வீட்டுக்குள்ளே இருந்தாலும், 'சும்மா இங்கேயே உட்கார்ந்திருந்தாயானால் நீ உருப்பட்டாற்போலத்தான். நாலு இடத்தில் போனால்தானே இப்படி ஒரு பெண் இருக்கிறாள் என்று பார்ப்பவர்களுக்குத் தெரியும். இப்படியே இருந்தால் உனக்குக் கல்யாணம் ஆனாற்போலத்தான்' என்கிறாள். நான் ஒன்றைச் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி; ஆபத்துத்தான்!" என்று சொன்னாள். இதற்கு இரண்டொரு நாளைக்கு முன்னால்தான் அந்த டாக்டர் ஒரு சினிமாவைப் பார்த்திருந்தார். இந்தமாதிரி சுபாவமுள்ள தாயையும் பெண்ணையும்பற்றிய கதை அது.

"உன் தாயார் சினிமா பார்ப்பதுண்டா?" என்று அந்தப் பெண்ணை டாக்டர் கேட்டார்.

"ஓ! உண்டு. நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்தே போவது வழக்கம்" என்றாள் அவள்.

தாம் பார்த்த அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு வரும்படி அவளிடம் சொல்லி, கூடவே அவள் தாயாரையும் அழைத்துப் போகச் சொன்னார். "முன்னால் கதை இப்படி இருக்குமென்று உன் தாயாரிடம் சொல்லிவிடாதே, ஜாக்கிரதை! அவளே நேரில் இதைப் பார்த்த பிற்பாடு ஏதாவது பலன் ஏற்பட

லாம். அப்புறம் என்ன நடந்தாலும் சரி, உடனே விஷயத்தை எனக்கு எட்ட விடு" என்றார்.

ஒரு வாரம் கழித்து அந்தப் பெண் அவரை டெலிஃபோனில் கூப்பிட்டு, "அம்மாவுக்குப் படம் ரொம்பப் பிடித்திருந்தது. 'இந்த மாதிரி ஒரு தாயார் தன் சொந்தப் பெண்ணையே படுத்திவைத்ததை நான் பார்க்கவில்லையடியம்மா! கொஞ்சங்கூட இரக்கமில்லையே அவளுக்கு!' என்றாள். ஆனால் தானும் இப்படித்தானே என்று அவள் புரிந்துகொள்ளவில்லை. அதுதானே சங்கடம்!" என்றாள்.

ஆமாம்; விஷயம் அதுதான். திரும்பத் திரும்பப் பிறத்தியார் குற்றந்தான் நம் கண்ணில் படுகிறது; நாமும் அதே மாதிரிதான். என்னதான் பார்த்தும் கேட்டும் அநுபவப்பட்டாலும் நமக்கு இது புரிவதில்லை!

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குடும்பத்திலும் இப்படி நடப்பது சர்வசகஜம். வெகு சுலபமாகப் பிறத்தியாருடைய குற்றங்குறைகளை அலசி ஆராய்வோம். ஆனால் நம் குறைகளையும் அதே மாதிரி அலசிப் பார்ப்பதென்றால் என்னவோ கஷ்டமாக இருக்கிறது!

குற்றங்குறை இராதவர்களே உலகத்தில் இல்லை. என்னதான் இருந்தாலும் சரி, எல்லாருமே ஏதாவது தவறு செய்யாமல் இருக்க மாட்டார்கள். ஆனாலும் நாமே ஆழ்ந்து யோசித்தோமானால் நம் குணம் திருந்தலாம். நமக்குள்ளேயே, 'இப்படி நம்மிடத்திலும் குறை இருக்கிறதோ என்னவோ? இனிமேலாவது கவனிக்க வேண்டும்' என்று உறுதி கொள்ள வேண்டும்.

ஸ்ரீமான்— அன்றாடம் வேலைக்குப் போகிறார். ஏதோ ரெயில் பாலத்தின்கீழ்க் குறுகிய வழியில் கும்பலிலே நசுங்கிக்கொண்டும் இடிபட்டுக்கொண்டும் போகவேண்டியிருக்கிறது. அப்போது அவர் தம் அருகில் இருப்பவர்களைப் பார்த்து முணுமுணுத்தபடி திட்டிக் கொண்டேயிருக்கிறார். ஆனால் இப்படி ஒருவரை ஒருவர் நெட்டிப் பிடித்துத் தள்ளிக்கொண்டு போவதற்குத் தாமும் பொறுப்பாளிதான், இந்தமாதிரி ஒழுங்கற்று நடந்துகொள்ளும் கும்பலில் தாமும் ஒருவர்தான் என்பதைப் பற்றித் துளியாவது அவர் யோசித்துப் பார்க்கிறாரோ? அதுதான் இல்லை.

ஸ்ரீமதி— மொத்தத்தில் நல்ல மனுஷிதான்; ஆய்ந்தோய்ந்து பார்க்கும் சுபாவமுள்ளவள். ஆனால் ஜவுளிக்கடைக்குப் போய்த் துணிமணிகளை வாங்கும்போது, 'கடைச் சிப்பந்தி நாம் கேட்கிற கேள்விக்கெல்லாம் அவ்வளவாகச் சிரத்தையோடு பதில் சொல்வதில்லை. நம் இஷ்டப்படியும் துணிமணிகளைக் காட்டுவதில்லை' என்று எரிச்சல் எரிச்சலாக வருகிறது அவளுக்கு; 'இவனுக்கு மட்டுமரியாதை தெரியவில்லை' என்றுகூடக் கடைக்காரரிடம் புகார் செய்யுமளவுக்குச் சில சமயம் அவ்வளவு கோபம் அவளுக்கு வந்துவிடுகிறது.

குமாரி— மிகவும் நாகரிகமான யுவதி. அவளுக்குத் தெரிந்த ஒரு வாலிபன் குறித்த நேரத்தில் வரவில்லை; சற்றுத் தாமதித்து வருகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். வந்ததும் வராததுமாக அவன் மேல் சீறிவிழுகிறாள். இந்தமாதிரி தன்னை அவன் 'அவமதித்தது' அவளுக்குச் சகிக்கவில்லை! "இந்த

ஆண்களுக்கேளென்னவோ தாங்கள் தான் பிரமாதம் என்று எண்ணம்! மற்றப் பெண்களைப் போல என்னை யும் கிள்ளுக்கீரை என்று எண்ணி விட்டாய்போல் இருக்கிறது!'' என்று அவன்மேல் பாய்கிறாள்.

இப்படித்தான் பொதுவாக ஒவ்வொருவரும்-ஒரு புருஷன்,குடும்பஸ்திரீ, மணமாகாத பெண் யாராக இருந்தாலும் சரி - பிறத்தியார் மேல் குற்றங் குறை சொல்லுகிறார்கள். இந்தமாதிரி இன்னும் எத்தனையோ உதாரணங்கள் சொல்லலாம். இன்னும் கேட்டால் நம்மையேகூட இந்தக் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

இவர்களுக்கு இந்தமாதிரி எரிச்சல் ஏற்படுவதற்குக் காரணம் ஏதாவது உண்டா என்று பார்க்கலாம். ஸ்ரீமான்— முந்திய நாள் இரவு நன்றாகத் தூங்கியிருக்கமாட்டார். குடும்பஸ்தராக இருந்தால் குழந்தை தூங்கவொட்டாமல் தொந்தரவு கொடுத்திருக்கும்; அந்தச் சோர்வு காரணமாக எதைக் கண்டாலும் எரிச்சல் ஏற்பட்டிருக்கலாம். இல்லாவிட்டால் முந்தியே எங்காவது நண்பர்கள் வீட்டில் குடித்துவிட்டுக் கொம்மாளம் அடித்திருக்கலாம். பணத் தட்டோ, மனைவிக்கு ஜுரமோ காரணமாக இருக்கலாம். அல்லது அவள் ஏதாவது வாங்கித் தரச் சொல்லியிருப்பாள்; ஆபீஸில் வேலை செய்யும்போது ஏதாவது தவறு நேர்ந்திருக்கலாம்; கொஞ்ச நாளாக அஜீர்ணக்கோளாறு இருக்கலாம்; இதனால் மனக்கவலை ஏற்பட்டிருக்கும். இப்படி ஏதாவது ஒரு காரணத்தால் அன்று காலை எழுந்திருக்கும்போதே வழக்கத்தைவிடச் சற்றே எரிச்சல் அதிகமாக இருந்திருக்கும்.

ஸ்ரீமதி—க்கு எரிச்சல் வருவதற்குப் பல காரணம் உண்டு. அவள் பட்டணத்துக்கு வெளியே எங்கோ ஓர் ஊரில் வசிப்பவள். ரெயிலேறிப் போய்ச் சாமான்களை வாங்கி வந்து ஊர் திரும்பி ராத்திரிக்குச் சமையல் செய்தாக வேண்டும். அதோடு இன்னொரு முக்கியமான விஷயம்: அடிக்கடி பட்டணம் போய்ப் பெரிய கடைகளில் சாமான் வாங்கிப் பழக்கம் இல்லை. ஏதோ வருகிற கொஞ்சம் பணத்தைக் கொண்டு சிக்கனமாகக் குடித்தனம் நடத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, முன் ஜாக்கிரதையாக யோசித்துத் தான் இன்னது வாங்கலாம் என்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

குமாரி—க்கு இன்னும் 20 வயது கூட ஆகவில்லை. உலகமே தன் ஆணைக்கு அடங்கி நடக்க வேண்டும் என்பது அவள் எண்ணம். ஆனால் அது நடக்காது என்பதை அவள் இன்னும் அநுபவ மூலம் தெரிந்துகொள்ளவில்லை. வீட்டில் அவள் பெற்றோர் அவளைப் பிரமாதமாகக் கொண்டாடுகிறார்கள்; அவள் இஷ்டம் போல் எல்லாம் நடக்கிறது. ஆண்களோடு அதிகமாகப் பழகாததால் அவர்கள் சுபாவத்தைப்பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. இதனால், தான் ஏதோ விசேஷப் பிறவி என்றும், ஆகவே மற்றவர்கள் தன்னிடம் மட்டு மரியாதையோடு நடந்துகொள்ள வேண்டும் என்றும் எண்ணுகிறாள்.

இப்படி அவளைக் காக்க வைத்த அந்த வாலிபனுக்கும், பாவம், எத்தனையோ தொல்லைகள். சங்கடம் என்னவென்றால், எதிர்பாராதபடி சில நாள் அவன் அதிக நேரம் ஆபீஸில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது; முடியாதென்றால், 'கல்தா'

கொடுத்துவிடுவார்கள். ஆனால் குமாரி— இதையெல்லாம் காதில் வாங்கிக் கொண்டால்தானே! பிறத்தியார் தன்னை மட்டு மரியாதையோடு நடத்தவேண்டுமென்பது ஒன்றையே விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறாள்.

இப்படி எல்லாருக்குமே ஒவ்வொரு விதத்தில் எரிச்சல் மூளக் காரணம் இருக்கத்தான் இருக்கிறது. இவர்களில் யாருமே அப்படி ஒன்றும் மோசமானவர்கள் அல்ல. இவர்கள் சொல்வதில் உண்மை இராமற் போகவில்லை. நாமே அந்த நிலையில் இருந்தாலும் இவர்களைப் போலவே, 'நாம் செய்வது சரிதான்' என்றே எண்ணுவோம். மற்றவர்களுக்குத் தப்பாகப் படுமே என்று துளிக்கூட எண்ணமாட்டோம்; அது நிச்சயம்.

ஆகவே, இந்த எரிச்சலுக்கு ஏதாவது காரணம் இருக்கும் என்று தெரிந்துகொள்ளவேண்டும். இக்த மாதிரி சந்தர்ப்பங்களில் ஒருவரைக் கவனித்துவிட்டு அவருடைய சுபாவத்தைப்பற்றி முடிவு கட்டி, அவரைக் குறை கூறி நாம் பெருமை பாராட்டிக்கொள்வது தவறு.

ஏதாவது நாடகமோ, சினிமாவோ பார்க்கும்போதும், கதை அல்லது நாவல் படிக்கும்போதும் கதாநாயகனோடு நாமும் ஒன்றிப் போய்விடுவது சகஜம். கைதேர்ந்த கதாசிரியர் எவராக இருந்தாலும் சரி, பொதுவாக இப்படி ஜன ரஞ்சகமான முக்கிய பாத்திரம் ஒன்றைத் தம் கதையில் சிருஷ்டிக்காமல் இருக்கவே மாட்டார்.

இப்படித் தம் குணங்களைக் கொண்ட கதாநாயகனையும் கதாநாயகியையும் படத்தில் பார்க்க வேண்டுமென்பதுதான் எப்போதும் பொதுமக்களின் விருப்பம்; அப்போதுதான் அவர்கள் ரசிக்க முடிகிறது. பரபரப்பூட்டும் சம்பவங்கள், காதல் இவையும் அவர்கள் மனத்தைக் கவரும் என்றாலும், தங்களைப் போலவே வாழ்க்கையில் கதாநாயகனும் கதாநாயகியும் கஷ்ட நஷ்டம் துன்பமெல்லாம் அநுபவித்து அவைகளிலிருந்து மீண்டு முன்னுக்கு வருவதைப் பார்க்க அவர்களுக்கு ஆவலாக இருக்கிறது.

மொத்தத்தில் பார்த்தால், உலகத்தில் எதற்கெடுத்தாலும் முணுமுணுக்கும் பேர்வழிகள்தான் பெரும்பாலும் இந்தமாதிரி பிறத்தியாரைக் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக ஆபீஸ், தொழிற்சாலை, கடைகண்ணியில் வேலைபார்க்கும் ஆண்கள் எதற்கும் முணுமுணுப்பது சகஜம்; என்றாலும், பெண்கள்தான் இந்த விஷயத்தில் மகா மோசமாக நடந்துகொள்கிறார்கள்.

புருஷனைக் குறை கூறுவது ஒன்றோடு நின்றால் தேவலையே! "ஏன் நடையைப் பெருக்கவில்லை?", "உள்ளே ஆணி அடிக்கச் சொன்னேனே, ஏன் அடிக்கவில்லை?", "அந்தக் கதவில் கீல் சரியாக இல்லையே; முடுக்கி வைக்கிறது தானே!", "அந்தக் கடையில் சாமான் வாங்கினாயே; பில் அதிகமாகப் போட்டு வாங்கிவிட்டானே; அதைக் காட்டி மீதித் தொகையை வாங்கி வரச் சொன்னேனே; போனாயா?" என்றெல்லாம் வேலைக்காரரைத் தொளைத்தெடுத்துவிடுவாள். ருஷியாவைப் பற்றியோ அணுக்குண்டைப் பற்றியோ, யுத்தம் வருமா வராதா என்பதைப்பற்றியோ, அண்டை அயல் வீட்டில் குழந்தைகள்

போடும் இரைச்சலைப்பற்றியோ, பால்காரனுடைய மண்டைக்கர்வம் பற்றியோ, இப்போது ஆளும் கட்சியார் வாஸ்தவமாகவே வரியைக் குறைப்பார்களா என்பதைப் பற்றியோ சதா தொணதொண வென்று பேசிக்கொண்டிருப்பவர்களும் இந்த ரகத்தைச்சேர்ந்தவர்கள் தான்.

இதனால் என்ன பலன் என்று கேட்டால், ஒன்றுமில்லை! இப்படி ஒன்றும் இராததால்தான் இந்தத் தொண தொணப்பு எரிச்சலை மூட்டுகிறது. மொத்தத்தில் இப்படித் தொண தொணக்கும் பேர்வழிகளும், தங்கள் குற்றம் தெரியாமல் பிறரிடம் குற்றங் குறை கண்டு பிடிப்பவர்களும், தாங்கள் அறிந்தோ அறியாமலோ தாழ்மை மனப்பான்மை(இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ்) உடையவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். அது எப்படி இருந்தாலும் சரி, இப்படிப் பிறரிடம் குற்றம் கண்டு பிடிப்பவர்கள் தாங்கள் ஏதோ மற்றவர்களை விட உத்தமமானவர்கள் என்று எண்ணிக்கொண்டால்தான் இவர்களுக்கு மன அமைதி ஏற்படுகிறது. மனிதனுடைய குறைபாடுகளைப் பற்றி இவர்களுக்கு ஒன்றும் தெரியாது.

என்னதான் சொன்னாலும் சரி, தாங்களும் நம்மை யெல்லாம் போல் குறைபாடும் பலவீனமும் உள்ளவர்கள்தான் என்பதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அப்படி ஒப்புக்கொண்டால்தான், மற்றவரையெல்லாம் குறை கூற முடியாமல் போய்விடுமே!

ஆனால், தன் குற்றம் அறியாமல் பிறரைத் தூற்றுகிற எல்லாருமே தாழ்மை மனப் பிராந்தி கொண்டவர்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆயினும் ஒன்று முக்கியமாகக் கவனிக்கவேண்டும்: யார் மேலாவது நாம் குற்றங்குறை சொல்வதற்கு முன் நம்மையே நாம், 'இந்தமாதிரி குற்றம் நாமும் செய்கிறோமா?' என்று உள்ளூற யோசித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். நேர்மையாகச் சிந்தனை செய்யவும் நேர்மையாக வாழவும் இது பெரிதும் துணை புரியும்.

கிழவியின் பல்

கிழவியின் வியாதி என்னவென்றே புரியவில்லை டாக்டருக்கு. அவளையே விசாரிக்கத் தொடங்கினர்.

டாக்டர்: தலை வலிக்கிறதா?

கிழவி: ஆம்.

டாக்: உடம்பு நடுக்குகிறதா?

கிழ: ஆம்.

டாக்: இரவிலே பல் நறநறவென்று கடித்துக் கொள்கிறதா?

கிழ: இல்லை; அதெப்படிச் சாத்தியம்?

டாக்: ஏன் சாத்தியம் இல்லை?

கிழ: அதைத்தான் எடுத்து, நான் தூங்கப் போகு முன் டம்ளரில் போட்டு விடுகிறேனே!

—'ஃபிகாரோ லிட்டரேர்', பாரிஸ்.

சதுரங்கம்

எட்வர்டு லஸ்கர்

1894 முதல் 1921-வரைக்கும் உலக சாம்பியனாக இருந்த எம்மானுவேல் லஸ்கர் அல்ல இவர். ஆனால், இவரும் பிரபல சதுரங்க ஆட்டக்காரர் தான். ரஸமாக இவர் சதுரங்க ஆட்டம்பற்றி எழுதியுள்ள ஒரு புஸ்தகத்திலிருந்து எடுத்த ஒரு பகுதி.

சதுரங்க விளையாட்டு எப்போது எப்படித் தோன்றியது? இதுபற்றி விசித்திரமான பல கதைகள் உண்டு. ஒரு கதையை மட்டும் சரித்திராசிரியர்கள் விடாமல் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். ஆகவே, அதில் கொஞ்சம் உண்மைஇருக்கக்கூடும். பல்ஹேட் (Balhait) என்ற இந்திய ராஜாவின் தர்பாரில் இருந்த ஸிஸ்ஸா (Sissa) என்ற பிராம்மணரே சதுரங்க விளையாட்டைக் கண்டுபிடித்தாராம். இதுதான் அந்தக் கதை. புத்தி சாதுரியம், மன ஊக்கம், தீர்க்க திருஷ்டி, விஷயஞானம் இவைகளுக்கு வெற்றி தரக்கூடிய ஒரு விளையாட்டைக் கண்டுபிடிக்கும்படி ராஜா சொன்னாராம். எல்லாம் தலைவிதிப்படியே நடக்கும் என்று நம்பத் தூண்டும் சொக்கட்டான் ஆட்டத்துக்கு மாற்றாகவே இப்படி ஒன்று வேண்டும் என்றாராம்.

சதுரங்கக் கட்டம் போட்ட பலகை ஒன்றையும் காய்களையும் ராஜாவிடம் அந்தப் பிராம்மண ஞானி கொண்டுவந்தார். இந்தியச் சேனையில் உள்ள தேர், யானை, குதிரை, காலாள் இந்தப் படைகளும் இவைகளுக்குத் தலைமை வகித்து நடத்தும் ராஜாவும் மந்திரியுந்தான் காய்கள். தம் விளையாட்டுக்கு யுத்தத்தையே உதாரணமாகக் கொண்டதாகப் பிராம்மணர் சொன்னார். தீர்மானம், விறுவிறுப்பு, மன நிதானம், தீர்க்காலோசனை, தீரம் இவைகளையெல்லாம் பயிலக் கூடிய சிறந்த கலாசாலை யுத்தந்தானே?

ராஜா பல்ஹேட் இந்த ஆட்டத்தைப்பற்றிக் கேட்டதும் ஆனந்தம் அடைந்தார். கோயில்களிலெல்லாம் இதை வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்று உத்தரவிட்டார். சதுரங்கமே நீதிக்கு அஸ்திவாரம், யுத்தக் கலைக்குச் சிறந்த பயிற்சி என்றெல்லாம் ராஜா நினைத்ததுதான் இதற்குக் காரணம்.

"உமக்கு இஷ்டமான பரிசைக் கேளும்; தருகிறேன்" என்று அந்தப் பிராம்மணருக்கு ராஜா வாக்களித்தார்.

பிராம்மணரோ சிறந்த ஞானி. ஆகவே, "நான் கண்டுபிடித்த இந்த விளையாட்டால், பலர் ஆனந்தமடைவார்கள். அதுவே நான் அடையும் சிறந்த பரிசு. வேறு பரிசு எனக்கெதற்கு?" என்றார்.

இருந்தாலும் ராஜா விடவில்லை. ஏதாவது பரிசு கேட்கும்படி வற்புறுத்தினார்.

"அப்படியானால், இந்தச் சதுரங்கப் பலகை நிறைய நெல்

கொடுங்கள். முதல் கட்டத்தில் ஒரு நெல்; இரண்டாவதில் இரண்டு நெல்; மூன்றாவதில் நாலு; நாலாவதில் அதைப்போல் இரண்டு மடங்கு; மேலே இப்படியே ஒவ்வொரு கட்டத்துக்கும் இரண்டு மடங்கு ஆக்கிக் கொண்டே போய் அத்தனை கட்டங்களுக்கும் கொடுத்து விடுங்கள்'' என்றார் பிராம்மணர்.

இந்த அற்பத்தையா பரிசு கேட்பது என்று ராஜா நினைத்து விட்டார். வேறு ஏதாவது நல்ல பரிசாகக் கேட்கும்படி மறுபடியும் சொன்னார்.

பிராம்மணர் விஷமப் புன்சிரிப்புடன், ''எனக்கு இதற்குமேல் ஒன்றும் தேவையில்லை. உலக வாழ்க்கைக்குத் தேவையான இந்தச் சொற்பப் பொருள் கிடைத்தால் போதும்'' என்றார்.

அப்படியானால் சரி என்று, ''நெல்லைக்கொண்டு வா'' என்று ஏவலாளுக்கு ராஜா கட்டளையிட்டார். பிராம்மணர் சொன்னபடி நெல்லைக் கணக்கிட்டுக் கொண்டே வந்தார்கள். முப்பதாவது கட்டத்துக்கு வருவதற்குள், இந்தியாவில் உள்ள அத்தனை நெல்லும் காலியாகி விட்டது. ராஜா கவலை தேங்கிய முகத்துடன் பிராம்மணரைப் பார்த்தார். பிராம்மணர் சிரித்துக்கொண்டே, ''நான் கேட்ட பரிசு ஒரு நாளும் எனக்குக் கிடைக்காது என்று தெரியும். ஏனென்றால், உலகம் முழுவதும் ஒன்பது அங்குல உயரம் நெல்லைக் கொட்ட எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு ஆகும் நான் கேட்ட நெல்'' என்றார்.

இந்தியாவிலிருந்து மேற்கே பாரசிகம், அரேபியா இரண்டு நாடுகளுக்கும் அவைகளிலிருந்து ஐரோப்பாக் கண்டத்துக்கும் சதுரங்கம் பரவியது. தவிர, இந்தியாவுக்குக் கிழக்கே உள்ள அத்தனை நாடுகளுக்கும் அது பரவிவிட்டது. ஆனால், கிழக்கு நாடுகள் சிலவற்றில் அசல் இந்திய விளையாட்டின் உருவம் அடியோடு திரிந்திருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளுக்குச் சதுரங்கத்தைக் கொண்டு சென்றவர்கள் வட ஆப்பிரிக்க முஸ்லிம்களே. மூர் ஜாதியாரிடமிருந்து ஸ்பெயின் நாடும், ஸாரஸென் ஜாதியாரிடமிருந்து இதாலி நாடும் ஒன்பதாம் நூற்றாண்டு வாக்கில் சதுரங்கத்தைப் பெற்றன.

வீரம், காதல் இவைகளைப் பொருளாகக் கொண்ட இடைக்கால இலக்கியங்களைப் பார்த்தால் ஒரு விஷயம் புலனாகிறது. உயர்ந்த அந்தஸ்து வாய்ந்த எவரும் அப்போது சதுரங்கம் ஆடக் கற்றிருந்தார். 'நைட்' (குதிரை வீரர்) ஒருவர் ஒரு சீமாட்டியுடன் சதுரங்கம் ஆட விரும்பினால், அவளுடைய ஏகாந்த அறைக்கே சென்றுவிடலாம். இந்த வழக்கத்தின் பயனாகவே மிகச் சிறந்த போட்டி ஆட்டங்கள் பல நடந்திருக்கின்றன என்கிறார்கள். அந்த நாளில் சதுரங்கம் நன்றாய்ப் பரவியதற்கும் இந்த வழக்கமே பெரிதும் உதவியிருக்கும் என்று தோன்றுகிறது. ஆனால், ஒரு பெண்ணிடம் தோற்பதென்றாலே சில ஆண்களுக்குக் கோபம் வந்துவிடும். அபூர்வமான சில சமயங்களில் இப்படித் தோற்ற ஆண்கள் மிகவும் கேவலமாக நடந்துகொண்டிருப்பதாய்த் தெரிகிறது. அவர்களுடைய

நடத்தை இங்கே அச்சிட்டே தகுதியற்றது.

சில திருத்தங்கள் செய்து மேல் நாட்டில் சதுரங்கத்தைக் கைக் கொண்டார்கள். அதன் விதிகள் அடங்கிய புஸ்தகம் ஒன்றை ஸ்பெயின் நாட்டினரான லூஸேனு என்பவர் பதினைந்தாம் நூற்றாண்டில் முதல்முதலாக எழுதினார். லூஸேனு தம் வாசகருக்குக் கூறியுள்ள புத்திமதிகளைப் படிக்கும் போது, சில விஷயங்கள் தெரிகின்றன. பெரும்பாலும் ஏதாவது பணயம் வைத்தே சதுரங்கத்தை இன்னமும் ஆடிவந்திருக்கிறார்கள். எதிரியைத் தோற்கடிப்பதற்காக என்ன வழியை வேண்டுமானாலும் அந்தக் காலத்தினர் கடைப்பிடித்தார்கள்.

லூஸேனு கூறியுள்ள புத்திமதிகள் இவை: "பணயம் ஒன்றும் வைக்காத ஆட்டமாக இருந்தாலும் சரிதான்; தொட்ட காயை நகர்த்தியே தீரவேண்டும். ஆனால், ராஜா வெட்டுப்படும் நிலை அதனால் ஏற்படுமானால் வேறு காயை நகர்த்தலாம். ஒரே ஒரு மெழுகுவர்த்தி விளக்கை வைத்துக் கொண்டு இரவில் ஆடினால் கண்ணுக்குச் சிரமம் தராதபடி உன் இடதுகைப் பக்கத்தில் அதை வைத்துவிடு; இதனால் உனக்கு மிகவும் சௌகரியம் ஏற்படும். மேலும், எதிரி வயிறு நிறையத் தின்றோ குடித்தோ இருக்கும் போது ஆடு. ஏனென்றால், வெகு நேரம் ஆடுவதென்றால், லேசாகச் சாப்பிட்டிருப்பதே நல்லது. ஆட்டத்தின்போது, கிறுகிறுப்பு ஏற்படாதிருப்பதற்குக் குடி தண்ணீரையே அருந்து; சாராயம் குடிக்கவே குடிக்காதே.."

ஆசிரியர் சோதனை

ஜான் ரஸ்கின் என்ற பிரபல ஆசிரியரின் பிரசங்க வகுப்பு ஒன்றுக்குப் பல மாணவர்கள் வந்து கூடினார்கள். ஆனால், பிரசங்கத்தை மற்றொரு நாளைக்கு ஒத்திப் போட்டிருப்பதாகக் கதவில் நோட்டீஸ் ஒட்டியிருந்தது. அதைப் பார்த்து எல்லாரும் போய்விட்டார்கள்.

ஒத்திப் போட்ட நாளில் அசலில் பாதி மாணவர்கள் வந்து கூடினார்கள். அன்றும் ஒத்திப் போட்டதாக நோட்டீஸ் ஒட்டியிருக்கக் கண்டு அவர்கள் போய்விட்டார்கள்.

ஒத்திப் போட்ட மூன்றாவது நாளில் மிகச் சில மாணவரே வந்து கூடினார்கள்.

பொறுமையோ, உண்மையிலே உழைக்க ஆசையோ இல்லாதவர்கள் தாமாகவே உற்சாகம் குன்றச் செய்வதற்காகவே அந்தப் பிரபல ஆசிரியர் இந்த யுக்தியைக் கடைப்பிடித்தார்.

மிஞ்சிய மாணவர்களிடம் அவர் சொன்னது இதுதான்: "வகுப்பை இப்போது நன்றாய்ச் சலித்தாயிற்று. இனி வேலையைத் தொடங்குவோம்."

—சார்லஸ் எம். க்ரோ

சாவு எப்படி இருக்கும்?

★

பிறப்பு, சாவு இரண்டும் ஒன்றுபோல்தான் மற்றென்றும். இது வேதாந்தியின் கருத்து அல்ல; நவீன வைத்தியம் கற்ற ஒருத்தியின் கருத்து. பாட் மிக்லின் என்ற நர்ஸ் 'லைஃப் டுடே' என்ற பத்திரிகையில் இதை எழுதியிருக்கிருள்.

நீ சாகப் பயப்படுகிருயா? சாவுக்குப் பின்னே என்ன இருக்கிறதோ என்று நீ கொள்ளக் கூடிய பயத்தைப்பற்றி நான் கேட்கவில்லை. அது ஏதோ யூகம், நம்பிக்கை, மதபக்தி, என்னவென்றே புரியாத புதிர் இவைகளைச் சார்ந்தது. ஆதி காலத்திலிருந்தே மனித உள்ளத்தைக் கலக்கிவரும் மர்மம் அது.

முத்துசரம் கோத்த வாயிற்படியும் தங்கப்பாளம் பாவிய தெருக்களும் உள்ள தெய்வலோகத்துக்குப் போகலாம் என்று எண்ணியிருப்போரும் உண்டு; நரகப் படுகுழியில்தான் போய் விழப்போகிருேம் என்று பயப்படுகிறவரும் உண்டு. 'செத்தால் செத்ததுதான். அதோடு நமக்கு முடிவு ஏற்பட்டுவிடுகிறது. அப்புறம் ஒன்றுமே இல்லை' என்று மனப்பூர்வமாய் நினைக்கிறவர்களும் உண்டு. "அதென்னவோ, எனக்குத் தெரியாது. யாருக்குமே தெரியாது" என்று நாணயமாய்ச் சொல்லிவிடுவோரும் உண்டு.

இந்தமாதிரி நம்பிக்கைகளையோ, யூகங்களையோ, அபிப்பிராயங்களையோபற்றி இங்கே நான் பேசவில்லை. சாவுக்கு முன்னே பெரும்பாலும் தோன்றும் வலி, நோய், முதுமை, இளைப்பு இவைகளைப்பற்றியும் நான் சொல்லவில்லை. இவைகளையெல்லாம் நான் பார்க்காமலில்லை. ஏனென்ருல், தொழில் புரியும் ஒரு நர்ஸ் நான்.

"நீ சாகப் பயப்படுகிருயா?" என்று நான் கேட்கும்போது, சாவு என்ற நிகழ்ச்சியையே குறிப்பிடுகிறேன்; கடைசி மூச்சை இழுத்த பிறகு அடுத்த மூச்சு வராமலே நின்றுவிடுகிறதே, அந்தக் கணத்தையே குறிப்பிடுகிறேன்; நாடியைப் பிடித்துப் பார்க்கும்போது மெல்லிய துடிப்பு ஒன்றை உணர்ந்து அடுத்தாற்போல் அடியோடு ஒன்றுமே இல்லாது போவதைக் காண்கிருேமே, அந்தக் கணத்தையே குறிப்பிடுகிறேன்; உடம்பு சாகும் செயலையே குறிப்பிடுகிறேன்.

சாவுக்குப் பிறகு என்ன நிகழுமோ என்ற பயத்தை அடியோடு ஒழிக்கும் அளவுக்கு மத பக்தியுள்ள பலர் இருப்பார்கள் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

சாவுக்கு முன்னே தோன்றக் கூடிய வலியையும் துன்பத்தையும் பற்றி அஞ்சாதவர் பலர் இருப்பார்கள் என்றும் நான் நம்புகிறேன். நானே அப்படிப்பட்ட ஒருத்திதான். ஏனென்றால், வலியை மருந்தினுல் கட்டுப்படுத்த முடியும், கட்டுப்படுத்துகிருர்கள் என்று எனக்குத் தெரியும். என்ருலும், நம் ஒவ்வொருவர் மனத்தையும் உண்மையான ஒரு பயம் அரித்துக்கொண்டிருக்கவில்லையா? உயிரோடிருந்துவிட்டு உயிரற்ற நிலைக்கு மாறும் அந்த உன்னதமான கணநேரத்தைப் பற்றிய பயம் நம் ஒவ்வொருவர் மனத்திலும் உண்மையிலேயே இல்லையா?

என் தொழிலிலே, அநேகம் சாவுகளை நான் கண்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல; பாக்கியவசமாக அதைவிட அதிகமான பிறப்புக்களைக் கண்டிருக்கிறேன். பிறப்பின்போது இருந்த வேதனை எவருக்காவது பிரக்ஞை உண்டா? அதேபோல்தான் இறக்கும்போது நேரும் வேதனை எவருக்கும் பிரக்ஞை இராது என்று நான் நம்புகிறேன்.

இதோ ஒரு குழந்தை உலகத்துக்கு வருகிறது. டாக்டர் கையிலே தலைகீழாகப் பிடித்து, ஆசனத்திலே ஓர் அறை விடுகிற வரைக்கும் மூச்சு விட்டே அறியாதது இந்தக் குழந்தை. டாக்டரின் அறையைச் சகிக்காமல் முரண்டியெழும் இயற்கை உணர்ச்சி வேகத்தால், முதல் மூச்சை இழுத்துப் பெருங்குரல் பாய்ச்சி அழுகிறது குழந்தை.

இதோ ஒரு மனிதர் வயது முதிர்ச்சியாலோ நோயாலோ மரணகாயத்தாலோ உடல் நலிந்து கிடக்கிருர். இன்னும் சிலதடவை களைத்துக் களைத்து மூச்சிழுத்துவிட்டு, அதோடு முற்றும் ஓய்வு கொள்ளத் தயாராயிருக்கிருர்.

இந்த இரண்டு செயல்களும் ஒன்றைப்போல் மற்ருென்று இயற்கையானவையே. இரண்டில் எதிலும் சம்பந்தப்பட்ட மனிதனுக்கு அதுபற்றி ஒன்றுமே தெரியாது. பிறக்கும் குழந்தைபற்றி எவ்வளவு மகிழலாமோ அவ்வளவு சாகும் மனிதன்பற்றியும் மகிழ்வது தகும். ஆரம்பம் மகிழ்ச்சிக்குரியதென்ருல், பூர்த்தியும் மகிழ்ச்சிக்குரியதுதானே? ஒருவன் ஒரு காரியத்தைத் தொடங்கினுல், அதைப் பூர்த்தி செய்வதே இயற்கை இல்லையா? நாம் ஒரு பிரயாணத்தைத் தொடங்கும்போதே, அது எங்கேயோ ஓரிடத்தில், ஒரு காலத்தில் போய் முடியவேண்டும் என்று தானே விரும்புகிருேம்? பூர்த்தி செய்யாத ஒரு வட்டம் என்னவோ போல் மூளியாகத் தோன்றி நம் மனத்துக்குச் சங்கடம் தருகிறது. 'சாவு நியாயமானது. பிறப்பிலிருந்து சாவை வேறு பிரிப்பது சாத்தியமில்லை' என்றே எனக்குத் தோன்றுகிறது.

உடலின் செயலான சாவைப் பற்றி நாம் அஞ்சக் காரணமே இல்லை. என் கணவரும் நானும் கார் விபத்து ஒன்றில் ஒரு சமயம் சிக்கிக்கொண்டோம். நாங்கள் சவாரி செய்துகொண்டிருந்த கார், பெரிய டிரக் ஒன்றில் போய் மோதிவிட்டது. மோதிய அதிர்ச்சியாலேயே என் கணவரின் புஜ எலும்பு முறிந்து போயிற்று. எனக்கோ கடுமையான காயங்கள் உண்டாயின. எங்கள் காரில் ரிபேர் செலவு அறுநூறு டாலர் வரை ஆகக் கூடிய அளவு பழுது

ஏற்பட்டது. இப்படி யெல்லா மிருந்தும், டிரக், கார் இரண்டும் மோதிய அந்தக் கணத்தில் எனக்கு என்ன உணர்ச்சி ஏற்பட்டது தெரியுமோ? இரண்டு பெரிய கார்களுமே பஞ்சடைத்த பிரம்மாண்டமான இரண்டு தலையணைகள் போலும், மிருதுவான அவை மோதியதைப் போலுமேதான் உணர்ச்சி ஏற்பட்டது. காயமுண்டானதுபற்றிய பிரக்ஞையே பல நிமிஷ நேரம் வரையில் எங்களுக்கு ஏற்படவில்லை. என்னதான் நிகழ்ந்தது என்பதையே அது வரைக்கும் கவனப்படுத்திக்கொண்டிருந்தோம். நாங்கள் இருவரும் அப்போது செத்தே போயிருந்தால், எங்களுக்கு இதைவிட வேதனையாகவா இருந்திருக்கும்?

ஒரு பெரிய சூறுவளியில் அகப்பட்டுக்கொண்ட பெண் ஒருத்தியின் வரலாற்றைப் பாருங்கள். அவள் ஒரு காரை ஓட்டிச் சென்றுகொண்டிருந்தாள். அப்போது வீசிய சூறுவளி அந்தக் காரை அப்படியே அலாக்காய்த் தூக்கி, பல நூறு அடி தூரத்துக்கு அப்பால் கொண்டு போய்ப் போட்டுவிட்டது. வலது பக்கம் மேல் நோக்கி யிருக்கும்படி ஒரு வயலில் விழுந்தது கார். காருக்கு எவ்விதப் பழுதும் இல்லை. இன்னமும் உள்ளேதான் இருக்கிறுள் பெண். ஆனுல், வரும்போது இடை வழியிலேயே பிரக்ஞையை மட்டும் இழந்துவிட்டாள். பின்னுல் இந்த அநுபவத்தைப்பற்றி அவள் சொன்னுள்: "ஏதோ கறுப்பு மேகம் ஒன்று தெரிந்தது; ஓவென்று குமுறும் சத்தம் ஒன்று கேட்டது. இவ்வளவு தான் எனக்கு ஞாபகம் இருக்கிறது; வேறு ஒன்றுமே ஞாபகம் இல்லை." அவளுக்குப் பிரக்ஞை போனபின் தெளியவே தெளியாமல் இறந்து போயிருந்தாளானுல், இதைவிட வேதனையா அவளுக்கு உண்டாயிருக்கப் போகிறது?

தண்ணீரில் மூழ்கிவிட்ட ஒரு மனிதனை ஒரு சமயம் நான் பிழைப்பூட்ட வேண்டியிருந்தது. அவனுக்கு மூச்சு நின்று போயிருந்தது. செயற்கைப் பயிற்சி மூலம் யாரும் மூச்சு ஊட்டியிரா விட்டால், அவன் அப்படியே செத்துப் போயிருப்பான். பின்னுல் அவனைக் கேட்டபோது, "மீண்டும் மூச்சு விடத் தொடங்குகிறபோதுதான் கஷ்டமாயிருந்தது. எப்போது மூச்சு நின்றதென்றே எனக்கு ஞாபகமில்லை" என்றுன். இந்த மனிதன் செத்துப் போனவனே. பின்னுல் மூச்சுப் பயிற்சி மூலம் மறுபடி உயிர் பெற்று வாழத் தொடங்கினுன். இதுதான் உண்மை.

நோயாளி பல நாள் வரைக்கும் கஷ்டப்பட்டுக்கொண்டே யிருப்பான். சாவு வருமுன்பு பிரக்ஞை இழந்து விடுவான். இந்த மாதிரி பெரும்பாலான நோயாளிகளுக்கு நேர்ந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். பிரக்ஞையோடிருந்த வரைக்குந்தான் நோயாளிக்கு உறவினரின் அன்பு மொழிகள் தேவை. ஆனுல், அப்போதெல்லாம் பொறுமை யிழந்திருந்த உற்றூர் உறவினரெல்லாம், அவன் பிரக்ஞை யிழந்துவிட்ட இப்போது சத்தம் போடாமல் மௌனமாய் விம்மி விம்மிக் கண்ணீர் விடுகிறுர்கள். அவனை விட்டு அப்பால் போக மறுத்து அண்டையிலேயே இருந்துகொண்டு, அந்தப் பயங்கரச் சாவு நேரத்தை எதிர் பார்த்துக் காத்திருக்கிறுர்கள்!

ஆனால், ஆசாமி முன்னடியே செத்துவிட்டான். அவன் விஷயம் முடிந்துவிட்டது. வேதனைக் குறிகள் அவன் முகத்தை விட்டு முன்பே விலகி யோடிவிட்டன. குடும்பத்தைத் துறந்து அவன் போய்விட்டான். குடும்பத்தாருக்குத் துக்கமாகத் தான் இருக்கும். ஆனால், அந்தத் துக்கம் அவனுக்காக அல்ல; தங்களுக்காகவே. அவன் சம்பந்தப்பட்ட மட்டிலோ, அவன் தொடங்கிய காரியத்தைப் பூர்த்தி செய்துவிட்டான். அது இயற்கை தானே. அவன் பிறந்தான்; வாழ்ந்தான்; செத்தான்.

பட முதலாளி யுக்தி

எந்த நிகழ்ச்சியா யிருந்தாலும், தத்ரூபமாகப் படம் எடுக்க வேண்டும் என்பது ஹாலிவுட் நிபுணர்களின் அபிப்பிராயம். டாக்கீ வந்த ஆரம்பத்தில், சிள்வண்டுகளின் ரீங்காரத்தை ஒலிப்பதிவு செய்ய விரும்பினர் வால்டர் ஃபட்டர் என்ற பட முதலாளி. முப்பது சிள்வண்டுகளைப் பிடித்துவரச் செய்தார். ஆனால், அவை ரீங்காரம் செய்யவே யில்லை.

உடனே கலிஃபோர்னியா யூனிவர்ஸிட்டியின் பூச்சி நிபுணர்களை அழைத்து, "இந்தச் சிள்வண்டுகள் ஏன் ரீங்காரம் செய்யவில்லை?" என்று கேட்டார்.

"இது ரொம்பச் சுலபமான விஷயம். பெண்ணை ஆண் சேர விரும்பும்போதே அவை ரீங்காரம் செய்து அழைக்கும். ஆணையும் பெண்ணையும் பிரித்து விடுங்கள். தாமே ரீங்காரம் செய்யும்" என்று அவர்கள் சொன்னார்கள்.

சிள்வண்டுகளில் ஆண் எது, பெண் எது என்று கண்டு பிடித்து எப்படிப் பிரிப்பது? இது பெரிய சிக்கலாகப் போயிற்று முதலாளிக்கு. கொஞ்சம் சிரமப்பட்ட பிறகு அவருக்கு ஒரு வழி புலப்பட்டது. ஒவ்வொரு சிள்வண்டையும் தனித் தனியே பிரித்து ஒவ்வொரு பெட்டியில் போட்டு விட்டார். எல்லாம் ரீங்காரம் செய்யத் தொடங்கிவிட்டன!

—ஆண்ட்ரு ஹெச்ட்

மழை பெய்வது ஏன்?

வீதியில் மழை பெய்வதை ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவனுக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது.

"அம்மா, ஏன் இந்த மழை பெய்கிறது?"

"எல்லாம் வளர்ந்து, நமக்குப் பூ, பழம் யாவும் தர வேண்டும் இல்லையா? அதற்காகத்தான்."

"அப்படியானால், நடைபாதை மேடையில் ஏன் பெய்கிறது?"

—'லுக்கர்-ஆன்

புளிய இலை சிறிதாக இருப்பது ஏன்?
அரச இலையில் விரல் தோன்றுவது ஏன்?

மரங்களைப்பற்றிய கதைகள்

டாக்டர் வெரியர் எல்வின்

முதல் முதலில் கித்துக் என்ற தெய்வம், பழங்கள் குலுங்கும் மரங்களையே உலகத்தில் கொண்டு வந்ததாக, சபர ஜாதியார் ஒரு கதை சொல்கிறார்கள். அப்பொழுது எல்லாருமே பழங்களைத்தான் புசித்து வந்தார்கள். பிறகு மக்களின் தொகை வளர வளர, பயிர்த் தொழிலுக்காகக் காடுகளை அழித்தார்கள். அழித்த மரங்களை விறகாய்ப் பயன்படுத்தினார்கள். ஆனால் அவர்களுக்கு உணவு கிடைக்காமற் போயிற்று. இதைப் பார்த்ததும் கித்துக் மிகவும் வருந்தினான். மரங்களிடம் அவனுக்கு இருந்த அன்பு சொல்லி முடியாது. மரங்கள் இப்படி நாசமாவதைக் கண்டு, அவன் ஒரு பாறைமேல் உட்கார்ந்து அழலானான். பின்பு அவன் மக்களிடம் வந்து புதிய மரங்களை வளாப்பதற்கு வேண்டிய விதைகளைக் கொடுத்தான். "ஆனால் இந்த மரங்களில் இனிமேல் பழம் பழுக்காது. ஏற்கனவே பழங்களோடு இருந்த மரங்களிலும் இனிமேல் உண்ணக் கனிகள் கிடைக்கமாட்டா" என்றும் சொல்லிவிட்டான்.

மரங்களிடம் கித்துக் கொண்ட இந்த அன்பு இன்று எல்லாப் பழங்குடிகளிடமும் இருப்பதாகச் சொல்ல முடியாது. காட்டு இலாகா அதிகாரிகளோ மரங்களை அதிகமாக வெட்டுவதையே நான் காண்கிறேன். ஆனால் பழங்கள் குலுங்கும் மரங்களை அவர்களுங்கூட அதிகமாக வெட்டுவதில்லை. உணவு, எண்ணெய், மது முதலியவற்றைத் தரும் இலுப்பை போன்ற மரங்களை அவர்கள் அக்கறையோடு பாதுகாக்கிறார்கள். கோண்டு ஜாதியார் கடுக்காய் மரத்துக்குப் பூஜை செய்கிறார்கள். சில முக்கியமான மரங்களைத் தெய்வங்களாகக் கருதி வழிபடும் வழக்கம் இன்றும் பழங்குடிகளிடம் இருக்கிறது.

மரங்களின் உற்பத்தியைப் பற்றி வெவ்வேறு ஜாதியார் வெவ்வேறு கதைகள் சொல்கிறார்கள். முதல் முதலில் துர்மரணமடைந்த ஒருவனுடைய பிணத்திலிருந்து முதற்செடி தோன்றியதாகப் பல கதைகள் கூறுகின்றன. மிருகங்

காப்பிரைட்: விசால பாரத் (ஹிந்தி: ஏப்ரல் '54), கல்கத்தா.

களே மரங்களாக மாறின என்றும் சில கதைகள் உண்டு. இந்த மரங்களுக்குள் எல்லாவற்றையும் விட முக்கியமானது புளிய மரம். அதன் இலைகள் சிறியவையாக இருப்பதற்குக் காரணம் உங்களுக்குத் தெரியுமா?

அதைப்பற்றி எத்தனையோ கதைகள். முண்டா ஜாதியார் சொல்லும் கதையைக் கேளுங்கள்: இரண்டு வீரர்கள் அண்ணன் தம்பிகளாக இருந்தார்கள். அவர்கள் பொன்னாலாகிய கதையையும் பொன்னாலாகிய கூடையையும் எடுத்துக்கொண்டு வேட்டையாடப் போவார்கள். ஒரு நாள் அவர்கள் வரும் வழியில் நல்ல மழை பிடித்துக்கொண்டது. அவர்கள் ஒரு புளிய மரத்தின் கீழே தங்கினார்கள். அந்தக் காலத்தில் புளிய மரத்துக்குப் பெரிய பெரிய இலைகள் இருந்தன. அப்படி யிருந்தும் மழைநீர் அவர்களின்மேல் பெருகியது. இதைக் கண்டு அவர்களுக்குக் கடுமையான கோபம் வந்தது. அவர்கள் தங்கள் கதைகளால் மரத்தின் இலைகளை ஓங்கி அடித்தார்கள். அவை சிதறிப் போய்ச் சின்னஞ்சிறியவை ஆகிவிட்டன.

பிடவுர் ஜாதியார் சொல்லும் கதை இதைவிட ரசமானது. ராமனும் லட்சுமணனும் சீதையும் காட்டில் வாழ்ந்த காலத்தில் ஒரு பெரிய புளிய மரத்து நிழலில் தங்கள் குடிசையைக் கட்டிக்கொண்டார்கள். அதன் பெரிய இலைகள் மழையில் அவர்களைக் காத்தன. ஆனால் ஒரு நாள் ராமன் லட்சுமணனைப் பார்த்து, "தம்பி, நாம் துன்பங்களை அநுபவிப்பதற்காகக் காட்டுக்கு வந்தோம். ஆயினும் இங்கே இந்த மரத்தின் பெரிய பெரிய இலைகள் மழையிலிருந்து நம்மைக் காக்கின்றன. உன் அம்பினால் இவற்றைச் சிறு துண்டுகளாக்கிவிடு" என்றான். லட்சுமணன் அம்பு எறிந்ததும் இலைகள் கிழிந்து சிறியவை ஆகிவிட்டன. அடுத்த தடவை புயல் வந்தபோது, அவர்கள் மூவரும் படாத கஷ்டத்தைப் பட்டார்கள்.

பைகா ஜாதியார் சொல்லும் கதை மிகவும் வேடிக்கையானது: ஒருவன் ஒரு தேவதையின் பெண்ணை மணக்க வந்தான். அப்பொழுது அந்தத் தேவதை ஒரு புளிய மரத்தைச் சுட்டிக் காட்டி, "இதன் இலைகளை நீ எண்ணிவிட்டால் உனக்கு என் பெண்ணைக் கொடுப்பேன்" என்று சொன்னாள். அந்தக் காலத்தில் புளிய இலைகள் பெரியவையாக இருந்தமையால் அவற்றை எண்ணுவது சுலபம். இதற்குள் அவள் எதிர்பார்க்காத மற்றொருவன் அவளுடைய பெண்ணை மணக்க வந்தான். தேவதை பயந்துபோய்க் கையைத் தட்டினாள். உடனே ஒவ்வொரு புளிய இலையும் இருபது சிறிய இலைகளாக மாறிவிட்டது. வந்தவன் பெரிய ஜாலக்காரன்; அவன் அவற்றையுங்கூடச் சரியாக எண்ணிச் சொல்லிவிட்டான். தேவதையின் பெண்ணை அவன் மணந்து கொண்டான்.

கம்மர் ஜாதியார் சொல்லும் கதை, புராணக் கதையோடு தொடர்புள்ளது. ஆனால் இந்தக் கதையை எந்தப் புராணத்தில் தேடினாலும் கிடைக்காது. சிவபெருமான் பஸ்மாசுரனை அழிக்க அவன் பின்னால் ஓடிய போது, அவன் புளியமரத்து இலை

களில் பதுங்கிக்கொண்டான். சிவபெருமானுடைய கண்களின் கூர்மையைத்தான் சொல்லவே வேண்டாமே! அவர் அந்த இலைகளைப் பார்த்ததும் அவை மிகவும் சிறியவை ஆகிவிட்டன. அசுரனைக் கண்டதுமே, அவர் அவனைக் கொன்றுவிட்டார்.

வாதுமை மரத்தைப்பற்றிக் கொடாவா ஜாதியார் ஒரு கதை சொல்லுகிறார்கள். அதன் நிழலில் தான் ராமன் குடிசை போட்டுக் கொண்டு காட்டில் வாழ்ந்தானும். அதனுல் அது பாக்கியசாலியான மரமாம்.

பழங் குடிகளிடையே வழங்கும் கதைகளில் எத்தனையோ மரங்கள் வருகின்றன. அவற்றுள் முக்கியமானது வாழை. அதன் இலைகள் நீளமானவை. குலை தள்ளியதுமே அந்த மரம் பட்டுப் போகும். ஒரிஸ்ஸா நாட்டு மலைகளில் வாழும் கடாவா ஜாதியார் சொல்லும் கதை இது:

ஓர் ஊரில் ஐந்து பெண்கள் இருந்தார்கள். மா, புளி, அத்தி, இலந்தை, வாழை என்று அவர்களுக்குப் பெயர். அவர்கள் ஊரூராகத் திரிந்து தமக்குரிய கணவர்களைத் தேடினர்கள். யாரும் அவர்களை மணந்துகொள்ளவில்லை. கடைசியில் கடவுள் அவர்களிடம் வந்து, தனித்தனியே அவர்களைப் பார்த்து, "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். மா, புளி, அத்தி, இலந்தை ஆகிய நான்கு பெண்களும், "எங்களுக்கு ஒரு கணவனும் பல குழந்தைகளும் வேண்டும்" என்று சொன்னர்கள். ஆனல் வாழைப் பெண், "எனக்குக் கணவனே வேண்டாம்; குழந்தைகள் நிறைய வேண்டும். இப்பொழுதே வேண்டும். நான் அதிக நாள் வாழாமல் சீக்கிரமே கிழவியாக விரும்புகிறேன்" என்ருள். அப்படியே நடக்கும் என்று சொல்லிக் கடவுள் போய்விட்டார்.

நான்கு தமக்கைகளுக்கும் கணவன்மார் கிடைத்தார்கள். அவர்களுடைய கூந்தலின் எண்ணிக்கையைவிட அதிகமான பிள்ளைகள் பிறந்தார்கள். இதைக் கண்ட கணவன்மார் பயந்து ஓடிவிட்டார்கள். இந்தக் குழந்தைகள் நம்மைக் கொன்றுவிடுமோ என்று தாங்களும் பயந்தார்கள். கடவுள் அவர்களை மரமாக மாற்றிவிட்டார். அவர்களுடைய கூந்தல் கிளையாயிற்று; பிள்ளைகள் பழங்களாக மாறினர்கள். "உங்கள் கணவர்களை என்ன செய்வது?" என்று கேட்டார் கடவுள்.

"மனிதர்களாக மாற்றிவிடுங்கள்" என்று அந்த மரங்கள் கூறின. அதனுல்தான் இன்றும் இந்த மரங்களில் பழங்களைப் பறிக்க மனிதர்கள் ஏறுகிருர்கள். ஆனல், எல்லா மரங்களுக்கும் தங்கையான வாழைக்குக் கணவன் இல்லை; அவள் விரைவிலே கிழவி யாகிவிடுகிருள்.

பாரத நாட்டில் எல்லாவற்றையும்விடத் தூய்மையானது அரச மரம். அதன் வேரில் பிரம்மாவும் மரப்பட்டைகளில் திருமாலும், கிளைகளில் சிவபெருமானும் இருப்பதாகச் சொல்கிருர்கள். சபர ஜாதியார் இந்த மரத்தைப்பற்றி விந்தையான கதையொன்று கூறுகிருர்கள். கித்துக் என்ற தெய்வமும் அவன் தங்கையும் பிரளய காலத்தில் ஒரு சுரைக் கூட்டுக்குள் வசித்து வந்தார்கள். வெள்

ளம் வடிந்ததும் அவர்கள் வெளியே வந்து மலைப்பிராந்தியங்களில் திரிந்தார்கள். அப்பொழுது உலகத்தில் எங்குமே மரங்கள் இல்லை. அவர்கள் வானவெளியில் தூங்கினார்கள். ஒரு நாள் அவர்கள் தூங்கிக்கொண்டிருந்தபோது, கித்துக்கின் கைவிரல்களில் நான்கை ஓர் அணில் கொத்திக்கொண்டு போய் விட்டது. வலி தாங்காமல் கித்துக் எழுந்து கத்தினான். மறுநாள் வெயில் தாங்க முடியாமல் கொளுத்தியது. எங்கும் நிழல் என்ற நாமதேயமே இல்லை. கித்துக்கும் அவன் தங்கையும் வெயில் பொரிந்து போனார்கள். அப்போது கித்துக் தன் மொண்ணைக் கையை வெட்டி ஒரு கல்லின்மேல் வைத்தான். அது உடனே மரமாக வளர்ந்து, நிழல் பரப்பியது. அதுதான் அரசமரம். அதன் இலைகளின் நடுவே ஒரு விரல் இருப்பதை இன்றும் காணலாம்.

பழங்காலக் குடிமக்கள் எத்தனையோ மரங்களைப்பற்றி இப்படிப் பல கதைகள் சொல்லுகிறார்கள். ஆதி மனிதனுடைய வாழ்வையும் பழக்க வழக்கங்களையும் விளக்கும் காவியக் கதைகள் என்றே இவற்றை மதிக்க வேண்டும்.

சமயமும் ஒழுக்கமும்

ஒழுக்கம் இல்லாத மதம் கனியில்லாத மரம். மதம் இல்லாத ஒழுக்கம் வேரில்லாத மரம்.

—ஹெரால்டு டபிள்யூ. ருவாப்

வரப்போகும் வீரன்

சமீபத்திலோ, கொஞ்சம் தள்ளியோ, வெகு காலத்துக்கு அப்புறமோ ஒரு மகா வீரன் தோன்றப் போகிறான். பல்லாண்டு பல்லாண்டாகக் காணப்பெறாத ஒரு வீரனாக அவன் விளங்கப் போகிறான். பெரிய ராணுவ தந்திரியாகவோ, வேதாந்தியாகவோ, சமாதானவாதியாகவோ அவன் இருக்க மாட்டான். மிக நூதன அணுசக்தி யந்திரங்களைப் புதுமையாக அமைத்து, மக்களின் வேலைப்பளுவைக் குறைத்து விடமாட்டான். சந்திரன் முதலிய வான மண்டலங்களுக்குப் பிரயாணம் செய்யமாட்டான். காலநிலையின் சேதோஷ்ணங்களை ஆட்டி வைக்க மாட்டான். திடுக்கிடச் செய்யும் பொருளாதார சித்தாந்தங்களையோ அரசியல் சித்தாந்தங்களையோ உபதேசிக்க மாட்டான். அப்படியானால், எக்காலத்தும் அகில உலகமும் கொண்டாடக் கூடிய இந்த அபூர்வப் பரோபகாரி என்னதான் சாதிப்பான்? அவன் என்ன சாதிப்பான் என்றால், ஜலதோஷத்துக்குத் தகுந்த மருந்தைக் கண்டுபிடித்துவிடுவான்.

—லிட் டர்ரல், 'யுவர் ஹெல்த்.'

தெற்கேதான் வைத்தியநாதர் கோயில் இருக்கிறது என்றெண்ணாதீர்கள். வடக்கேயும் ஒன்று இருக்கிறது.

வனப்பு மிக்க வைத்தியநாதம்

கெர்ட்ரூட் லிட்டில்

பஞ்சாப் சமவெளியிலிருந்து காங்க்ரா பள்ளத்தாக்கு வழியாகத் தொலைவில் உள்ள மேட்டுப் பிரதேசங்களை நோக்கிச் செல்கிறது, ஒரு மோட்டார்ப் பாதை. அங்கிருந்து பார்த்தால் தவுலி தர் மலை வரிசை ஓங்கி உயர்ந்து வெள்ளை வெளேர் என்று தெரியும்; அதன் அடிவாரத்தில் பைஜ்நாத் என்னும் வைத்தியநாத க்ஷேத்திரம் இருக்கிறது. இது சின்னஞ் சிறிய ஊர். முதல்முதல் பார்க்கும்போது சில மளிகைக் கடைகள், டீ ஸ்டால்கள், லாரி ஆபீஸ்கள் இப்படிச் சாதாரணப் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான இடம் என்று பொதுப் படையாகத் தோன்றும்; ஆனாலும் கோயில் விமான உச்சி கண்ணில் பட்டதும் இங்கே வருபவர்கள் க்ஷேத்திர தரிசனம் செய்யும் யாத்திரிகர்கள் என்று தெரிந்து கொள்ளலாம்.



ஆண்டுதோறும் குறிப்பிட்ட சில பருவங்களில் ஏராளமான யாத்திரிகர்கள் வருவார்கள். மற்றச் சமயங்களில் இவர்களின் தொகை அதிகமாக இராவிட்டாலும் கொஞ்சம் பேராவது இப்படி வந்துகொண்டேதான் இருப்பார்கள். கோயில், ஊருக்கு வெளியே மேட்டில் ஓங்கி உயர்ந்து நிற்கிறது. கோயிலின் எதிரே பரந்த முற்றமும் நிழல் தரும் மரங்களும் காஷாயம் உடுத்த குருக்கள்மாரும் இருப்பது தொலைவிலிருந்து பார்த்தாலே தெரியும். கோயில் மணி, டமாரம் இவைகளின் ஓசையும், சாதுக்கள் மந்திரங்களைச் சொல்லி ஸ்தோத்திரம் செய்வதும் கேட்கும்.

யாத்திரிகராகவோ கோயில் சம்பந்தப்பட்டவராகவோ இராவிட்டாலும் அதன் அழகு, பழமை, சூழ்நிலை, மக்கள் பக்தியோடு அதைத் தரிசிக்க வருவது இவைகளையெல்லாம் கவனிக்கும்போது நாமும் இவைகளின் அழகில் ஒன்றி விடுவோம்.

மூலம்: ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன் (இங்கிலீஷ்: மே'54), பம்பாய்.

ஊர் இராத பக்கம், கோயில் இருக்கும் இடத்துக்குக் கீழே ஓர் ஆறு நுரைத்துக்கொண்டே செல்கிறது. பாறைகளின் இடுக்கு வழியாகக் கரடு முரடான இடத்தில் இந்த ஆறு ஓடுகிறது. பனிக்கட்டி போல் சில்லென்றிருக்கிறது இதன் நீர்; நிறமும் பனிக்கட்டி போல் லேசான பசுமைநிறமாக இருக்கும். கோயில் மதிலிலிருந்து கவனித்தால் ஆறு நன்ருகத் தெரிகிறது; அதன் சலசலப்பும் கேட்கிறது. ஆற்றுக்குப் பின்புறம் பனிக்கட்டி மதில் போல் நிற்கிறது. அதிலிருந்துதான் இந்த ஆறே உற்பத்தியாகிறது. ஆற்றுக்குப் போகப் படிகள் உண்டு. இந்த வழியாகத்தான் யாத்திரிகர்கள் மிகவும் சிரமப்பட்டு ஏறி வருகிருர்கள்; ஒரு வரப் படிகள் செங்குத்தாக அமைந்திருப்பதால் கோயிலை அடைவதற்குள் அவர்கள் பாடு ஓய்ந்துவிடும்.

இருந்தாலும் கோயிலுக்கு வந்து சேர்ந்ததும் பாட்டைக்கும் ஆற்றுக்கும் மேலே கோயில் ஓங்கி நிற்கும் காட்சி மனசுக்கு நிம்மதி தரும்.

பிறகு யாத்திரிகர்கள் நன்ருக இளைப்பாறுவார்கள்; அவரவர் இஷ்டப்படி காணிக்கையோ, பிரார்த்தனையோ செலுத்துவார்கள்; பகவானை ஏதாவது வேண்டிக்கொள்வார்கள்; பிராயச்சித்தம் செய்துகொள்வார்கள்; புதிதாக ஏதாவது சபதம் எடுத்துக் கொள்வார்கள்.

கோயில், ஊர் இரண்டையும் தாண்டிக் கீழ்ப் பக்கம் வந்தால் வேருெரு பாட்டை தெரிகிறது. ஒரு காலத்தில் இந்த வழியாக ஜன நடமாட்டம் இருந்திருக்கும். இதற்கு அருகில் இன்னெரு கோயில் இருக்கிறது. மிகவும் பழமையான கோயில்; கட்டி ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்கும். இந்தக் கோயிலைத் தரிசிக்க ஏராளமான யாத்திரிகர்கள் ஒரு காலத்தில் வந்திருக்க வேண்டும். ஆனல் இப்போது இது பாழடைந்து கிடக்கிறது. இருந்தாலும் இதுவும் ஒரு விதத்தில் கவர்ச்சியாகத்தான் இருக்கிறது. ஓர் ஆலமரம் இந்தக் கோயில் இடுக்குகளில் வேர் ஊன்றியிருப்பதால் கட்டிடம் கலகலத்து வருகிறது. ஆயினும் இந்தச் சின்னஞ் சிறு கோயில் இதையும், வாடைக் காற்றையும், பருவ மழையையுங்கூட எப்படியோ சமாளித்துக்கொண்டு இன்னும் நிற்கிறது.

இதைக் கட்டியவர்களும் சரி, இதில் வழிபட்டு வந்தவர்களும் சரி இன்று இல்லை. என்ருலும் அன்று அவர்கள் செலுத்தி வந்த பக்திக்கு அறிகுறியாக இது இன்றும் தலை தூக்கி நிற்கிறது.

மேலே இருக்கும் வைத்தியநாதர் கோயிலும், இந்தச் சின்னஞ்சிறு கோயிலும் மிகவும் சேர்த்தியான இடத்தில் அமைந்திருக்கின்றன.

இந்த இரண்டையும் தவிர ஊர்த் தெருவில் இன்னொரு கோயிலும் இருக்கிறது. அந்தப் பக்கமாக மோட்டார் கார்களும் லாரிகளும் மூட்டை சுமக்கும் குதிரைகளும் போய்க்கொண்டிருக்கின்றன. இருந்தாலும் கோயிலைப் பொறுத்த வரையில் அமைதியாகவே இருக்கிறது. முன் காலத்தில்கூட இப்படி ஏராளமாக வண்டிப் போக்குவரத்து இருந்திருக்கும். ஆனாலும் இப்போது, மரப் பலகை அடித்த லாரிகளும் அவற்றின் மோட்டார் யந்திரம் போடும் இரைச்சலும்போல் அவ்வளவு விகாரமான காட்சியோ சத்தமோ அப்போது இருந்திராது.

எங்கோ தொலைவில் உள்ள ஒரு குக்கிராமத்திலிருந்து நாகசுரமும் மத்தளமும் டமாரமும் எடுத்துக்கொண்டு சில தெருப் பாடகர்களும் நாட்டியக்காரர்களும் அவ்வப்போது வருகிறார்கள். அதோ ஒரு பெண்பிள்ளை கையில் தம்பட்டம் எடுத்துக்கொண்டு அதில் நயமாகத் தாளம் போட்டுக்கொண்டே வருகிறாள். பின்னால் தொலைவில் பனி மலைகள் சூழ, ஆடி அசைந்துகொண்டே கழுத்தில் ஆரம் பளபளவென்று ஜொலிக்க, கையில் உள்ள காப்புகள் மெதுவாக ஒலிக்க, அழகாக அவள் வரும் காட்சி கண்ணைக் கவருகிறது.

பாட்டும் கூத்தாட்டமும் முடிந்ததும், அவர்களில் ஒருவன் கடை கடையாக இனாம் கேட்கப் புறப்பட்டு விடுவான். அவனிடம் மிட்டாய்த் தினுசு, காசு எல்லாம் கொடுப்பார்கள் கடைக்காரர்கள். மிகவும் திருப்தியோடு அந்தக் கூட்டத்தார் ஆற்றை நோக்கிச் செல்லும் பாட்டை வழியாகப் புறப்பட்டு விடுகிறார்கள். இந்தப் பாட்டை பாலாம்புருக்குச் செல்லுகிறது.

ஒரு பக்கம் சாய்ந்தாற்போல் குல்லாய் போட்டுக்கொண்டு குலு என்ற பிரதேசத்திலிருந்து சில பேர் போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குல்லாய் மிகவும் சின்னதாக இருப்பதால் அவர்கள் மிகவும் பாரியாக இருப்பதுபோல் தோன்றுகிறார்கள். அவர்களில் ஒரு வாலிபன் முகத்தில் மகிழ்ச்சி ததும்ப நடந்து செல்லுகிறான்; அவன் காதில் பட்டு ரோஜா ஒன்றைச் செருகிக்கொண்டிருக்கிறான். தொலைவிலுள்ள லதாக், ஸஹோல், ஸ்பிடி முதலிய ஊர்களிலிருந்து வழிப்போக்கர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் யார் யார் எஃதப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது; எல்லாருமே கடுங் குளிருக்காக ஒரே மாதிரி நீண்ட அங்கி அணிந்திருக்கிறார்கள். எல்லாரும் இடுப்பில் கயிற்றைப் புரிமணைபோல் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். கணவாய் வழியாகப் போகும் போது காது உறைந்துவிடாதிருப்பதற்காகக் காதை மூடும்படி பட்டை வைத்த குல்லாய் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லாருமே பொதுவாகக் கவலையில்லாமல் பரம திருப்தியோடு அந்த வழியே நிதானமாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். எதிரே வருவோர் போவோரைப் பார்த்துப் புன்னகை செய்து, 'ஜூலி' என்று க்ஷேமம் விசாரித்துக்கொண்டே போகிறார்கள். குழந்தைகளைப்போல் கள்ளங்

கபடற்றுப் பார்த்துக்கொண்டு, நகை முகத்தோடு போகும் இந்த மலை ஜனங்களைக் கண்டால் எல்லாருக்குமே பிடித்திருக்கும்.

வைத்தியநாதத்துக்குப் போகும் வழியில், ஊரிலிருந்து கொஞ்ச தூரத்தில் சற்றுப் பள்ளத்தில், ரோஜா முதலிய பூம்புதர்களின் மறைவில் ஓர் அரண்மனை இருக்கிறது. இங்கேதான் காஷ்மீர் ராணி வசிக்கிறாள் என்று சொல்லுகிறார்கள். பனியும் மலையும் பரந்த வெளியும் சூழ்ந்த இந்த இடம் ஆசிரமம்போல் அமைதியாக இருக்கிறது. உண்மையிலேயே நிம்மதியான இடத்தைத் தேடித்தான் வந்திருக்கிறாள் காஷ்மீர் ராணி.

சற்றுத் தள்ளி மலைச் சாரலில் ஒழுங்காக அமைந்த பசுமையான தேயிலைப் புதர்களைப் பார்க்கும் போது கண்ணுக்குப் பிடித்திருக்கும். அழகிய சின்னஞ் சிறு குடிசைகளும் சிறு கிராமங்களும் மலை அடிவாரத்தில் தெரியும். பொதுவாக அந்தக் காட்சி முழுவதுமே ரம்மியமாக இருக்கும்; என்றுமே மறக்க முடியாதபடி அப்படியே மனத்தில் பதிந்து விடும்.

கடவுளும் பரீட்சை மார்க்கும்

பெர்னார்ட் ஷா செய்த சேவைகளில் எது மிக உயர்ந்தது? இதுபற்றி எனக்கும் என் மனைவிக்கும் எப்போதும் அபிப்பிராய பேதந்தான். அவருடைய ஸோஷலிஸ நூல்களும் பிரசங்கங்களுமே உயர்ந்தவை என்று அவள் சொல்லுவாள். நாடக மேதை அவர் என்பது என் மதிப்பு.

"மனித சமூகத்துக்கு நீங்கள் அளித்துள்ள கொடைகளில் எது மிக உயர்ந்தது? உங்கள் ஸோஷலிஸப் பிரசாரமா, நாடகங்களா?" என்று அவரையே அவள் கேட்டாள்.

"என் பிரசாரத்தை எவன் வேண்டுமானாலும் செய்திருக்கலாம். என் நாடகங்களை வேறு எவனும் எழுதியிருக்க முடியாது. நான்தான் அவற்றை எழுத வேண்டியிருந்தது. அவைதான் நான் என்று சொல்லும்படி என் வாழ்க்கையிலே ஒரு பகுதி யாகிவிட்டன."

என் மனைவி இதோடு விடவில்லை. "அது சரி. நீங்கள் பரமண்டலத்துக்குச் சென்று கடவுளின் முன்பு நிற்பதாக வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் செயல்களில் எதற்கு அவர் அதிக மார்க் கொடுப்பார் என்று நினைக்கிறீர்கள்?" என்று மீண்டும் கேட்டாள்.

"கடவுள் மாத்திரம் என் செயல்களுக்குப் பரீட்சை மார்க் போட ஆரம்பித்தாரானால், அப்புறம் எனக்கும் அவருக்கும் பெரிய தகராறுதான் வந்துவிடும்" என்றார் ஷா.

—ஹெஸ்கத் பியர்ஸன், 'ஜி. பி. எஸ்-ஏ போஸ்ட்ஸ்க்ரிப்ட்.'

இதைப் படித்ததுண்டா?

'பிரஸ்நோட்'

★ சில எண்ணெய்க் கேணிகள் மூன்று மைல் ஆழமுடையவை.

★ இன்று 26 கோடி ஜனங்கள் ஆங்கில பாஷையைப் பேசுகிறார்கள்.

★ நார்வேயில் ஒவ்வொரு வருஷமும் 80 லட்சத்துக்கு அதிகமான புத்தகங்கள் விலையாகின்றன.

★ விமான எதிர்ப்பு பீரங்கி (Anti-aircraft gun), 1909-ஆம் ஆண்டு ஜெர்மனியும் அமெரிக்காவும் தயார் செய்ததாம்.

★ ஒரே ஒரு துணிப்புழு (Moth), சுமார் 92 பவுண்டு எடையுள்ள கம்பளித் துணியை ஒரு வருஷத்தில் தின்றுவிடும்.

★ காலநிலை எப்படியிருந்தாலும் சரி, விமானம் தரைக்கு மேலே பறப்பதைவிட, நீருக்கு மேலே பறப்பதுதான் சுலபமாம்; அதுவே பிரயாணிகளுக்குச் சுகமாகவும் இருக்குமாம்.

★ 5,000 உழைப்பாளித் தேனீக்களை நிறுத்தால், ஒரே ஒரு பவுண்டு நிறைதான் தேறும்.

★ கிறிஸ்டோஃபர் ஸோல்ஸ் என்பவரே டைப்ரைட்டர் அமைத்தவர்.

★ காலிஃபோர்னியாவில் 35 லட்சம் ஏக்கர் திராட்சைத் தோட்டங்கள் இருக்கின்றன.

★ 150 வருஷத்துக்குமேல் பழசாய்ப்போன விதை இன்றுவரைக்கும் முளைத்ததில்லை.

★ சின்னஞ் சிறு பூச்சிகளை அலங்கார ஆபரணங்களாகப் புராதன எகிப்தியர் அணிந்தார்கள்.

★ முதல்முதல் பாரசூட் (Parachute), குடையில் மனிதன் உயரத்திலிருந்து இறங்கினது 1595-ஆம் ஆண்டில்.

★ ஜப்பானிலேயே அழகில் சிறந்த நீர்வீழ்ச்சியின் பெயர் நீக்கோ. இது 350 அடி உயரத்திலிருந்து பாய்கிறது.

★ 12 ஆயிரத்துக்கும் அதிகமான மீன் வகைகள் உலகத்தில் உண்டு.

★ ஜெட் சுழல் சக்கரத்தைக் கண்டுபிடித்தவர் பிரெஞ்சு தேசத்தவரான ரேனே லோரின். வருஷம்: 1913.

★ ஒரு வீணையில் சுமார் 70 மரப் பகுதிகள் உண்டு.

★ காட்டியாவாடில் வசிக்கும் அஞ்ஜன் டாங்கர் என்பவரின் மீசை 8 அடி 8 அங்குல நீளம். உலகத்திலேயே பெரிய மீசை இவருடையதுதான்.

கார்ட்டூன் கதம்பம்



'காமராஜ் கடைசியாக வாய் திறந்தார்' என்கிறது செய்தி. இனி மூடுவாரா என்பதுதான் பிரச்னே.

—'சங்கர்ஸ் வீக்லி'



கிழக்கையும் மேற்கையும் இணைக்க முயலுகிருர் கிருஷ்ண மேனன்.

—'ப்ளிட்ஸ்'

உலக விஞ்ஞான ஆராய்ச்சிச்சாலைகளில்
சிறந்தவற்றோடு போட்டியிடக்கூடிய ஒன்று -

டில்லி ஆராய்ச்சிச்சாலை

★

இந்தியாவில் விஞ்ஞான வளர்ச்சிக்காகப் பலபேர் அருமையான ஆராய்ச்சியெல்லாம் செய்திருக்கிறார்கள். இவர்களில் ஸர் பி. ஸி. ராய், ஜே. ஸி. போஸ், ஸி. வி. ராமன், கே. எஸ். கிருஷ்ணன், எச். ஜே. பாபா, எஸ். எஸ். பட்நாகர், டி. எஸ். வேங்கடரமணன் ஆகியோர் மிகவும் முக்கியமானவர்கள். பெரும்பாலும் யூனிவர்ஸிட்டிகளிலும் தனிப்பட்ட நிலையங்களிலும் இந்தமாதிரி ஆராய்ச்சி நடந்துவந்தது. இந்தியா சுதந்தரம் அடைந்த பிறகு, வாழ்க்கைத்தரத்தைச் சரியானபடி உயர்த்தவேண்டுமானால் பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் விஞ்ஞான வசதிகள் ஏராளமாக இருக்க வேண்டும் என்று சர்க்கார் உணர்ந்தார்கள். இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டத்தில் விஞ்ஞானம், தொழில் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி செய்வதற்காக 4,60,00,000 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இப்போது முதல் முதலாக ஆராய்ச்சி நிலையங்களை நிறுவியிருக்கிறார்கள்.

எலக்ட்ரானிக் கருவி அமைக்கிறார்கள்

இந்த நிலையங்களுக்குள், புது டில்லியில் இருக்கும் நேஷனல் ஃபிஸிக்கல் லேபரட்டரிதான் மிகப் பெரியது. 1950 ஜனவரி 21-ஆம் தேதியன்று இதைத் திறந்து வைத்தார்கள். அதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பிரதமர் நேரு இதன் அஸ்திவாரக் கல்லை நாட்டினார். இப்போது ஸர் கே. எஸ். கிருஷ்ணனின் மேற்பார்வையில் இங்கே ஆராய்ச்சி நடந்து வருகிறது. 'ராமன் எஃபெக்ட்' என்ற விஞ்

மூலம்: காமன்வெல்த் டுடே (ஆங்கிலம்: நம்பர் 27), லண்டன்.

ஞான விளைவைக் கண்டு பிடித்தபோது ஸர் ஸி. வி. ராமனுடு சேர்ந்து அது சம்பந்தமாக உழைத்தவர் டாக்டர் கிருஷ்ணன்; சர்வ தேச மகாநாடுகள் பலவற்றுக்குப் பிரதிநிதியாகச் சென்றிருக்கிறார்.



சூரியனின் உஷ்ணத்தையும் காற்றையுமே சக்தியாகக் கொண்டு, டைனமோ அல்லது பம்ப் ஒன்றை இயக்கக்கூடிய இந்த நூதன எஞ்சினை டில்லியில் அமைத்திருக்கிறார்கள்

நேஷனல் ஃபிஸிக்கல் லேபரட்டரி அமைந்திருக்கும் கட்டிடம் கம்பீரமாக இருக்கிறது. பௌதிக ஆராய்ச்சி சம்பந்தமான எல்லாப் பொறுப்பும் அதைச் சேர்ந்தது; இந்தியாவிலுள்ள கச்சாப் பொருள்களை நன்றாகப் பயன்படுத்துவது, தொழில் முறையில் அபிவிருத்தி காணுவது போன்ற விஷயங்களிலும் இது அக்கறை செலுத்தி வருகிறது. பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா முதலிய நாடுகளில் சர்க்கார் நடத்தும் பௌதிக ஆராய்ச்சி நிலையங்களைப் போலவே இதுவும் இயங்கிவருகிறது.

முதல் முதலாக இந்தியாவில் இந்த ஆராய்ச்சி நிலயத்தில்தான் 'எலக்ட்ரான் மைக்ராஸ்கோப்' அமைத்தார்கள். ரேடார், எரி நட்சத்திரம், காஸ்மிக் கிரணம், கிரக சஞ்சாரம் இவை சம்பந்தமான ஆராய்ச்சிக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் இங்கே இருக்கின்றன. முக்கியமாக ஒன்பது பிரிவுகள் இங்கே அமைந்துள்ளன. நிறை, எடை, யந்திரத் தொழில், உஷ்ணமும் சக்தியும், பார்வைக் குரிய கண்ணாடி, எலக்ட்ரானிக்ஸ், ரசாயனம் இவை சம்பந்தமாகவும், மின்சார பாட்டரியின் பகுதியான கார்பன் எலக்ட்ரோடு தயாரிக்கும் முறை, காதுக்குக் கேட்காத ஒலி அலைகள், பிளாஸ்டிக் பொருள்களின் தன்மை இவைகளைப்பற்றியும் இங்கே ஆராய்ச்சி நடக்கிறது.

ஆராய்ச்சிச்சாலையின் நேர்த்தியான கட்டிடம்

இங்கே பௌதிக சம்பந்தமான நூல்கள் சுமார் 10,000 கொண்ட லைப்ரரி ஒன்று இருக்கிறது. விஞ்ஞான சம்பந்தமான பத்திரிகைகளும் 250-க்கு மேல் இங்கே படிக்கலாம். ஐ. நா. சபையின் விஞ்ஞான இலாகாவுடன் ஓர் ஏற்பாடு செய்துகொண்டு விஞ்ஞான சம்பந்தமான விவரங்களையும் படங்களையும் எடுக்கவும், விஷயங்களை விளக்கவும் உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள்.

இந்தக் கட்டிடம் கட்டத் திட்டமிடுவதற்கு முன் அங்கங்கே பல நாடுகளில் உள்ள ஆராய்ச்சிக் கூடங்களின் அமைப்பைக் கவனித்துத்தான் மேலே நடக்கவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்தார்கள். ஆகவே, மிகவும் சிறப்பாகவும் புதிய முறையிலும் ஆராய்ச்சிக்கூடம் அமைந்திருக்கிறது. காற்று வசதி, அறைகளின் அளவை மாற்றிக்கொள்ளும் வசதி இவை எல்லாம் கூட இருக்கின்றன.

சிறந்த விஞ்ஞானிகள் பலர் இந்த ஆராய்ச்சி நிலையம் சர்க்கார் பெருமைப்படக்கூடிய சிறந்த கட்டிடம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலுள்ள வெவ்வேறு பகுதிகளை நிர்வகித்துவரும் உதவி டைரக்டர்களின் திறமையை அவ்வப்போது இங்கே வரும் பிரமுகர்கள் பாராட்டியிருக்கிறார்கள். பௌதிகத் துறையில் பல அரிய சாதனைகளுக்குப் பெயர் போனது இந்திய நாடு; இதன் விஞ்ஞான வளர்ச்சிக்கு அறிகுறியாகப் புது டில்லியில் உள்ள பௌதிக நிலையம் இன்று தலைசிறந்து விளங்குகிறது.

முடிவு வந்தது

ஆள்-1: 'என்ன வந்தாலும் சரி; முடிவுவரையில் உன்னோடு நண்பனாயிருப்பேன்' என்று நேற்று என்னிடம் நீ சொன்னது ஞாபகம் இருக்கிறதா?

ஆள்-2: ஆஹா! இன்னமும் தான் நான் அப்படியே சொல்கிறேன்; மனப்பூர்வமாகவே சொல்கிறேன்.

ஆள்-1: அடடா! உன்னைப்போல் உண்டா? கொஞ்சம் பணம் வேணும். இரண்டு டாலர் தான். கடன் கொடுப்பாயா?

ஆள்-2: சரிதான். முடிவு வந்துவிட்டது!

—'ஸவுத் சைனு மார்னிங் போஸ்ட்'

தலையணைக்குப் பதில் குளிரணை

தலையணை (பில்லோ) இப்போது தலையணையாக இல்லை. எருக்கம் வெந்துபோகும் நாட்களில் மிகவும் உதவியாக இருக்கத் தக்க குளிரணை (சில்லோ) இப்போது வந்துவிட்டது. தலையணை உறைக்குள் ப்ளாஸ்டிக் அட்டை ஒன்றில் தண்ணீர் சுழன்றுகொண்டிருக்கும்படி செய்து வைத்திருக்கிறார்கள். மிகவும் புழுக்கமாயிருக்கும் நாட்களில், அந்தத் தண்ணீருக்குள் சில ஐஸ் கட்டிகளையும் நாம் போட்டுவைக்கலாம்.

—'மகஸீன் டைஜெஸ்ட்'

நாவல் எழுத ஆசை கொண்டான்
ஒரு வாலிபன்; விளைந்தது என்ன?
அதுதான் ஒரு விந்தை.

மூடன்

★

"நாம் ஏதாவது விளையாட்டு ஆடலாமே!" என்று சொன்னாள் நடிகை.

"புதுமையான மிகவும் ஆனந்தமான விளையாட்டு ஒன்று எனக்குத் தெரியும்" என்றான் ஃபெர்டிஷெங்கோ.

"அதென்ன விளையாட்டு?" என்று கேட்டாள் நடிகை.

"சொல்கிறேன், அதை முன்னே ஒரு கூட்டத்தில் ஒரு நண்பர் சொன்னதன் பேரில் தாங்கள் பரீட்சித்துப் பார்த்தோம். எல்லாரும் மேஜைமுன் அவரவர் இருக்கும் நாற்காலியை விட்டு எழுந்திருக்க வேண்டியதில்லை. உட்கார்ந்தபடியே தம்மைப்பற்றி ஒரு விஷயம் சொல்ல வேண்டும்; தம்முடைய வாழ்க்கையிலேயே மிகவும் கேவலமான ஒரு செயல் என்று அவர் உண்மையிலேயே எதைக் கருதுகிறாரோ அதை அவர் சொல்ல வேண்டும். உள்ளபடி ஒளிக்காமல் சொல்லவேண்டும். அதுதான் முக்கியம். பொய் சொல்லக் கூடாது."

—டாஸ்டவிஸ்கி எழுதிய 'மூடன்' (இடியட்).

அழகான ஒரு வாலிபன். டென்னிஸ் வெப்மான் என்று அவனுக்குப் பெயர். ஐக்கிய அமெரிக்காவில் ஃப்ளாரிடா என்ற நகரம் அவன் பிறந்த இடம். அங்கிருந்து 1951-இல் மன்ஹாட்டன் நகருக்குப் போய்ச் சேர்ந்தான். முதல்முதலாக ஒரு நாவல் எழுதத் திட்டமெல்லாம் போட்டுக் கொண்டே இப்படிச் சென்றான். ஆனால், கற்பனை ஒன்றும் ஓடவில்லை. இந்தச் சமயத்தில் ஹார்லோ ஃப்ரேடன் என்ற ஒரு நண்பன் அவனுக்குக் கிடைத்தான். தன் பெற்றோர்களை விஷமிட்டுக் கொல்லப் போவதாக, இந்த 'ஆசிரிய'னிடம் ரகசியமாக நண்பன் தெரிவித்தான். கதை எழுத இதுவே அருமையான விஷயமாயிருக்குமே என்று பட்டது 'ஆசிரிய'னுக்கு.

சென்ற ஆகஸ்டு மாதத்தில் இது நடந்தது. தன் பெற்றோரை ஏமாற்றி, 'ஸயனைடு' என்ற விஷங் கலந்த சாராயத்தை அவர்கள் குடிக்கும்படி செய்தான் நண்பன். வாலிப 'ஆசிரியன்' அப்போதெல்லாம் வெளிவராந்தாவில் ஒரு மூலையில் பதுங்கி உட்கார்ந்தபடி, இந்த நிகழ்ச்சிபற்றிய குறிப்புக்களை மிக்க விவரமாக எடுத்துக்கொண்டான். கிழவனும் கிழவியும் முன்னேற்பாடாகத் திட்டமிட்டுத் தற்கொலை புரிந்துகொண்டதாக, நண்பனும் 'ஆசிரிய'னும் பொய்க்கதை ஒன்றைக் கட்டிவிட்டார்கள்.

காப்பிரைட்: டைம் (31-5-'54), சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

நாலுமாத காலம் இந்தக் கொலைகளைத் தற்கொலைகள் என்றே போலீஸ் தஸ்தாவேஜி களில் எழுதி வைத்திருந்தார்கள்.

பிறகு ஒரு நாள் இந்தப் புது 'நாவலாசிரிய' வாலிபனும் இலக்கிய ஆர்வம் கொண்ட இளம் பெண் ஒருத்தியும் சந்தித்தார்கள். டாஸ்டவிஸ்கீ குறிப்பிட்ட விளையாட்டை நடத்தினார்கள். வாலிப 'நாவலாசிரியன்' இந்தக் கொலையைப்பற்றி அவளிடம் சொன்னான். அவளுக்குத் திகில் பிடித்தது. விஷயத்தைப் போலீஸாருக்குத் தெரிவித்தாள்.

பெற்றோரைக் கொலை செய்த ஃப்ரேடன் பைத்தியம் என்று சொல்லி, மட்டிவான் ராஜாங்க ஆஸ்பத்திரிக்கு அவனைப் பிரவரி மாதமே அனுப்பிவிட்டார்கள். ஆனால், 'நாவலாசிரியன்' வெப்மான் மனைவியாதி பிடித்தவனாயிருந்தாலும், சட்டரீதியில் பைத்தியம் அல்ல என்று மனநோய் நிபுணர்கள் (ஸைக்கியாட்ரிஸ்ட்ஸ்) சொல்லி விட்டார்கள். சென்ற வாரம் இந்தப் புது 'நாவலாசிரிய' னுக்கு இருபது வருஷக் காவல் தண்டனை விதித்துவிட்டார்கள்.

நாவலாசிரியனை 'ஸிங் ஸிங்' சிறையில் கொண்டு போய்த் தள்ளினார்கள். அவன் ஒரு டைப்ரைட்டர் வேண்டுமென்று கேட்டான். ஆசாமி நாவலைத் தொடங்கத் தயாராகிவிட்டானே!

'நீ படித்தவனா?'

சர்வகலாசாலை ப்ரொஃபஸர் ஒருவர் தம் மாணக்கர்களுக்கு ஓர் உபதேசம் செய்வது வழக்கம். அது இதுதான்: இதோ இந்தக் கேள்விகளுக்கு அந்தரங்க சுத்தியோடு எவன் 'ஆம்' என்று விடையளிக்கிறானோ, அவனே உண்மையான கல்வி கற்ற படிப்பாளி:

சகல நல்ல காரியங்களிலும் உனக்கு அநுதாபம் உண்டாகிறதா?

பலவீனனைச் சகோதரன்போல் பாதுகாப்பாயா?

நண்பர்களைச் சம்பாதித்து அவர்களுடைய நட்பைக் காப்பாற்றிக்கொள்வாயா?

நாணயமான ஓர் ஆண் அல்லது பெண்ணின் முகத்தைப் பார்த்துத் தைரியமாய்ப் பதிலளிப்பாயா?

குழந்தைகளைக் கண்டாலே அன்பு கொள்வாயா?

ஏதாவது ஒரு காரியத்துக்குப் பயன்படுவாயா?

தனிமையில் உன் சிந்தனையையே தோழனாகக் கொண்டு இன்பமடைவாயா?

தெருவிலே எதிர்ப்படும் அழுக்குத் தண்ணீர்க் குட்டைகளில் அழுக்கை விட்டு வேறு நல்ல உண்மைகளைக் காண உன்னால் முடியுமா?

—'யுவர் ஹெல்த்'

அமெரிக்க ஜனாதிபதி ஆசை



—'அமிர்த பஜார் பத்திரிகை'

புராணங்கள் என்றால் நம்மிலே சிலர் கேலி செய்யலாம்; ஆனால், இந்த ருஷியரோ...!

ருஷியாவில் ஸம்ஸ்கிருதம்

வி. கலியானோவ்

சரித்திரம் (ஹிஸ்டரி), மொழி நூல் (ஃபைலாலஜி) இலாகாவில்சேர்ந்துபடிக்க 1920-ஆம் வருஷம் லெனின்கிராடு சர்வ கலாசாலையில் என்னை அநுமதித்தார்கள். அப்பொழுதுதான், இந்திய மொழிகளையும், இந்திய இலக்கியத்தையும்பற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதற்குமுன்பு மரியுபோல் என்ற ஊரில் ஒரு தொழிற்சாலையில் 'பாட்டர்ன்' செய்யும் ஒருவனாக வேலை செய்துவந்தேன். என் தந்தையும் இதே வேலையில்தான் இருந்தார். சிறுவயதுமுதற்கொண்டே இந்தியாவும் அதன் புராதனப் பண்பாடும் என் உள்ளத்தை வெகுவாய்க் கவர்ந்திருந்தன. லெனின்கிராடு சர்வ கலாசாலையில் சேரும்போது இந்திய மொழிகளைப்பற்றியே எனக்கு ஒன்றும் தெரியாது. இந்தியாவில் ஒரே ஒரு பாஷைதான் இருப்பதாக எண்ணியிருந்தேன்.

ஸ்சேர்பாட்ஸ்கி என்பவர் எனக்கு ஆசிரியராக இருந்தார். அவர் பிரபல விஞ்ஞான நிபுணர். அதோடு ஹிந்து தத்துவ நூல்களைப்பற்றியும், பௌத்த மதத்தின் பண்பைப்பற்றியும் நன்கு அறிந்தவர். ஸம்ஸ்கிருதத்தின் மீதும் இந்தியப் பண்பின்மீதும் என் இளம் உள்ளத்தில் ஓர் ஆசையை எழுப்பியவர் அவரே!

அவரிடம் நான் ஸம்ஸ்கிருதம் கற்கத் தொடங்கினேன். முதல் முதல் ஸம்ஸ்கிருத அட்சரங்களைக் கற்றுக்கொண்டு, விடாமல் படித்து வந்தேன். ஆரம்பத்தில் ப்ரொஃபஸர் ஜி. புஹ்லர் என்பவருடைய பிரசித்தமான பாடபுஸ்தகத்தை வைத்துக்கொண்டு படித்தோம். பிறகு மகாகவி காளிதாசனுடைய சிறந்த காவியமாகிய மேகதூதத்தை மல்லிநாதரின் வியாக்கியானத்தோடு வாசித்தோம். தண்டியின் 'தசகுமாரசரித'த்தையும், காளிதாசனின் 'சாகுந்தல'த்தையும் படித்த பிறகு, காவியாலங்காரம், வேதாந்தம், வியாகரணம் முதலிய சாஸ்திரங்களையும் படிக்கத் தொடங்கினோம். என் ஆசிரியர் ஸ்சேர்பாட்ஸ்கிக்கு இந்தச் சாஸ்திரங்களைப் பயிலுவதில் விசேஷ ருசி உண்டு. ஆகவே, எங்கள் படிப்பில் இவை முக்கிய ஸ்தானம் பெற்றிருந்தன.

என் அடுத்த ஆசிரியர் ஏ. பி. பாரான்னிகாவ் என்பவர். அவர்தான் ருஷியாவில் இந்திய மொழி நூல் பயிற்சியை ஆரம்பித்து வைத்தவர். அவரிடம் ஸம்ஸ்கிருதமும் வேறு இந்திய மொழிகளாகிய ஹிந்தி, உருது, மராட்டி இவைகளும் படித்து வந்தேன். அவற்றோடு இந்திய இலக்கியம், மொழிகளின் இலக்கணம் ஆகியவை

மூலம்: ஸண்டே கிரானிக்கிள் (ஆங்கிலம்: 6-6-'54), பம்பாய்.

களைப்பற்றியும் படித்துத்தெரிந்து கொண்டேன். சமீபத்தில் காலம் சென்ற தாஊத் ஆலி தத் என்பவரிடம் ஹிந்துஸ்தானியும் பயின்றேன். நான் சர்வகலாசாலையில் படித்துக்கொண்டிருக்கும் பொழுது, ஆசிரியர் எஸ். எஃப். ஓல்டன்பர்க் என்பவர் உயிரோடு இருந்தார். அவரிடமும் அப்போதைக்கப்போது விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் வசதி எனக்கு வாய்த்தது. 'கௌடில்யரின் அர்த்த சாஸ்திர'த்தை ருஷிய பாஷையில் மொழிபெயர்த்திருந்தார்கள். அந்த மொழிபெயர்ப்பைப்பற்றிச் சர்ச்சை செய்யும் பொருட்டு 1932-ஆம் வருஷம் 'யு. எஸ். எஸ். ஆர். அக்காடமி அவ் ஸயின்ஸஸ் இன்ஸ்டிட்யூட் அவ் ஓரியண்டல் ஸ்டடீஸ்' என்ற கீழ்நாட்டு ஆராய்ச்சிக் கழகம் கூட்டிய கூட்டத்துக்கு வரும்படி நான் வாலிபனாக இருக்கும்போதே எனக்கு அழைப்பு வந்தது.

1941-ஆம் வருஷம் ஜூலை மாதத்தில் எம். எஸ்ஸி. பட்டம் பெறும் பொருட்டு, 'ஸம்ஸ்கிருதத்தில் ஸமாஸ பதங்கள்' என்னும் விஷயத்தைப்பற்றிக் கட்டுரை எழுதி முடித்தேன். அப்பொழுது என்னுடன் போட்டியாக எழுதியவர்கள் என் ஆசிரியர்களாக இருந்த ஸ்செர்பாட்ஸ்கி, பாரான்னிகாவ் இருவருமே யாவர்.

இந்திய மொழிகளைப் படிக்கும் பொழுது எனக்கு ஸம்ஸ்கிருதத்தில்தான் அதிக நாட்டம் ஏற்பட்டது. மொழியின் வளம், உச்சரிப்பின் விசேஷம் ஆகியவைகளுக்காக மட்டும் எனக்கு அதில் பற்றுதல் உண்டாகவில்லை. இந்தியாவில் 4,000 வருஷகாலமாக உள்ள தனி இலக்கியத்தின் சிறப்பும், அதன் விசேஷப்பண்புகளும் ஸம்ஸ்கிருத மொழியின் மூலமாக அல்லவா தெரிகின்றன என்று நான் வியந்தேன். தேசம் முழுவதும் ஒன்று சேர்ந்து ஒரே பண்பாட்டுடன் விளங்குவதற்கு ஸம்ஸ்கிருத பாஷையே காரணமாகும் என்பதும் என் பற்றுதலை அதிகரிக்கச் செய்தது.

எங்கள் நாட்டில் படிப்பவர்களுக்கு இந்திய இலக்கியத்திலேயே விசேஷ சிரத்தை ஏற்பட்டுவிட்டது. இந்திய இலக்கியத்தில் ஐந்து விதமான தனிச் சிறப்புக்கள் உள்ளன என்று ஆசிரியர் பாரான்னிகாவ் ஆராய்ந்து கூறுகிறார். அவைகளாவன: (1) மிகப் பழமையானது என்பதுடன் வெகுகாலமாய்த் தொடர்ந்து வளர்ந்து வந்திருக்கிறது. அதைப் போல் பழமையாகவும் நடுநடுவே விட்டுமுறாமலும் செழித்து வளர்ந்திருக்கும் இலக்கியம் வேறு எதுவுமில்லை என்று கூறலாம். (2) நூலின் அளவிலும் சரி, குணத்திலும் சரி இலக்கிய சம்பிரதாயத்தைப் பின்பற்றி நிற்கும் விசேஷத்தையும் குறிப்பிட வேண்டும். (3) இலக்கியத்தில் எத்தனையோ வகைகள். இந்த விஷயத்தில் ஐரோப்பிய இலக்கியத்துக்குச் சமானமாகச் சொல்லலாம். (4) இலக்கிய வகையில் வளர்ச்சி பெற்றிருக்கும் ஒரு தனிச்சிறப்பு; (5) காவிய நடையிலும் அதற்கென்றே உரியதான ஒரு தனிப் பாணி ஆகியவைகளையும் குறிப்பிட வேண்டும்.

இந்திய இலக்கியச் செல்வம் எல்லாவற்றினுள்ளும் இந்தியப்

புராணக் கதைகள்தான் என் உள்ளத்தை வெகுவாய்க் கவர்ந்தன. இன்றும் எனக்கு அவைகள் மீதுள்ள நாட்டம் குறையவில்லை. ஏனென்றால், அவைகளிலுள்ள விஷயம், கருத்து, பாஷை, சொல் அலங்காரம் யாவும் சிறிதும் மாறாமல் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஒரு நூற்றாண்டுக்கு முன்பே அவைகள் ருஷிய மக்களுக்குப் படிக்கக் கிடைத்துவிட்டன. 1844-ஆம் வருஷம் மகாபாரதம் அரண்ய பர்வத்திலிருந்து 'நள - தமயந்தி' கதையை ருஷிய பாஷையில் மொழிபெயர்த்தார்கள். நான் பள்ளிப் பையனாக இருக்கும்பொழுதே எனக்கு இந்தக் கதையைப் படிப்பதில் மிகவும் இன்பம் உண்டாயிற்று. ஆசிரியர் பாரான்னிகாவ் சொன்னதற்கு இணங்கி மகாபாரதத்திலிருந்து ஆதிபர்வத்தை ருஷிய பாஷையில் நான் மொழிபெயர்க்க இசைந்ததற்கு 'நள-தமயந்தி' கதைதான் முக்கியத் தூண்டுகோலாக இருந்தது. மகாபாரதத்தைத் தொடர்ந்து மொழிபெயர்க்க நான் தீர்மானித்ததற்கும் இதுவே காரணம். மகாபாரத நூலைப் பற்றி இந்துக்கள் பெருமை கொள்வதில் அதிசயம் ஒன்றும் இல்லை. அதிலுள்ள விஷயங்களையும், அதன் நீளத்தையும் நோக்கும்பொழுது, எவ்வளவோ காலமாக இந்துக்களின் பலவேறு வரலாறுகளை விளக்கும் கலைக் களஞ்சியம் (என்ஸைக்ளோப்பீடியா) என்றே அதைக் கூறலாம்.

கொஞ்ச காலத்துக்கு முன்பு 'கௌடில்யரின் அர்த்த சாஸ்திர'த்தை ஸம்ஸ்கிருதப் பேராசிரியர்கள் எஸ். எஃப். ஓல்டன்பர்க், இ. இ. ஓபெர்மில்லர் இருவரும் மொழிபெயர்த்தார்கள். அதைப் புத்தகமாக வெளியிட இப்போது நான் தயார் செய்து கொண்டிருக்கிறேன். தவிர, என் சொந்தப் புத்தகங்களும் இரண்டு இருக்கின்றன. ஒன்று, 'இதிகாச ஸம்ஸ்கிருதத்தில் இறந்த காலச் சொல்லமைப்பு'; மற்றது, 'ருஷியாவிலும் ஸோவியத் யூனியனிலும் ஸம்ஸ்கிருத ஆராய்ச்சியின் வரலாறு'.

ஸோவியத் கீழ்நாட்டுக் கலை ஆராய்ச்சிக் கழகத்தில் என் வேலையைக் கவனித்து வருவதோடு, லெனின்கிராடு யூனிவர்ஸிட்டியின் கீழ்நாட்டு இலாகாவில் ஸம்ஸ்கிருத போதனை புரியும் ஆசிரியனாகவும் நான் இருந்து வருகிறேன்.

தலைமை தாங்கும் கஷ்டம்

இந்தக் காலத்தில் ஜனங்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் வேலை பெருங் கஷ்டமாயிருக்கிறது. ஏனென்றால், அவர்கள் உங்களைப் பின்பற்றுகிறார்களா, அல்லது துரத்துகிறார்களா என்று உங்களால் நிச்சயிக்க முடிவதில்லை.

—'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்'

அச்சம்

அச்சம் என்பது அன்பினும் வலிய உணர்ச்சியாகும்.

—பிளினி.

தெற்கே கால் நீட்டக்கூடாது நமக்கு; வடக்கே தலை வைக்கக்கூடாது ஜப்பானியருக்கு. இரண்டும் ஒன்றுதானே!

ஒரு சொல்

எஸ். யோஷிமுரா

அநேகம் ஆங்கிலச் சொற்கள் லத்தீன், கிரேக்க மொழிகளிலிருந்து வந்தவை. ஜப்பானியரும் இப்படிச் சீனமொழியிலிருந்து அநேகம் சொற்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்; சமீப காலத்தில் அமெரிக்கச் சொற்களையும் இப்படிச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இருந்தாலும் ஒரே சொல், 'ஒரு மதம் தோன்றின காலம்,' 'ஒரு மீனின் விஷம்' என்று இந்தமாதிரி வெவ்வேறு விதமான பொருள் தரும் சொற்களிலிருந்து வந்ததென்றால் அது சர்வசகஜம் என்று சொல்ல முடியுமா?

'கிடாமாகூரா' என்ற அந்தச் சொல்லுக்குச் சாவு என்று பொருள். இது 'ஒரு நேபாளி ராஜகுமாரன் தோற்றுவித்த ஒரு மதம்', 'ஒரு திசை', 'ஃபுகு என்ற ஒரு மீன்' இப்படிப் பலவும் ஒன்று சேர்ந்து சாவு என்று பொருள் படும் சொல்லாக அமைந்துவிட்டது. 'கிடாமாகூரா' என்றால் ஜப்பானில் எல்லாருக்கும் தெரிந்த விஷயம்; அங்கே கடைப்பிடிக்கும் ஒரு வழக்கம் அது. புத்த பகவானுக்கும் அதற்கும் ஃபுகு என்ற ஒரு வகை மீனுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு.

'ஃபுகு வா குயிடாஷி ஈனேசி வா ஓஷிஷி' என்பது ஒரு ஜப்பானியப் பழமொழி. இதன் பொருள்: 'ஃபுகு என்ற விஷமீனைச் சாப்பிட வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது; ஆனால் நான் சாக இஷ்டமில்லை.' 'தேன் இனிப்பாகத்தான் இருக்கிறது; ஆனால் தேனீ கொட்டிவிடுமே' என்ற அமெரிக்கப் பழமொழியைவிட ஜப்பானியப் பழமொழி ஆழ்ந்த கருத்து அமைந்தது.

இந்த மீன் வெள்ளையாகவும் மிகவும் ருசியாகவும் இருக்கும்; போஜன ரசிகர்களுக்குப் பிரியமானது. அதோடு நரம்பு சம்பந்தமான நோய்களைப் போக்கும் அருமருந்தாகும். சிறிதளவு சாப்பிட்டால் உடம்புக்கு நல்லது தான்; ஆனால் அளவுக்கு மிஞ்சினால் ஆளையே தீர்த்துவிடும்.



மூலம்: ஜப்பான் டைஜெஸ்ட் (ஆங்கிலம்: ஏப்ரல் '54), டோக்கியோ.

இப்போது இருக்கும் சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்த புதிதில் ஃபுகுயாநாகி என்ற பிரபல மல்யுத்தக்காரன் இப்படித்தான் ஏமுமாருக இந்த விஷமீனைத் தின்றுவிட்டு இறந்து போனுன்.

இதன் ரத்தம், கருப்பை, ஈரல் இவைகளில் விஷம் அதிகமாக இருக்கிறது. கருத் தரிக்கும் ஃபுகு மீனைப்போல் அபாயமான உணவு வேறென்றுமே இல்லை; இது ஆளை உடனே கொன்றுவிடும். இதன் விஷத்துக்கு டெட்ரோடாக்வின் என்று பெயர்.

இந்த மீனை அஜாக்கிரதையாகவோ தவருன விதத்திலோ சமைத்தால் ஆபத்துத்தான். ஒவ்வோர் ஆண்டும் இதற்கென்று ஒரு பரீட்சை நடக்கிறது. அதில் தேறினவர்களுக்குத்தான் இதைச் சமைக்கவோ விற்கவோ அதிகாரம் உண்டு. இது மிகவும் கடினமான பரீட்சை; சமையலில் நீண்ட நாள் அநுபவம் இருந்தால்தான் இதில் தேற முடியும். மீன்களைப் பற்றிய விஷயமெல்லாம் வேறு தெரிந்திருக்க வேண்டும்.

ஜப்பானிய ஹோட்டல் ஒன்றின் முதலாளியும், இதில் அநுபவமுள்ள ஒரு சமையற்காரனும், "சாதாரண மீன்களைக் கழுவிச் சமைப்பதற்கு வேண்டியிருப்பதைவிடப் பத்து மடங்கு நீர் இதற்கு வேண்டியிருக்கும்" என்ருர்கள்.

முதலில் இதன் ரத்தத்தைச் சொட்டுக்கூட இராதபடி நன்ருக வடித்தாக வேண்டும். இதுதான் மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம்.

கிடாமாகூரா என்பது இந்த ஃபுகு மீன் வகையில் ஒன்று; இது மிகவும் சின்னஞ் சிறியதாக இருக்கும். இதை எப்படிச் சமைத்தாலும் சாப்பிடவே கூடாது; தப்பித் தவறி அப்படி ஒரு துண்டு விழுங்கினல் போதும்; உடனே உலகத்தை விட்டு விடை பெற்றுக் கொள்ள வேண்டியதுதான்.

இந்த மீன் இன்னும் ஒரு குருட்டு நம்பிக்கைக்கும் காரணமாக இருக்கிறது. 2,500 ஆண்டுகளாக இருந்து வரும் பௌத்த மதத்துக்கும் இதற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு; இது மிகவும் முக்கியமான விஷயம்; சரித்திர பூர்வமானது.

2,542 ஆண்டுகளுக்கு முன் ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதி நடந்த விஷயம்: இளவரசரான கௌதம சித்தார்த்தருக்கு அப்போது வயது 29 இருக்கும். அன்றுதான் நம்பிக்கை, அன்பு இந்தக் கொள்கைகளைக் கடைப்பிடித்து மக்களை உய்விக்கவேண்டும் என்ற உறுதியுடன் அவர் அரண்மனை இன்ப வாழ்வை விட்டுத் துறவறத்தை மேற்கொண்ட நாள். ஆறு ஆண்டுகள் கடுமையாகத் தவம் செய்து துன்பங்களை ஏற்று அநுபவித்தபின் 'நிர்வாணம்' என்ற முக்தி மார்க்கத்தைப் போதிக்கும் பௌத்த மதக் கருத்துக்களைக் கண்டறிந்தார். நன்மையே புரிவதென்ற உறுதி பூணுதல்; நற்செயல்களையே செய்தல்; நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தல்; நல்வாழ்க்கை நடத்தல்; நல்ல முயற்சி; நல்லதையே எண்ணுதல்; நல்ல முறையில் தியானம் மேற்கொள்ளுதல் - இப்படி எட்டு வழிகள் கொண்ட உயர்ந்த மதம் அது.

கடைசியில் 80-ஆம் வயதில் கங்கைக்கரையில் ஒரு மரத்தடியில் அமைதியாகப் படுத்தபடி அவர் முக்தி அடைந்தார். அம்

போது அவர் தலைப்பாகம் வடக்குப் பக்கமாக அமைந்து, முகம் மேற்குத் திசையைப் பார்த்தபடி இருந்தது. இந்தமாதிரி படுப்பதை ஜப்பானியப் பௌத்தர்கள் 'ஜூஹூகு-கான்ஸெய்' என்கிறார்கள். புத்தர் முக்தி அடைந்த பிறகுதான் இந்த வழக்கம் ஏற்பட்டது.

ஜப்பானில் எந்த வீட்டில் விருந்தாளியாக வந்து நாம் தங்கினாலும் வடக்குப் பக்கம் தலைவைத்துப் படுக்கவிட மாட்டார்கள். நம் வீட்டில் ஜப்பானிய வேலைக்காரனோ வேலைக்காரியோ யாராவது இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; என்ன அசந்தர்ப்பம் இருந்தாலும் சரி, கிழக்கு, மேற்கு, தெற்கு இந்த மூன்று பக்கத்தில் ஏதாவது ஒரு பக்கம் தலைவைத்துப் படுப்பார்களே யொழிய வடக்குப் பக்கம் தலையை வைக்கவே மாட்டார்கள். வடக்கு என்றால், 'கிடாமாகூரா' அதாவது, சாவுதான்.

ஜப்பானியக் குடும்பங்களில் யாராவது இறந்து போனால் அவர் உடலை 'புத்ஸூ-தான்' என்னும் குடும்ப பூஜைப் பீடத்துக்கு எதிரில் அடக்கம் செய்வார்கள். அப்போது தலையை வடக்குப் பக்கமாகவும் முகத்தை மேற்குப் பக்கம் பார்த்தபடியும் வைப்பது வழக்கம்.

ஆகவே, நாம் யாராவது ஒரு ஜப்பானியர் வீட்டில் தங்கும் போது அவர், "கிழக்கோ, தெற்கோ, மேற்கோ தலை வைத்துப் படுங்கள்" என்று அடிக்கடி சொன்னால், நம் உயிருக்கு ஓர் ஆபத்தும் நேராதிருக்க வேண்டுமென்றுதான் அப்படிச் சொல்கிறார் என்று தெரிந்துகொள்ள வேண்டும். நம் வீட்டில் இருக்கும் ஜப்பானிய வேலைக்காரனோ வேலைக்காரியோ இந்த விஷயத்தில் தங்கள் இஷ்டப்படி நடக்கும்படி விட்டுவிடுங்கள். இல்லாவிட்டால் வடக்கே தலையை வைத்துக்கொண்டிருக்கிறோமே என்ற கவலையே பெருங் கவலையாகப் போய்த் தூக்கம் வராமலேகூட அவர்கள் மாய்ந்து போனாலும் போகலாம்.

மெனுஹின் பதில்

லண்டன் நடிகர் மார்க் வில்லியம்ஸ் என்பவருக்கு லான்ஸ் என்று ஒரு மகன். அவனுக்கு வயது நாலே நாலு தான். அவனிடம் சமீபத்தில் ஒரு வயலினைக் கொடுத்த போது, அதை வாசிக்க முயன்றான். முடியவில்லை. உடனே வயலினை முழங்காலில் வைத்து உடைத்து முறித்து விட்டான்.

"அவனை நான் என்ன செய்வது?" என்று அந்த நடிகர், பிரபல வயலின் நிபுணர் மெனுஹின் என்பவருக்குத் தந்தி அடித்தார்.

வயலின் நிபுணரின் பதில் மறு தந்தியில் வந்தது: "ஒன்றும் செய்ய வேண்டாம். நானும் நாலு வயதில் இப்படியேதான் செய்தேன்."

—'ஸண்டே க்ராஃபிக்'

திருட்டு

★

இந்தியாவில் முன்னே இருந்த 'இங்கிலிஷ்மான்' பத்திரிகைக்கும் 'ஸ்டேட்ஸ்மான்' பத்திரிகைக்கும் இப்படி ஒரு போட்டியும் விவகாரமும் நடந்ததாக ஒரு கதை சொல்லுவார்கள். அதன் உண்மை என்னவோ! அதற்கும் முந்தி நடந்துள்ள இந்தச் சம்பவத்தை, 'காரோனெட்'டில் மாரிஸ் மார்க்ஸ் என்பவர் எழுதியிருக்கிறர்.

1890-வாக்கில் நியூ யார்க் நகரில் நடந்து வந்த 'வொர்ல்டு' என்ற பத்திரிகைக்கும் 'ஜர்னல்' என்ற பத்திரிகைக்கும் போட்டா போட்டி; விரோதம் முற்றிவிட்டது. இத்தனை நாள் இடைஞ்சல் எதுவும் இன்றி உள்ளூரில் நடக்கும் பரபரப்பூட்டும் செய்திகளை வெளியிட்டு வந்த தங்களுக்குப் போட்டியாக இப்படி ஒரு பத்திரிகை முளைத்து விட்டதே என்று 'வொர்ல்டு' நிர்வாகிகளுக்கு ஒரே எரிச்சல். 'ஜர்னல்' பத்திரிகைக்குப் பாங்கியில் ஏராளமான மூலதனம், தீவிர முயற்சி, பக்கபலம் எல்லாம் இருந்தன. பரபரப்பூட்டும் செய்திகள் என்ருல் பிய்த்துக்கொண்டு போய்விடுவார்கள் பத்திரிகையை; அப்படிப்பட்ட காலம். விலையும் சரசம்: ஒரு சதம்; அதாவது, ஒரு பென்னி (கிட்டத் தட்ட ஓர் அணு).

அப்போது ஸ்பெயினுக்கும் அமெரிக்காவுக்கும் போர் நடந்து கொண்டிருந்தது. அமெரிக்க ரியர்-அட்மிரல் ஸாம்ப்ஸன் தம் கப்பற் படையுடன் கியூபாவுக்கு அருகில் எங்கோ இருந்தார். தியோடோர் (டெட்டி) ரூஸ்வெல்ட் அமெரிக்க ஜனுதிபதி ஆகப் போகும் சமயம்.

போர்த் தகவலை முன்னதாகவே தெரிந்துகொள்வதற்காக 'ஜர்னல்' காரியாலயத்துக்குத் தனிக் கப்பல் ஒன்று இருந்தது. அமெரிக்கக் கப்பல்படையைச் சேர்ந்தவர்கள் அதை எட்டிப் போகச் சொன்னபோதிலும், சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் 'ஜர்னல்' சிப்பந்திகள் எப்படியாவது முந்திக்கொண்டு தகவல் அறிந்துகொண்டு வந்துவிடுவார்கள். 'வொர்ல்டு' காரியாலயத்தாருக்கும் இப்படி ஒரு தனிக் கப்பல் இருந்தது. அதன் ஆசிரியருக்கு என்னதான் ஆவல் இருந்தும் அவ்வளவு விரைவில் தகவல் சேகரித்து வெளியிட முடியவில்லை.

இதனல் 'ஜர்னல்' பத்திரிகையில் விசேஷச் செய்தியாக வெளியான அதே தகவலைத் தங்களுக்கும் கிடைத்த மாதிரி பல பதங்களைச் சற்றே மாற்றி 'வொர்ல்டு' பத்திரிகையைச் சேர்ந்தவர்கள் வெளியிட்டு வந்தார்கள். அந்தக் காலத்தில் ரேடியோ டெலிஃபோனே, ரேடியோ மூலம் செய்தி பரப்பும் ஸ்தாபனமோ எதுவும் எற்

படவில்லை. உடனுக்குடன் கரை யோரம் போய்த் தகவலைச் சேர்ப் பிக்கவேண்டியிருந்தது.

வரவரத் தங்கள் பத்திரிகையில் வெளியாகும் தகவலும் 'வொர்ல்டு' பத்திரிகையில் வெளியாகும் தகவலும் இப்படி ஒன்றுவிடாமல் ஒத்து வருவதைக் கண்ட 'ஜர்னல்' பத்திரிகையைச் சேர்ந்தவர்களுக் குச் சந்தேகம் தட்டியது. இரண்டு காரியாலயத்தைச் சேர்ந்த கப்பல் களும் ஒரே சமயத்தில் ஒரே இடத் தில் இருந்துகொண்டு தகவல் சேகரிப்பதென்றால் நடக்காத காரி யம். ஏனென்றால், 'ஜர்னல்'காரரின் கப்பல், 'வொர்ல்டு'காரரின் கப்ப லான 'மூன்று சகோதரிகள்' என் பதைவிட வெகு வேகமாகப் போகக்கூடியது. ஆகவே, வெகு தூரம் முன்னாடி செல்லும்.

'ஜர்னல்'காரர்கள் தகுந்த ஆட்களை விட்டு உளவறிந்ததில் தங்கள் பத்திரிகையின் முதல் பக் கத்திலிருந்து 'வொர்ல்டு'காரர் கள் விஷயத்தை 'அபேஸ்' செய்து விடுகிறார்கள் என்று தெரிந்தது. 'ஜர்னல்'காரர்கள் இதை அம் பலப்படுத்துவதற்கு ஒரு யுக்தி செய்தார்கள்.

ஒருநாள் பிற்பகல் 'ஜர்னல்' பத்திரிகை பின் கண்ட பெரிய தலைப்புடன் வெளிவந்தது: "கர்னல் ரிஃப்ளிப் டபிள்யூ. திநூஸ் என்ற பிரபல ஸ்பானிஷ் ராணுவத்தலைவர் குண்டு பட்டுப் படுகாயமுற்று மாண்டார்."

அதற்குக் கீழே கர்னலின் வீரம், வயது, சாகும்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள் இவைகளைப்பற்றிய விவரம் வெளியாகியிருந்தது.

சொல்லி வைத்தாற்போல் இதற்கு அரைமணி நேரம் கழித்து 'வொர்ல்டு' பத்திரிகையின் விசே ஷப் பதிப்பு வெளிவந்தது; 'ஜர்னல்' செய்தியைவிடக் கொட்டை எழுத்துக்களில், "எங் கள் 'மூன்று சகோதரிகள்' என்ற கப்பலிலிருந்து கிடைத்த செய்தி- நம்பத் தகுந்த வட்டாரத்தி லிருந்து வந்த தகவல்: பிரபல ஸ்பானிஷ் ராணுவத் தலைவரும் மகா தீரருமான கர்னல் ரிஃப்ளிப் டபிள்யூ. திநூஸ் இன்று போரில் மாண்டார்!" என்று அதில் போட்டிருந்தது. அதன் கீழ் வெளியாகிய பிற விவரங்களும் அப்படியே 'ஜர்னல்' பத்திரிகையி லிருந்து திருடியவைதான்.

அப்புறம் கேட்பானேன்! அன்று 'ஜர்னல்'காரர் பாடு கொண்டாட்டந்தான். 'வொர்ல்டு' பத்திரிகையின் முதல் பக்கத்தை அப்படியே போட்டோ எடுத்துத் தங்கள் பத்திரிகையில் அச்சிட்டு, வெளியிட்டார்கள். அதற்குக் கீழே இப்படி விளக்கினார்கள்:

"வெகு நாளாக இப்படி எங்கள் விசேஷச் செய்தியை இவர்கள் திருடிப் போட்டு வருகிறார்கள் என்று எங்களுக்குச் சந்தேகந் தான். இதோ அதற்கு அத் தாட்சி பாருங்கள்: கர்னலுடைய பெயரின் முதல் பகுதியான ரிஃப்ளிப் (Reflipe) என்பதை அதற்குப் பின்னுள்ள டபிள்யூ (W.) என்ற எழுத்திலிருந்து தொடங்கித் திருப்பிப் படியுங்கள். பிறகு திநூஸ் (The nuz) என் பதைச் சேர்த்துக்கொள்ளுங்கள். 'வொர்ல்டு' நிர்வாகிகள், முதல் பக்கத்தில், 'வீ (We) பில்ஃபர் (Pilfer) தி (The) நியூஸ் (News)' என்று தாங்கள் செய்தி யைத் திருடியதை அப்படியே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், பாருங்கள்!"

காமன்வெல்த் நிலைக்குமா?

ஸர் கீத் ஹான்காக்

★★

நார்மன் ஏஞ்சேல்ஸ் போன்ற பிரபல பிரிட்டிஷ் எழுத்தாளர் சிலர் பழைய ஏகாதிபத்தியம் போயிற்றே என்று வருந்துகிறார்கள். காமன்வெல்த் அமைப்பு வலுவுள்ளதாயிருக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. அப்படிக்கின்றி, சர்வாதிகார சமத்துவ நாடுகள் அடங்கிய காமன்வெல்த், உலகத்துக்கே நலம் தரும் சக்தியாய் வளரும் என்று நம்பும் ஒருவர் இவர். இவருடைய இந்தக் கட்டுரையை இந்தியாவிலேயே முதல் முதலாக வெளியிடும் 'பிரத்தியேக' (எக்ஸ்க்ளூஸிவ்) உரிமையை, பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் இலாகாதார் 'மஞ்சரி'க்கு அளித்திருக்கிறார்கள்.

★★

அரை நூற்றாண்டுக்கு முன்பு-ஏன், கால்நூற்றாண்டுக்கு முன்பு என்றே சொல்லலாம்-இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைவிடக் காமன்வெல்த்தின் சக்தி பெரிதும் குறைந்துவிட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒரு காமன்வெல்த்தாக உருவாக வேண்டும் என்று அந்தக் காலத்தில் சொன்ன ராஜதந்திரிகள், இந்த மாதிரி நஷ்டம் நேரும் என்று நினைக்கவில்லை.

1917 மே 15-ஆம் தேதியில்தான், 'காமன்வெல்த்' என்ற வார்த்தையை முதல்முதல் அதிகார பூர்வமாக ஜெனரல் ஸ்மட்ஸ் உபயோகித்தார். "ரோம் ஓர் ஏகாதிபத்தியமாக இருந்தது. ஜெர்மனி ஓர் ஏகாதிபத்தியமாக இருந்தது. ஆனால், நம் அமைப்போ இவைகளினின்றும் மாறுபட்டது. நம் அமைப்பு ஒரு தேசம் (நேஷன்) அல்ல; பல தேசங்கள். ஒரு ராஜ்யம் (ஸ்டேட்) அல்ல; பல ராஜ்யங்கள். நம் அமைப்பை ஒரு 'காமன்வெல்த்' என்று நாம் சொல்லிக்கொள்வோம். சுதந்தரமே நம் வாழ்க்கை விதி. நம் ஒற்றுமையிலே சுதந்தரத்தைக் காண்போம். உலகத்திலே எந்தக் காலத்திலேனும் தோன்றியுள்ள எந்த ஏகாதிபத்தியத்தையும் விட அதிக சக்தி வாய்ந்தவர் நாம்" என்று அவர் முழங்கினர்.

ஓரளவு வரைக்கும் இந்தத் தீர்க்க தரிசனம் உண்மையாகிவிட்டது: சூரிய மண்டலத்தைச் சுற்றிக் கிரகங்கள் சுற்றுவது போல் பிரிட்டனை மைய ஸ்தானமாகக் கொண்ட ஏகாதிபத்தியம் முப்பத்தாறு வருஷங்களுக்கு

காப்பிரைட்: ஸ்பெக்டேட்டர் (ஆங்கிலம்), லண்டன்.

முன்பு இருந்தது. அதுபோல் இப்போது இல்லை. அதற்குப் பதிலாகப் பல மைய ஸ்தானங்களைக் கொண்ட ஒரு காமன்வெல்த் உருவாகியிருக்கிறது. காமன் வெல்த்துக்குள் சுதந்தரம் என்பது சர்வாதிகார (ஸாவரின்) சமத்துவமாகிவிட்டது. ஐரோப்பியர்களே அதன் ஏகபோக உரிமையாளராக இருந்தது போய்விட்டது. மூன்று ஆசிய ராஜ்யங்கள் அதில் இப்போது பூர்ணப் பங்காளிகளாக இருக்கின்றன. "சுதந்தரம், அதிகாரம் ஓரிடத்தில் குவிந்திராமல் பரவியிருப்பது (டி-ஸென்ட்ரலை ஸேஷன்) இந்த இரண்டினாலும், பல அற்புதங்கள் விளைந்திருக்கின்றன" என்று 1911-ஆம் ஆண்டு இம்பீரியல் கான்ஃபரன்ஸில் ஜெனரல் போதா கோஷித்தார். அதேபோல இன்று, பண்டித நேரு வன், நிக்ருமா (கோல்டு கோஸ்ட் பிரதமர்) கூடத்தான் - கோஷிக்கலாம். ஆனால், போதா, ஸ்மட்ஸ் இந்த இருவரும் எதிர்பார்த்த அற்புதங்களெல்லாமே விளைந்திருக்கின்றனவா? அப்படியானால், சக்தி ஏன் இப்படிக் குறைந்திருக்கிறது?

சக்தி என்பது மூன்று விஷயங்களைச் சார்ந்திருக்கிறது: ஒன்று, ஏராளமாகப் பொருள் முதலிய வசதிகள் இருக்க வேண்டும்; இரண்டு அவைகளைத் திரட்டவும் பிரயோகிக்கவும் திறமை இருக்க வேண்டும்; மூன்று, அதற்கான சங்கல்பத் திறன் வேண்டும். (இன்னும் சில நுணுக்கமான அம்சங்களையும் அது சார்ந்திருக்கிறது. உதாரணமாக, உள்ளுக்குள்ளேயும் சரி, வெளிநாட்டு விவகாரங்களிலும் சரி; காமன்வெல்த் நாடுகள் ஒற்றுமையாயிருக்க வேண்டும். சொல்லப் போனால், காமன்வெல்த்தின் வெற்றிக்கு மற்ற எதையும்விட இதுதான் மிகச் சிறந்த பரீட்சையாகும்.) முதல் இரண்டு விஷயங்களும் கணக்கிட்டுச் சொல்லிவிடக் கூடியவை: ஆள்பலம் என்ன? தேசிய வருமானம் தலா எவ்வளவு? எஃகு எவ்வளவு உற்பத்தியாகிறது? விமானமும் கப்பலும் கட்டும் தொழிற்சாலைகள் எத்தனை இருக்கின்றன? தரையிலும் கடலிலும் உள்ள போக்குவரத்துப் பாதைகளைப் பாதுகாக்க எவ்வளவு சேனை தேவைப்படும்? இந்த மாதிரி புள்ளி விவரங்களை யெல்லாம் தயாரித்துவிடலாம். இந்தப் புள்ளி விவரங்களை யெல்லாம் மற்றவருடைய நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான், இவற்றின் குறை நிறைகளை மதிப்பிட முடியும். ஐரோப்பாவில் உள்ள போட்டி நாடுகளின் பலத்தோடு ஒப்பிட்டே, கிரேட் பிரிட்டன் அதிக பலமுள்ளது என்று நம் முன்னோர் எண்ணி வந்தார்கள். சென்ற அரை நூற்றாண்டில் நம் அரசியல் அமைப்பிலும் ஆட்சி முறைகளிலும் எவ்வித மாறுதலும் ஏற்பட்டிராவிட்டாலுங்கூட, இன்று நமது பலம் மற்றவருடைய பலத்தோடு ஒப்பிடுகையில் குறைந்துதான் போயிருக்கும். பிரிட்டனின் பலம் அப்படிக் குறைந்து போகுமானால், டொமினியன்கள் அந்தக் குறைவை ஈடுகட்டிவிடும் என்று முப்பது வருஷத்துக்கு முந்தி இருந்த புத்திமான்கள் நம்பினார்கள்; பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்கா வளர்ந்த அற்புதத்தைப் போலவே இருபதாம் நூற்றாண்டில் ஆஸ்திரேலியாவும்

இதர காமன்வெல்த் நாடுகளும் வளர்ந்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அந்த வளர்ச்சி நிகழவில்லை. ஆனால், ஜப்பானில் அந்த அற்புதம் நிகழ்ந்தது. சீனாவில் அது நிகழலாம்.

பஸிபிக் பிரதேசத்தில் உள்ள டொமினியன்கள் ஒரு தலை முறைக்குப்பின் சக்தியை உறிஞ்சுவதாக இருக்குமா அல்லது அதைப் படைப்பதாக இருக்குமா என்பதை யார் ஜோஸ்யம் சொல்ல முடியும்? ஆசிய நாடுகளுக்கும் ஆசிய-ஆஸ்திரேலியக் காமன் வெல்த் நாடுகளுக்கும் உள்ள பலா பலத் துலாக் கோலில், பாகிஸ்தான், இந்தியா இவற்றின் செல்வாக்கு எந்தப் பக்கம் சாயும் என்றுதான் யார் சொல்ல முடியும்? அவை இன்று ஒன்றின் பலத்தை ஒன்று வியர்த்தமாக்கும் நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. இது போகட்டும்; இன்றைய அரசியல் இடையூறுகள் எல்லாம் விலகிவிட்டாலுங்கூட, இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்று சேர்ந்து, இந்திய ராணுவம் பத்து வருஷத்துக்கு முன்பிருந்த பலத்தைப் பெறுமா என்பது சந்தேகந்தான். அவற்றின் பொருளாதார நிலைமையே இதற்குத் தடையாயிருந்து விடலாம். சென்ற பத்து வருஷத்துக்கு முன்புகூட இந்து மகா சமுத்திரப் பிரதேசத்தின் பத்திரத்தைப் பாதுகாக்க இந்திய ராணுவம் போதுமானதாயிருந்தது. இன்று இத்தகையதொரு முயற்சியைப் பாகிஸ்தான், இந்தியா இரண்டும் மேற்கொள்ள வேண்டுமானால், அதற்குரிய சங்கல்பம் அவைகளுக்கு வேண்டும். பழைய பிரிட்டிஷ் கொள்கையின் பெருமையையும் அதையே தொடர்ந்து இனியும் பின்பற்றுவதன் நன்மையையும் அவை மதிப்பிட்டு அறிந்து கொண்டால்தான், இந்தச் சங்கல்பம் அவைகளுக்கு ஏற்படும்.

இதற்கிடையில் இப்போது காமன்வெல்த் உயிர்வாழ்வதற்குத் தேவையான சக்தியில் பெரும் பகுதியையும் பிரிட்டனே படைத்து விநியோகித்துக்கொண்டிருக்கிறது. இதனால் பிரிட்டனின் முதுகு ஒடிந்து போகும் போல் இருக்கிறது. ஆனால், சக்தி குறையக் குறைய, அதன்மீது சுமரும் பளு அதிகரித்துக் கொண்டே போகிறது. இது சக்திக்கே ஏற்பட்டுள்ள கொடியதொரு சாபக்கேடாகும். சில பிரதேசங்களைப் பாதுகாக்க, அறுபது அல்லது எழுபது வருஷங்களுக்கு முன்பு இரண்டு அல்லது மூன்று 'கம்பெனி'களை (சிறு படைகளை) நாம் அனுப்பினால் போதும். அதே பிரதேசங்களை இன்று காப்பாற்ற, இரண்டு மூன்று 'டிவிஷன்'களை (பெருஞ் சேனைப்பிரிவுகளை) அனுப்ப வேண்டி வரும். நம் நாட்டிலிருந்து இரண்டு வருஷக் கட்டாய ராணுவ சேவைக்காரர் (கான்ஸ்க்ரிப்ட்ஸ்) பலரை ஜெர்மனிக்குக் காவலாக அனுப்பியிருக்கிறோம். அவர்களை மட்டும் அனுப்ப வேண்டி வந்திரா விட்டால், நாம் இரவெல்லாம் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருக்கலாம்.

ஜெனரல் ஸ்மட்ஸின் வாரிசுகளான தற்காலக் காமன்வெல்த் ராஜ தந்திரிகள், இந்தச் சின்னஞ் சிறு தீவை (இங்கிலாந்தை) உற்று நோக்குவார்களானால், அவர்களுக்குச் சில சந்தேகங்கள் எழுவது நிச்சயம். இவ்வளவு ஏராளமான, இவ்வளவு மகத்தான

சுமைகளை இந்தச் சின்னஞ் சிறு தீவின் மக்கள் இன்னும் எவ்வளவு காலம் தாங்கமுடியும்? எவ்வளவு காலந்தான் தாங்க வேண்டும்? இதுபற்றி ஜோஸ்யம் சொல்வது சாத்தியம் அல்ல. ஆயினும், ஒரு நாளும் இந்த நிலைமை மாறி எளிது படாது என்று நாம் அதைரியப் படத் தேவையில்லை. வருங்காலத்தில் பிரிட்டனின் சிரமம் குறைந்து நிலைமை அப்படி எளிது பட்டால்தான் காமன்வெல்த் வாழ முடியும். பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது காமன்வெல்த் இப்போது அதிக பலமுள்ளதாகத்தான் இருக்கிறது. ஆனால், சிறிது காலம் வரைக்குந்தான் இதை நம்பியிருக்க முடியும். இப்படிப் பிரிட்டனையே சார்ந்திருக்கும் மிகவும் சுலபமான இந்த நிலைமைக்குப் பரிகாரம் வேண்டும். காமன்வெல்த் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட முறைகளில் இதற்கு ஓரளவு பரிகாரம் ஏற்படலாம். காமன்வெல்த் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட முறைகளிலோ அபாரமான வளர்ச்சிக்கு இடம் இருக்கிறது.

சென்ற பத்து வருஷகாலத்தில் கானடா அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றம் வியக்கத்தக்கது. இந்தியாவோ, "ஒலி அலையினும் அதிவேகமாய் வளர்ச்சி அடையப் போகிறது. அதன் மூலதனம் அபரிமிதமாய்ப் பெருகப் போகிறது; ஆலைத் தொழிற்சாலைகள் ஏராளமாய் ஏற்படப்போகின்றன" என்று காலின் க்ளார்க் என்பவர் பேசியதை நான் கேட்டேன். இந்த ஜோஸ்யம் பலிக்குமானல், மூத்திய பழமொழி ஒன்றுக்குப் புதிய பொருள் ஏற்பட்டுவிடும். அதாவது, இந்தியாவுடன் எது வரைக்கும் உறவு கொண்டிருக்கிறதோ அதுவரைக்கும் கிரேட் பிரிட்டன் மிகப் பெரிய வல்லரசாக இருந்தவரும். பிரிட்டன் உள்பட வேறு பல நாடுகளும் காமன்வெல்த்தில் இருக்கின்றன. அவைகளும் பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்து வர இடம் இருக்கிறது. இன்றைய நிலைமையை விட்டு இன்னும் அரை நூற்றுண்டுக்குப் பின்பு காமன்வெல்த் நாடுகளை ஒவ்வொன்றுகச் சீர்தூக்கிப் பார்த்தால், நாம் மிக்க உற்சாகம் அடையும்படி இருக்கலாம்.

ஆனுல், காமன்வெல்த் நாடுகள் எல்லாம் தங்கள் பொருள் முதலிய வசதிகளை ஒன்றுய்க் குவிக்குமா? 'பொது லட்சியம்' (காமன் காஸ்) ஒன்றுக்காக, இந்தச் சர்வாதிகார சமத்துவ நாடுகள் தங்கள் ஐக்கியத்தைப் பாதுகாத்து வருமா? புள்ளி விவரங்களைக் கொண்டு இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க முடியாது. நம்பிக்கையையே ஆதாரமாகக் கொண்டு, ஜெனரல் ஸ்மட்ஸ் பதிலளித்தார். 1926-ஆம் வருஷம் கூடிய இம்பீரியல் கான்ஃபரன்ஸில் கலந்து கொண்ட மற்ற அரசாங்கங்களும் அப்படியே பதிலளித்தன. "நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் நாட்டில் நாங்களே அதிகாரி. ஆனுல், பொது லட்சியம் எதற்கும் இதனுல் அபாயம் விளையாது" என்று ஊர்ஜிதமாய் அவை வாக்களித்தன. 1939-இல் ஒரே ஒன்றைத் தவிர மற்ற எல்லா நாடுகளும் தங்கள் வாக்கைக் காப்பாற்றிவிட்டன. ஜெனரல் ஸ்மட்ஸின் நாடு ஒன்றில்தான் காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் நடந்தன.

மிகச் சொல்ப ஓட்டினல், பாதகமான முடிவும் ஏற்பட்டது. இன்று அந்த நிலைமை ஏற்பட்டால், தென்னப்பிரிக்காவின் முடிவு என்னவாயிருக்கும்? இந்தியா, பாகிஸ்தான் இவைகளின் முடிவு என்னவாயிருக்கும்?

ஏதோ கொஞ்சம் புத்தியுள்ள எவரும் இதுபற்றி ஜோஸ்யம் சொல்ல முடியாதுதான். ஆனல், தேவை ஏற்படுமுன்பே இந்தக் கேள்வியை அப்படிப் புத்தியுள்ள எவரும் எழுப்ப மாட்டார். யுத்தம் வராமல் தவிர்த்து விடலாம் என்றே எல்லாரும் நம்புகிறார்கள். அப்படியின்றி, "யுத்தம் வருமானல் எல்லாக் காமன்வெல்த் நாடுகளும் ஐக்கியமாய்ப் போராடுவது ஒன்றுதான் பொது லட்சியம்; அது ஒன்றே காமன்வெல்த்தின் பயனுக்குச் சோதனை" என்றும் எந்தப் புத்திமானும் சொல்லமாட்டார். அப்படிப்பட்ட அபிப்பிராயத்தை ஒரு நூற்றூண்டுக்குமுன்பே ஸர் வில்ஃப்ரிட் லாரியர் என்பவர் ஆட்சேபித்திருக்கிறார். ஜெனரல் ஸ்மட்ஸ் அதை ஒருநாளும் அங்கீகரித்திருக்க மாட்டார். "காமன்வெல்த்துக்கு மிக முக்கியமான பொது லட்சியம் என்ன?" என்று அவரைக் கேட்டிருந்தால், அவர் என்ன பதில் அளித்திருப்பார்? "சுதந்தரத்தையே அஸ்திவாரக் கொள்கையாகக் கொண்டு, பல நாடுகளின் உலகச் சங்கம் ஒன்றை உருவாக்குவதுதான் காமன்வெல்த்தின் பொது லட்சியம்" என்றே அநேகமாக ஸ்மட்ஸ் பதிலளித்திருப்பார். காமன்வெல்த் நாடுகள் தங்களுக்குள் ஒன்றோடொன்றும் வெளிநாடுகளோடும் நடந்துகொள்ளும் முறைகளில் இந்த முயற்சியைத்தான் கடைப்பிடிக்கின்றன. லண்டன், ஆட்டவா, டில்லி இவைகளையும் காமன்வெல்த்தின் பிற தலைநகரங்களையும் வலைப் பின்னல் போல் ஒன்றோடொன்று தொடர்புகொள்ளச் செய்திருக்கிறது காமன்வெல்த். இந்தத் தொடர்புகள்மட்டும் இருந்திராவிட்டால், உலகம் இன்றைவிட மகா மோசமாய்ப் போயிருக்கும். மேலும், அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனுடன் ஆட்டவாவும், சீனத் தலைநகரான பீகிங்குடன் டில்லியும் விசேஷத் தொடர்பு கொண்டிருப்பது பின்னும் நன்மையாகும். பிளவுபட்டுப் போயிருக்கும் இந்த உலகத்தில் செய்திப் போக்குவரத்துக்களைப் பங்கமில்லாமல் பாதுகாத்து வருவது காமன்வெல்த்தே. இப்படிக் காத்துவருவதன்மூலம் தன் சொந்தச் செய்திப் போக்குவரத்துக்களையும் அது காத்து வருகிறது.

மனித சமூகம் திக்பிரமை கொண்டு கிடக்கிறது. காலம் அதிவேகமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. சென்ற பத்து வருஷ காலத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையெல்லாம் காமன்வெல்த் ஏற்றுக்கொண்டுவிட்டது. இவ்வளவு சிறப்பாக இந்த மாறுதல்களை அது ஏற்றுக்கொள்ளும் என்று பலர் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். காமன்வெல்த்தின் சர்வாதிகார உறுப்பு நாடுகளின் பிரஜைகளில் பெரும்பாலோர் ஆசியாக்காரர்கள். வெறும் வார்த்தையால்மட்டும் அல்ல; செயலாலும் அவர்களைக் காமன்வெல்த் அன்போடு அணைத்துக்கொண்டிருக்கிறது. உதாரண

மாக, கொழும்புத் திட்டத்தை நிறைவேற்றக் கூட்டுறவு முறையில் செய்யும் முயற்சிகளால் அவர்கள் பயன்பெறுகிறார்கள். இந்தியர், ராணியின் பிரஜைகளாக இராமல் விலகிவிட்டார்கள். பாகிஸ்தானிகளும் கூடிய சீக்கிரம் அப்படியே விலகப்போகிறார்கள். ஆயினும், இந்தியா, பாகிஸ்தான் இரண்டுமே ராணியைக் காமன்வெல்த்தின் தலைவர் (ஹெட் அவ் தி காமன்வெல்த்) என்று அங்கீகரித்திருக்கின்றன. ஆஸ்திரேலியரும் நியூஜிலந்த்காரரும் இதற்கு வருத்தப்படுவது சகஜம். ஆழ்ந்த ராஜபக்தி அவர்களுடைய சுபாவத்திலே ஊறியிருப்பதே இதற்குக் காரணம். என்றாலும், பிரத்தியட்ச நிலைமைகளுக்கு ஏற்றபடி நடந்து கொள்ளும் அநுபவ அறிவுடைய அவர்கள், இன்றுள்ள நிலையிலேயே காமன்வெல்த்தை அங்கீகரித்திருக்கிறார்கள். லண்டனைத் தவிர மற்ற எந்த நகருக்கு அனுப்பும் தந்திகளையும்விட மிக அதிகமான தந்திகளை டில்லிக்கே கான்பெர்ரா அனுப்புகிறது. ஐரோப்பிய நாகரிகத்துக்கும் ஆசிய நாகரிகத்துக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கையும் உதவியும் உண்டாக்கும் புது இழைகளைக் காமன்வெல்த் நாடுகள் பின்னிவருகின்றன. இந்தப் புது இழைகள், பழைய ஏகாதிபத்தியத் தளைகளை விட அதிக உறுதியாக இருக்குமா? இருப்பது சாத்தியந்தான்; காமன்வெல்த் தலைவர்கள் அப்படித்தான் நம்புகிறார்கள்.

ஆப்பிரிக்காக் கண்டந்தான் இப்போது நெருக்கடியை உண்டாக்கியிருக்கிறது. இறுதியாகக் காமன்வெல்த் வாழப்போகிறதா, முறியப்போகிறதா? மற்ற இடங்களைப் போலவே ஆப்பிரிக்காவிலும் தேசீய சுதந்தர சர்க்கார் அமையப் போகிறதா இல்லையா என்பதையே பொறுத்திருக்கிறது இந்தக் கேள்விக்குப் பதில். ஆனால் ஆப்பிரிக்க தேசங்கள் இன்னும் வளர்ச்சி அடையவில்லை. தேசீய வளர்ச்சி என்பது சட்டென்று நடக்கும் சங்கதி அல்ல. ஆயினும், காமன்வெல்த்துக்கு ஏற்பட்டிருக்கும் பரீட்சைக்காலம் மிகவும் சொற்பம்; அல்லது சொற்பம் என்றே தோன்றுகிறது. ஆகவே, சென்ற பத்து வருஷகாலத்தைப் போலவே அடுத்த பத்துவருஷ காலமும் தொல்லை நிறைந்ததாகவே இருக்கப் போகிறது. இது நம்மைக் கொஞ்சம் உற்சாகம் தளரும்படிதான் செய்கிறது. ஆயினும், இதற்காக நாம் பயப்பட வேண்டியதில்லை. காலத்தைக் கொஞ்சம் நீட்டிப் பார்க்க வேண்டும். 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் கானடாவுக்குச் சுய ஆட்சி வழங்க வேண்டும் என்று டர்ஹாம் எழுதிய ரிபோர்ட் முதல் இந்திய சுதந்தரச் சட்டம் நிறைவேறிய நாள் வரைக்குமுள்ள காலத்தைக் கொஞ்சம் கவனிக்கவேண்டும். ஸ்மட்ஸும் அவர் காலத்துச் சகாக்களும் கனவு கண்ட ஐக்கியமும் பத்திரமும் ஏற்பட்டாலும் சரி, ஏற்படாவிட்டாலும் சரி என்று இப்போது சுதந்தரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள பாதையிலேயே காமன்வெல்த் நடக்க வேண்டும். தன்னிடம் தானே வைத்திருக்கும் தன்னம்பிக்கையைப்பொறுத்திருக்கிறது பிரிட்டனின் வருங்காலம். காமன்வெல்த் வாழ்வதற்கும் இதே தன்னம்பிக்கை வேண்டும்.

வாமன அவதாரம்

“ஸர்வேசுவரராக இருந்தும் பகவான் ஏன் பலி சக்கரவர்த்தியிடம் மூன்று அடி பூமியை யாசித்தார்? ஒரு தவறும் செய்யாத அவனை ஏன் சுதலலோகத்தில் அடைத்தார்?” என்று பரீட்சித்து மன்னன் சுகமுனிவரைக் கேட்டான்.

அவர் சொல்லலானார்:

“இந்திரனோடு போர் செய்து பலி உயிர் துறந்து போர்க்களத்தில் கிடந்தான். சுக்கிராசாரியர் அவனுக்குப் பிழைப்பூட்டினார். அதிலிருந்து அவரிடம் விசேஷ பக்தி சிரத்தையுடன் நடந்துகொண்டான் பலி. அவருக்குப் பணியாற்றி அவருடைய அருளைப் பெற்றான். பிறகு தேவலோகத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று விரும்பினான். இதைச் சுக்கிராசாரியரிடம் தெரிவித்தான். அவரும் அதற்கு இசைந்தார். அவன் விருப்பம் நிறைவேற உடனே விசுவஜித் என்ற யாகம் செய்யும்படி சொன்னார். அது நடக்கும்போது யாக அக்கினியிலிருந்து பச்சைக் குதிரைகள் பூட்டி, சிங்கக் கொடி தாங்கி, தங்க வில், அழியாத அம்பறாத்தூணி, திவ்விய கவசம் இவைகளோடு தங்கத் தேர் ஒன்று தோன்றியது. அதில் பலி ஏறிக்கொண்டான். பாட்டனாகிய பிரகலாதன் அவனுக்குச் சிறந்த வில்லையும் இரண்டு அம்பறாத் தூணிகளையும கவசத்தையும் கொடுத்தான். சுக்கிராசாரியர் வாடா மலர்களால் தொடுத்த மாலையையும் சங்கையும் கொடுத்தார். அந்தணர்கள் அவனை ஆசீர்வதித்தார்கள். பிறகு பலி தன் கூட்டத்தாரோடு பெருஞ்சேனை பின் தொடரத் தேவலோகத்துக்குப் போனான்.

“அதைச் சூழ்ந்துகொண்டான். தன் ஆசாரியர் கொடுத்த சங்கவாத்தியத்தை முழக்கினான். அதைக் கேட்டதும் தேவர்கள் கலக்கமுற்றார்கள்.

“இதைக் கேட்டுக் கவலைகொண்டான் தேவேந்திரன். மற்றத் தேவர்களுடன் பிருகஸ்பதியிடம் சென்று வணங்கினான்.



கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.

'பகவானே, நமக்கு வெகு நாளாகப் பகைவனாக இருக்கும் பலி அதிக பலத்துடன் வந்திருக்கிறான். அவன் வரும்போதே உலகத்தை விழுங்கிவிடுவதுபோல் பார்க்கிறான். அவனை எப்படி எதிர்ப்பது? நீங்கள்தான் இதற்கு ஒரு வழி சொல்ல வேண்டும்' என்றான்.

''அப்போது பிருகஸ்பதி, 'இதற்குக காரணம் எனக்குத் தெரியும். பிருகு வம்சத்தைச் சேர்ந்த முனிவரால்தான் இந்தப் பலம் அவனுக்கு வந்தது. இதை நீயும் உன்னைப் போன்றவர் யாரும் எதிர்க்கவே முடியாது. பகவான் விஷ்ணுவே இதற்குத் தகுதியானவர். ஆகவே, நீங்கள் எல்லாரும் சொர்க்கத்தை விட்டுப் போய்விடுங்கள். பெரியோர்களின் அருளால் அவனுக்கு இந்தப் பலம் கிடைத்தது. அவர்களை அவமதிப்பதால் தானாகவே அவன் அழிவான்' என்றார்.

''தேவர்களும் உடனே பகைவர்களின் கண்ணில் படாமல் தேவலோகத்திலிருந்து வெளியேறிவிட்டார்கள். பலி அங்கே புகுந்து இந்திர சபையில் அமர்ந்து மூன்று உலகத்தையும் ஆளத் தொடங்கினான். சுக்கிராசாரியர் அவனுக்காகப் பல அசுவமேத யாகங்களைச் செய்து வைத்தார்.

''தேவர்களின் தாயான அதிதி தன் மக்களுக்குண்டான துன்பத்தை அறிந்து வருத்தமுற்றாள். ஒரு நாள் காசியப முனிவர் சமாதி கலைந்து அவள் இருக்குமிடம் வந்தார். அவள் சோர்ந்திருப்பதைக் கண்டு, 'என் இப்படி இருக்கிறாய்?' என்று கேட்டார்.

''அவள், 'ஸ்வாமி, தங்களைக் கணவராக அடைந்தது என் பாக்கியமே. வேறு குறை ஒன்றுமில்லை. தேவர்கள், அசுரர்கள் எல்லாருமே உங்கள் குழந்தைகள்தான். அவர்களுக்குள் நீங்கள் ஏற்றத் தாழ்வு பார்ப்பதில்லை. இருந்தாலும் பக்தர்களிடம் பகவானே அதிகப் பிரியமாக நடந்துகொள்வதில்லையா? அதே

மாதிரி நீங்கள் என்மேல் தனிப் படைக் கருணை காட்ட வேண்டும். என் மக்களைப் பகைவர்கள் துன்புறுத்தவே அவர்களெல்லா ரும் திக்கற்ற பரதேசிகளைப்போல் திரிகிருர்கள். அவர்கள் இழந்த செல்வத்தை மீண்டும் அடையும் படி நீங்கள் அருள் புரிய வேண்டும்' என்ருள்.

"காசியபரும் மனமுவந்து, 'அதிதி, இந்த உலகம் பகவா னுடைய மாயைக்கு உட்பட்டு அன்பாகிய பாசத்தில் கட்டுண்டு கிடக்கிறது. உனக்குப் பிள்ளை ஏது? கணவன் ஏது? எல்லாம் அறியாமையின் விளைவே. போகட் டும்; பகவான் நாராயணரை வழி படு. அவர் உனக்கு நன்மை செய்வார். பங்குனி மாதத்தில், பன்னிரண்டு நாள் பாலையே அருந் திப் பக்தியுடன் அவரைப் பூஜித் தால், அவர் மகிழ்ச்சி அடைவார். குழந்தை வேண்டும் என்று நான் பிரம்மாவைப் பிரார்த்தித்த போது அவர் இந்த விரதத்தைப் பற்றி எனக்குத் தெளிவாகச் சொன்னர். எல்லாத் தவங்களிலும் மிகச் சிறந்தது இது. தவருமல் இதைச் செய்து வந்தால் பகவான் நீ வேண்டிய வரமெல்லாம் தரு வார்' என்ருர்.

"அதிதி இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தாள். அவர் சொன்னபடியே சிறிதும் தவருமல் பன்னிரண்டு நாட்கள் முறை யாகப் பாலை மட்டும் அருந்திப் பகவானைப் பூஜித்தாள். பிறகு பகவான் பீதாம்பரம் உடுத்து, சங்கு சக்கரம் முதலிய ஆயுதங் களைக் கையில் ஏந்தி அவள் முன் தோன்றினர். அதிதி அவரைக் கண்டு மகிழ்ச்சி மிகுதியால் மயிர் சிலிர்க்க ஆனந்தக் கண்ணீர் பெருக்கித் துதித்தாள். பகவான் அவளைப் பார்த்து, 'அம்மா, உன் விருப்பம் எனக்குத் தெரியும். பகைவரை வென்று, தேவர்கள் தாங்கள் இழந்த செல்வத்தை மீண்டும் பெற்று இன்பமாக வாழ வேண்டும்; அதுதானே? அசுரர் களைச் சுக்கிராசாரியர் காப்பாற்றி வருவதால் அவர்களை வெல்வது கஷ்டம். ஆனாலும், உன் மக்களைக் காக்க வேண்டும் என்று நீ என்னைப் பூஜித்ததால் நான் உனக்கு மகனாகப் பிறந்து அவர் களைக் காப்பாற்றுகிறேன்' என்று சொல்லி மறைந்தார். காசியபர் பகவானுடைய கருணையை எண்ணி அவரைப் போற்றினர்.

"பிறகு சில நாள் சென்றதும் புரட்டாசி மாதம் சுக்கிலபட்சத் துவாதசி திருவோண நட்சத்திரம் சேர்ந்த சிறந்த நாளில் பகவான் அதிதியின் மகனாக அவதரித்தார். அந்த நாளை இன்றும் 'விஜய துவாதசி' என்று கொண்டாடு கிருர்கள். வானத்திலிருந்து சித்தர், சாரணர் முதலியோர் அதிதியின் ஆசிரமத்தில் மலர் பொழிந்தனர். பகவான் அப்படியே தம் சுய உருவத்துடன் பிறந்ததைக் கண்டு அவள் ஆச்சரியமுற்ருள். காசியபர் அவரைத் துதித்தார்.

"சற்று நேரத்தில் அவர்கள் இருவரும் பார்த்துக்கொண் டிருக்கும்போதே அவர் வாமன ரூபம் எடுத்துக்கொண்டார். அவரைக் கண்டு முனிவர்கள் மகிழ்ச்சியுற்று அவருக்கு உப நயனம் செய்து வைத்தார்கள். சூரிய பகவானே காயத்திரியை உபதேசித்தார். பிருகஸ்பதி, காசியபர், பூமிதேவி முதலியவர் கள் பூணூல், மேகலை இவைகளை

யெல்லாம் கொடுத்தார்கள். உமா தேவி அவருக்குப் பிட்சை அளித்தாள். குடை, கமண்டலம், அட்ச மாலை முதலியவற்றோடு அந்தப் பிரம்மசாரி பலி சக்கரவர்த்தியின் யாகசாலைக்குப் போனார். அவரைப் பார்த்ததும் சுக்கிராசாரியர், இவன் ஆதித்தனோ, அக்கினியோ, சனத்குமாரனோ என்று பலவாறு சந்தேகங் கொண்டார். எழுந்து எதிர்கொண்டு வாமனரை வரவேற்றார். அழகு, அதற்கேற்ற அங்க அமைப்பு, வயது எல்லாம் பொருந்திய அந்த வாமனருக்கு ஆசனம் அளித்துக் கால் கழுவித் துடைத்துப் பூஜித்தான் பலி. பின், 'ஸ்வாமி, தங்களுக்கு என்ன வேண்டுமோ, கேளுங்கள்' என்றான்.

"அதற்கு வாமனர், 'அரசே, நீங்கள் உங்கள் குலத்துக்கு ஏற்றபடி அறநெறி தவறாமல் நடப்பவர். உங்கள் குலத்தில் பிறந்தவர் எவருமே இதுவரையில் பிறர் கேட்டதை மறுத்ததில்லை. உங்கள் தந்தை,பிரகலாதனுடைய மகனான விரோசனர் நல்ல அறிவாளி; தம் ஆயுளையேகூட அளித்தவர். நீங்களும் அப்படியே. என் காலால் அளந்த மூன்று அடி மண் வேண்டும்; அது போதும்' என்றார்.

"அப்போது பலி, 'ஸ்வாமி, உங்கள் பேச்சுப் பெரியவர்களுடையதைப்போல் இருந்தாலும் இன்னும் குழந்தைப் புத்தியோடுதான், உங்களுக்கே என்ன விஷயம் என்று புரியாமல் பேசுகிறீர்கள். மூன்று உலகத்துக்கும் அரசனான என்னை மூன்று அடி மண் மட்டுமே கேட்கிறீர்களே; மறுபடியும் யோசித்து நீங்கள் வாழ்க்கை நடத்தத் தேவையான அளவு பூமியைக் கேளுங்கள்' என்றான்.

"அதற்கு வாமனர், 'உலகப் பொருள் எல்லாவற்றையும் பெற்றாலும் மனிதனுடைய விருப்பம் பூர்த்தியாகாது. மூன்று அடி மண்ணைக் கொண்டு திருப்தி அடையாதவன் உலகம் முழுவதுமே கிடைத்தாலும் திருப்தி அடைய மாட்டான். அதோடு, வேண்டும் அளவு மட்டுமே பொருளை வாங்கிக்கொள்பவனுக்குப் பிறரிடமிருந்து தானம் பெறுவதால் வரும் பாவம் இராது. ஆகவே, எனக்கு மூன்றடி பூமியே போதும்' என்றார்.

"பலியும், 'உங்கள் இஷ்டப்படியே தருகிறேன்' என்று சொல்லித் தானம் செய்ய வேண்டித் தீர்த்த பாத்திரத்தை எடுத்தான். அப்போது சுக்கிராசாரியர் பகவானுடைய எண்ணத்தை உணர்ந்து பலியிடம் சொல்லலானார்: 'அப்பா, இவர் யார் தெரியுமா? சாட்சாத் பகவான் நாராயணர். இந்திரனுக்கு அவன் ராஜ்யத்தை உன்னிடமிருந்து வாங்கித் தர அதிதியின் மகனாக அவதரித்திருக்கிறார். மூன்று அடிகளால் இவர் உலகத்தையே அளக்கப்போகிறார். இவருடைய கபடத்தை அறியாமல் கொடுப்பதாக வாக்களித்து விட்டாயே! முதல் அடியால் பூமியையும் இரண்டாம் அடியால் ஆகாயத்தையும் அளந்துவிட்டால், மூன்றாவது அடியை நீ எப்படிக் கொடுப்பாய்? கொடுப்பதாக வாக்களித்ததைக் கொடுக்காவிட்டால் நரகந்தானே கிட்டும்? ஆபத்து நேரும் சமயம் பொய் சொன்னால் பாவமில்லை என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஆகவே, வாக்களித்தாலும் இப்போது மறுப்பதுதான் நல்லது' என்றார்.

"இதைக் கேட்ட பலி சற்று நேரம் பேசாமல் இருந்துவிட்டுச் சொல்லலானான்: 'ஸ்வாமி, நீங்கள் சொன்னது சரி என்றாலும், பொருளாசையால் நான் இவருக்கு அளித்த வாக்கை மீறுவது நியாய மில்லை. பொய்யைத் தவிர எதை வேண்டுமானாலும் பொறுத்துக் கொள்வேன். தகுந்த பாத்திரத்தில் தானம் செய்யும் சந்தர்ப்பம் வாய்ப்பது அரிது. என்னிடம் பகவான் கபடமாக நடந்து கொண்டாலும் நான் சொன்ன சொல் தவறமாட்டேன்.'

"சுக்கிராசாரியர் கோப முற்று, 'என் வார்த்தையை மீறுவதால் நீ இப்போதே செல்வத்தை யெல்லாம் இழப்பாய்' என்று சபித்தார். ஆனாலும் பலி தன் வாக்குத் தவறாமல் வாமனரை முறைப்படி பூஜித்தான்; ஜலம் வார்த்து மூன்றடி பூமியைத் தானம் செய்தான். இந்தச் செயலைக் கண்டு உலகம் முழுவதும் பலியைக் கொண்டாடியது.

"அப்போது பகவானுடைய வாமனரூபம் வளரத் தொடங்கியது. பூமி, வானம், திசைகள், சமுத்திரங்கள் எல்லாவற்றையும் அந்த உருவம் அளாவி நின்றது. பலியும் அவனுடன் இருந்த ரித்விக்குகளும் இதைக் கண்டு வியப்படைந்தார்கள். பகவான் ஒரு காலால் பூமியையும் மற்றொரு காலால் வானத்தையும் அளந்தார். மூன்றாவது அடி அளப்பதற்குப் பலியின் சொத்து என்று சொல்ல ஓர் அணுக்கூட மீதி இருக்கவில்லை.

"இந்த நிலையில் தேவர்கள், முனிவர்கள் முதலியோர் பகவானைத் துதித்துப் பூஜித்தார்கள். சில அசுரர்கள், 'இவன் கபடமாக நம் மகாராஜாவை ஏமாற்றி விட்டதால் இவனைக் கொல்வது தான் சரி' என்று எண்ணி அவரை நோக்கி ஓடினார்கள். பலி உடனே, 'இப்போது நமக்கு நல்ல காலம் இல்லை. நீங்களே பல தடவை விஷ்ணு சேனையை முறியடித்திருக்கிறீர்கள். இப்போது அவர்களுக்குப் பலம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, பேசாமல் இருங்கள்' என்று சொல்லி அவர்களைத் தடுத்தான்.

"பகவானுடைய கருத்தை அறிந்த கருடன் பலியைப் பிடித்து வருண பாசத்தால் கட்டினான். பிறகு பகவான், 'அசுர மன்னனே, நீ எனக்கு மூன்று அடி பூமி கொடுப்பதாக வாக்களித்தாய். இரண்டடிகளால் பூமியையும் வானத்தையும் அளந்து விட்டேன். மூன்றாவது அடியை எங்கே வைப்பது? நீ வாக்களித்தபடி கொடுக்காவிட்டால் நரகத்தில் சில ஆண்டுகள் கிடக்க வேண்டியதுதான்' என்றார். அதற்குப் பலி, 'ஸ்வாமி, அப்படி நினைக்க வேண்டாம். இதோ என் தலையில் மூன்றாம் அடியை வையுங்கள். எனக்கு நரகம் கிட்ட வேண்டாம். உலகத்துக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருக்கும் தாங்கள் என்னை அடக்கினாலும் பாசத்தால் கட்டினாலும் எனக்கு என் வருத்தம் ஏற்படப் போகிறது?' என்றான்.

"அப்போது பிரகலாதன் அங்கே வந்து பகவானை நோக்கி, 'ஸ்வாமி, தாங்கள் பலிக்குச் சிறந்த முறையில் அருள் புரிந்து விட்டீர்கள். செல்வம் என்பது எல்லாருடைய புத்தியையும் மயக்கிவிடும்; அதை அவனிடமிருந்து விலக்கியது அவனுக்குப்

பேரருள் புரிந்த மாதிரிதானே?' என்றான். அதே சமயம் பிரம்மா அங்கே வந்தார். அதற்குள் பலியின் மனைவியான விந்தியா வளி, 'ஸ்வாமி, தாங்கள் விளையாட்டாக இந்த உலகைப் படைத்தீர்கள். அதிலுள்ள மக்கள் அறிவின்மையால் உலகப் பொருள்களெல்லாம் தம்முடையவை என்றும், தாமே எல்லாவற்றையும் செய்வதாகவும் எண்ணிக் கொள்கிறார்கள்' என்றாள்.

"பிறகு பிரம்மா, 'தேவர்களுக்கெல்லாம் தேவா, செல்வத்தை வாங்கிக்கொண்டு பலியை விட்டு விடுங்கள். அவனைத் தண்டிக்கக் கூடாது. உங்களுக்குத் துளசி தளத்தைக் கொடுப்பதாலேயே சிறந்த உலகங்களை மக்கள் அடைகிறார்கள். உலகம் எல்லாவற்றையுமே மனங் கலங்காமல் இவன் உங்களுக்குக் கொடுத்து விட்டானே!' என்று பலியின் தியாகத்தை வியந்தார்.

"பகவான் சொல்லலானார்: 'நான் யாருக்கு அருள் புரிந்தாலும் அவர்களுடைய செல்வத்தைக் கொள்ளை கொண்டுவிடுவேன். இந்த அசுர மன்னன் உலக மாயையைத் தன் அறிவினால் கடந்து விட்டான். தன் குரு, உறவினர் இவர்களெல்லாரும் தடுத்தும் இவன் சத்தியத்தைக் கைவிடவில்லை. நான் கபடமாக இவனைப் பரீட்சித்தும் இவன் அறநெறி தவறவில்லை. ஆகவே, இவன் 'ஸாவர்ணிக மன்வந்தர'த்தில் தேவேந்திரனாகப் போகிறான். அதுவரையில் சுதல லோகத்தில் இருக்கட்டும்; அதனால் சுதல லோகமே எல்லாரும் விரும்பும்படி அமையும்.

"பலி மிகவும் மகிழ்ச்சியோடு பகவானை வணங்கி அந்த உலகத்துக்குச் சென்றான். வாமனரைப் பிரம்மா உபேந்திரனாக்கி அபிஷேகம் செய்தார். இந்திரன் உபேந்திரனுடைய உதவியோடு எல்லா உலகத்தையும் அறநெறி தவறாமல் ஆண்டு வந்தான்."

கொலம்பஸ் சாதித்தது

தபால் இலாகாதாரை நீங்கள் நம்பினீர்களானால், கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது மாத்திரம் அல்ல; ஒரே இரவில் முழு நீளத் தாடியையும் வளர்த்துக் கொண்டார் என்றும் நீங்கள் நம்பத்தான் வேண்டும்.

1893-இல் கொலம்பஸ் சாதனைபற்றித் தபால் தலைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றில் ஒரு ஸெண்ட் தபால் தலையில், அமெரிக்கக் கரை தெரிவதைக் கொலம்பஸ் காண்பதாக ஒரு படம் இருக்கிறது. அதில் தாடிமீசை ஒன்றுமில்லாமல் சுத்தமாக முகக்ஷவரம் செய்துகொண்டிருக்கிறார். அடுத்த நாள் கரையில் அவர் வந்து இறங்கும் படம் இரண்டு ஸெண்ட் தபால் தலையில் இருக்கிறது. அதில் அவருக்கு முழு நீளத் தாடி வளர்ந்திருக்கிறது!

—'யுவர் லைஃப்'

ஆங்கிலக் கதை:

எது இன்பம்?

மூலம்: ஓ. ஹென்ரி தமிழ்: கே. எஸ். பி.

நவீனச் சிறுகதைகளுக்கே மூல புருஷர்களில் ஒருவர் என்று இந்த ஆசிரியரைச் சொல்லலாம். இவருடைய கதைகளில் ஸ்வாரஸ்யம் மிகுந்திருக்கும்.

நீலச் சட்டை அணிந்த ஓர் ஆயன் கம்பீரமான குரலில், "சீக்கிரம் வெளியே ஓட்டப்பா மந்தையை!" என்று துரிதப்படுத்தினான்.

பட்டினத்தைச் சேர்ந்த ஆட்டு மந்தை ஒன்று சாரிசாரியாக அடைத்து வைத்திருந்த அறையிலிருந்து வெளியே கிளம்பியது. கடைசி ஆடு நகரும் வரையில் நிலைப்படியருகில் ஆஜாநுபாகுவாக நின்றிருந்தான் ஜான்.

ஆட்டு மந்தை முன்னேறியது. கதவைச் சாத்திக்கொண்டு, மாடிப்படிகளின் வழியே கீழே இறங்கினான் ஜான். அவன் நடையிலேதான் எவ்வளவு நிதானம்! துளியாவது பதற்றம் இருந்ததா? அவனுடைய நடை மாத்திரம் என்ன, வாழ்க்கையும் அப்படித்தான் இருந்தது.

மணமாகி இரண்டு ஆண்டுகள் நிறைவேறாத எந்த மனிதனும் எப்படி அதிசயமாக வாழ்ந்துவிட முடியும்? மேல்மாடியிலே ஒரு பெரிய போர்ஷனைத்தான் ஜானும் அவன் இளம் மனைவி லூஸியும் தேர்ந்தெடுத்திருந்தனர். இடம் அழகாக, போதுமானதாக இருந்தது.

ஜானின் நடையிலே இருந்த வேகம் குறைந்தது. அவன் முகத்திலே சோர்வு நிழலிட்டது. அன்றாட யந்திர வேலைகள் நினைவுக்கு வந்தபோது அடர்த்தியாக வளர்ந்த அவன் புருவங்கள் சுளித்துக்கொண்டன.

கடிகாரம் ஒரே ரீதியில் செல்வதுபோல அல்லவா அவனுடைய அன்றாட வாழ்க்கையும் மாறுபாடின்றி நடக்கிறது!

ஆட்டை ஓட்டிக்கொண்டு வரும்போது லூஸி புன்சிரிப்போடு அவனை வரவேற்பாள். சாப்பாடு தயாராக இருக்கும். மேல் சட்டையைக் கழற்றிவிட்டு அவன் தொப்பென்று நாற்காலியில் விழுவான். அன்றைய தினசரியில் ஒரு முறை கண்ணோட்டிய பிறகு, சாப்பாட்டுக்கு உட்கார்ந்துவிடுவான். நேர்த்தியான உணவும் பானமும் லூஸி தயாராக வைத்திருப்பாள்.

உணவு உட்கொண்ட பிறகு அன்று ஏதாவது விசேஷம் இருந்தால் லூஸி சொல்வாள்:

"இதோ பாருங்கள்! தையற்காரனிடம் அதைத் தைத்தேன்!" என்று ஒரு துணியைக் காட்டுவாள். இரவு ஏழரை மணிக்கு அந்த ஹோட்டலில் மேல் அறையில் வசிக்கும் குண்டன் தண்டால் எடுத்தால் ஹோட்டல் கட்டிடமே ஆடுவதுபோல இருக்கும். அப்போ

தெல்லாம் ஜான் எதைப்பற்றியுமே சிந்தனை செய்வதில்லை. மணி எட்டடித்தால் அடுத்த அறையில் இருக்கும் குடும்பஸ்தரின் குழந்தைகள் காச்மூச்சென்று சத்தம் போடும். கூடவே அவர்களின் குறட்டைச் சத்தமும் சீக்கிரத்தில் தொடரும்.

அடுத்தபடி எதிர் அறையிலிருந்த வாலிபன் 'புளூட்'டைக் கையிலெடுத்து விடுவான். அது முடியும் வரையில் தலைவேதனையாகத்தான் இருக்கும். அதற்குள் 'வெய்ட்டர்' பூட்ஸ் சத்தத்தை ஒலித்துக்கொண்டே மேலுக்கும் கீழுக்கும் போய் வருவார். இன்னும் எத்தனையோ விதமான ஓசைகளும் ஒலிகளும் ஜானுக்கு அந்தப் பெரிய ஹோட்டலிலே அறிமுகம் ஆகியிருந்தன.

இந்த அன்றாட நிகழ்ச்சிகளை ஒரு முறை எண்ணிப் பார்த்ததும் மனக் கசப்பாக இருந்தது ஜானுக்கு. ஆனால் அவன் மாத்திரம் லூஸியிடம் எப்படி நடந்து கொள்கிறான்?

இரவு மணி எட்டரையானால் தொப்பியை அணிந்துகொண்டே வாசல் அறையைத் திறப்பான்.

"எங்கே போகிறீர்கள்?" என்று லூஸி விளிப்பாள்.

"சதுரங்கம் ஆட ஹென்ரியின் வீட்டுக்கு!" என்று சொல்லிவிட்டு அவன் கிளம்பிவிடுவான். இரவிலே சதுரங்கம் ஆடுவது அவனுக்கு வழக்கமாகிவிட்டது. மணமானதுந்தான் அவனிடம் இந்தச் சதுரங்கப் பைத்தியம் குடிகொண்டது. இரவு பதினொரு மணிக்கு மீண்டும் கதவைத் தட்டுவான். சில சமயங்களில் லூஸி நல்ல தூக்கத்தில் இருப்பாள். சில சமயங்களில் அவள் அவனுக்காகக் கண்ணயராமல் காத்திருப்பாள்!

* * *

சாயங்காலமானதும் ஆட்டு மந்தையோடு வழக்கம்போலத் தன் இடத்துக்குத் திரும்பினான் ஜான். இன்று அவன் மனம் ஒரு நிலையிலே இல்லை. தன் அன்றாட வாழ்க்கையிலே இயற்கைக்குப் புறம்பாக ஏதோ ஒன்று இருப்பதை அவன் உணர்ந்தான்.

அவனுடைய மனக் கசப்பை, திறந்து கிடந்த அறைக் கதவு மிகைப்படுத்தியது. புன்சிரிப்புத் தவழ வழக்கமாக நிலைப்படியருகில் ஒய்யாரமாக நிற்கும் அந்த லூஸி எங்கே? அறைக்குள்ளே புகுந்ததும் எல்லாம் மூலைக்கு ஒன்றாய் அலங்கோலமாய் விரித்துக் கிடந்தன. அறை மத்தியில் பூட்ஸ் கிடந்தது; சவரி, ரிப்பன், பவுடர் டப்பி எல்லாம் சிதறிக் கிடந்தன. நாற்காலி குப்புற விழுந்து கிடந்தது. லூஸியின் ஆடை தரையில் விழுந்து கிடந்தது.

ஜானுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. சீப்பு ஒன்று மூலையிலே கிடந்தது. பக்கத்தில் ஒரு கடிதம் இருந்தது. லூஸியின் இந்த மாற்றத்துக்குக் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. பரபரவென்று கடிதத்தைப் பிரித்தான்.

"அன்புள்ள...

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று இப்போதுதான் எனக்குத் தந்தி வந்தது. தம்பி ஸாம் எனக்காக ரெயில்வே ஸ்டேஷனில் காத்திருக்கிறானும். அவனோடு ஊருக்குப் போய் வருகிறேன். பால்காரனுக்கு ஐம்பது ஸெண்ட் கொடுங்கள். உங்கள் துணியெல்லாம் டிரங்கில் இருக்கிறது.

உணவு அலமாரியில் மூடியிருக்கிறது. சாப்பிடுங்கள். அவசரத்தில் எழுதுகிறேன்.

லூஸி."

வாசகத்தைப் படித்ததும் அவன் முகத்திலே சுருக்கங்கள் படிந்து சோர்வை அதிகப்படுத்தின. இந்த இரண்டு வருஷ தாம்பத்திய வாழ்வில் அவனும் லூஸியும் ஒரு நாள்கூடப் பிரிந்ததில்லை. அந்தக் குறிப்பை அவன் திரும்பத் திரும்பப் படித்தான். வழக்கமான அவர்கள் வாழ்க்கைப் பாதையிலே இதோ திடீரென்று ஒரு பிளவு—

கதவுக்குப் பின்னாலிருந்த நாற்காலியில் லூஸி வழக்கமாக அணியும் நீல ஜாக்கெட் இருந்தது. அவளுடைய மற்ற உடைகளும் தரையிலே மூலைக்கு ஒன்றாகக் கிடந்தன. அவளுடைய தோல் பை திறந்து கிடந்தது. அதிலிருந்த ஸெண்ட் கீழே கொட்டிக் கிடந்தது. அன்றைய தினசரியின் தாள்கள் நாலு மூலைகளிலும் கிடந்தன. அறையிலிருந்த அனைத்தும் ஏதோ ஒரு பொருள் தொலைந்துவிட்டதை அறிவுறுத்தின. வாழ்க்கையின் சுருதி கலைந்துவிட்டதை, காற்றாடியின் கயிறு அறுந்துவிட்டதை ஜான் உணர்ந்தான். பயித்தியம் போல மார்பை அழுத்திக்கொண்டே கீழே உட்கார்ந்துவிட்டான். வாழ்க்கைப் பறவை வெளியே பறந்து விட்டாற்போன்ற நினைப்புத்தான் அவன் மனத்திலே எஞ்சி நின்றது. அந்த அறையில் மாத்திரம் என்ன, அவன் உள்ளமும் சூனியமாகத்தான் இருந்தது.

சோர்வைப் பொருட்படுத்தாமல் அறையைச் சரிப்படுத்தினான் ஜான். ஒவ்வொரு பொருளையும் அது இருக்க வேண்டிய இடத்திலே எடுத்து வைத்தான். அவன் இது வரையில் லூஸி இல்லாத வாழ்க்கையைக் கற்பனை செய்ததுகூட இல்லை. இப்போது அது உண்மை



யிலே நிகழ்ந்துவிட்டபோது, அழலாம் போல இருந்தது அவனுக்கு. அவனுடைய வாழ்க்கையிலே அவள்தான் எப்படி ஒன்றிவிட்டாள்! ஜானின் மூச்சு லூஸிதானே! சொல்லாமல் கொள்ளாமல் அவள் இப்படித் திடீரென்று கிளம்பிவிட்டாளே! துக்கம் அவன் நெஞ்சை அடைத்தது. மிஞ்சிப்போனல் ஊரில் ஒரு வாரமோ, பத்து நாளோ இருக்கப் போகிருள்; அவ்வளவுதான்! ஆனல் அவனுல் இனி ஒரு கணமும் லூஸி இல்லாமல் வாழமுடியாதே!

வெறுப்போடு அலமாரியிலிருந்த உணவைத் தட்டில் பரிமாறிக்கொண்டான். தினமும் லூஸியின் முகத்தைப் பார்த்துக்கொண்டே சாப்பிடுபவன், இன்று சுவரை மாறி மாறிப் பார்த்தான். குளிர்ந்த பானம் இன்று அவனுக்குச் சுவைக்கவில்லை. அவன் வீடு சோபை இழந்துவிட்டது; எஜமானி அங்கே இல்லை.

வாசற்புற ஜன்னலருகில் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டான் ஜான். சிகரெட்டைப் பிடிக்க அவன் விரும்பவில்லை. வெளியே நகரம் முழுவதும் குதிப்பும் கொம்மாளமுமாக இருந்தது. எங்கும் இன்பமான பேச்சும், மனம் நிறைந்த முகங்களும் தென்பட்டன. விர்ரென்று நடந்து அவன் எங்கே வேண்டுமானுலும் போகலாம். ஜோரான ஒரு சினிமாப் படத்தை இரவு வரையில் அவன் ரசிக்கலாம். ஆனல் அவன் திரும்பி வரும்போது லூஸியின் அந்த எழில்முகம் தென்படப் போகிறதா என்ன? வழக்கம்போல அவன் சதுரங்கம் ஆட ஹென்றியின் வீட்டுக்குப் போகலாம்; இரவு முழுவதும் ஆடலாம்! ஆனல் அவன் நாற்காலியை விட்டு நகரவில்லை. வாழ்க்கை வீணையின் தந்தி அறுந்துவிட்டதை அவன் உணர்ந்தான். லூஸி அவனைப் பிரிந்துவிட்டாள்.

ஜானின் மனநிலையை அளவிட முடியாதபடி இருந்தது. லூஸியின் முக்கியத்துவத்தை அவன் அப்போதுதான் மிகவும் உணர்ந்தான். அவனுடைய வாழ்க்கையை ஒளி மயமாக்க, அவனுக்கு இன்பமூட்ட லூஸியால்தான் முடியும்.

ஆனல் அந்த அபலையை அவன் எப்படி நடத்துகிருன்? உயிரற்ற ஜீவனைப் போலல்லவா அவளை அவன் மதிக்கிருன்! எத்தனை முறை அவனுடைய அரவணைப்புக்காக அவள் ஏங்கியிருக்கிருள்! அவனுடைய முத்தத்துக்காக அவள் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கிருள்! சாப்பாடும் லூஸியின் உழைப்புந்தான் அவனுக்குத் தெரிந்தன. அவன் மூளை உறங்குகிறதா, அல்லது அவனுக்குத்தான் உணர்வே இல்லையா?

'நான் உண்மையில் செவிடன்தான். காதுகேட்டால் மாத்திரம் போதுமா? எவ்வளவு கேவலமாக நான் லூஸியை நடத்துகிறேன்! ஒவ்வோர் இரவும் சதுரங்கம் ஆடிவிட்டுப் பாதி ராத்திரிக்குத் திரும்பி அவளுக்கு எவ்வளவு வேதனை உண்டாக்குகிறேன்! அந்தப் பேதை துளியாவது முகத்தைச் சுளித்துக்கொள்கிருளா என்ன? அவளை நான் துளியாவது இன்பமூட்டுகிறேனு? என் அறிவு குன்றி மழுங்கிவிட்டதா என்ன? எல்லாவற்றையும் இனிமேல் சரிப்படுத்த வேண்டியதுதான். அவளை இனிமேல் வெளியே அழைத்துச் சென்று பல இடங்களைக் காட்ட வேண்டும். பெட்டிப்பாம்பு

போலல்லவா அவள் வீட்டுக்குள் அடைந்து கிடக்கிறாள்?'-ஜானின் சிந்தனைக் கயிறு அறுந்தது.

வெளியே 'ஓ' என்ற இன்பக் கூக்குரல் எழுந்தது. நாட்டிய மங்கையரின் அங்க வளைவுகளைப் பார்த்தபடி ரசிகர் கூட்டம் கூட்டமாக வந்தார்கள்.

ஹென்ரியின் வீட்டிலே தோழர்கள் கதவைத் தட்டுவது அவன் காதில் விழுந்தது. இரவு சதுரங்க ஆட்டத்துக்காக ஆர்ப்பாட்டம் எழுந்தது.

ஆனால்—

எதுவுமே அவனை உற்சாக மூட்டவில்லை. அவனுடைய வாழ்க்கையின் ஒளி அவிந்துவிட்டது. அது அவனுக்கு மீண்டும் வேண்டும். 'காட்டுமிராண்டிகள் மனிதரின் முன்னோர்!' என்ற அடியை ஞாபகப்படுத்திக்கொண்டான். அதுதான் அவனுக்கு எவ்வளவு பொருத்தமாகிவிட்டது?

ஜான் வலது கையை நீட்டிச் சோம்பல் முறித்தான். லூஸியின் ஜார்ஜெட் அவன் கைகளிலே பட்டது. அதன் மென்மையைவிட லூஸியின் தளிர் விரல்கள் எவ்வளவு மென்மையானவை! அவள் பகல் வேளைகளில் தைத்து வைத்திருந்த சட்டையும் 'டேபிள் கிளாத்'தும் தெரிந்தன. எவ்வளவு நேர்த்தியாக அவள் அவற்றை நெய்திருக்கிறாள்!

கீழே சிந்தியிருந்த ஸெண்டின் மணம் லேசாகக் கமழ்ந்தது. லூஸியின் நினைவை அது அதிகப்படுத்தியது. எப்பொழுதாவது அவள் அவனை எதிர்த்துப் பேசியிருக்கிறாளா?

வெட்கமும் அறியாமையும் அவன் சிந்தையை அவித்தன. துயரம் கண்களில் நீரைக் கொண்டு வந்து அவன் கன்னத்தை ஈரமாக்கியது. அந்த ஈரம் அவன் மனத்திலே மாத்திரம் இருந்திருந்தால் லூஸியிடம் அவன் அப்படி நடந்து கொண்டிருப்பானா?

* * *

டக்கென்று கதவு திறந்தது. ஒளி உள்ளே புகுந்தது. புன்சிரிப்பு அரும்ப லூஸி உள்ளே வந்தாள்.

ஜான் பிரமிப்போடு அவளைப் பார்த்தான்.

"நல்ல வேளை, உடம்பு ஒன்றுமில்லையாம்; சாதாரண ஜுரம் தானும். அதுகூடத் தேவலையாம். 'அவரை விட்டுவிட்டு வரவேண்டாம்' என்று தம்பி மாத்திரம் போயிருக்கிறான். எனக்கும் உங்களைப் பிரிய என்னவோ போலத் தான் இருந்தது....!"

அவள் பேச்சு அவன் காதில் விழவேயில்லை. அவளை அன்போடு அணைத்துக்கொண்டு, அவள் தலையை வருடிக்கொண்டேயிருந்தான்.

"லூஸி, இனிமேல் என்னைவிட்டு நீ பிரியவே கூடாது; தெரிகிறதா? நான் இன்றிரவு சதுரங்கத்துக்குப் போகப்போவதில்லை!" - அவன் பேச்சு இதமாக இருந்தது. வெகு நாளாக மாறுபட்டிருந்த உள்ளங்கள் ஒன்றுபட்டன.

லூஸி அவன் பிடிப்பிலிருந்து திமிறினாள்.

"காபி போடவேண்டும்; என்னை விடுங்கள், நேரமாகிறது!"

அவன் நகைத்தான்; அவளும் கூடவே இதழ் பிரியச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் பொதிந்து கிடந்த பொருள்தான் என்ன?

ஜானுக்கு அது விளங்கி விட்டது! ★

மூன்று ஆப்பிள் கதை

மொழிபெயர்த்தவர் : அ. லெ. நடராஜன்

‘ஆயிரத்து ஓர் இரவுகள்’ என்ற அரபுக் கதைகள் உலகப் பிரசித்தமானவை. அவற்றை உலகத்தில் உள்ள எத்தனையோ நாடுகளில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். சாட்டூஸ் அண்டு விண்டூஸ் என்ற லண்டன் கம்பெனியார் வெளியிட்டுள்ள வில்லியம் லேன் பதிப்பை ஒட்டி, அந்தக் கம்பெனியாரின் அநுமதி பெற்று இந்த ஆசிரியர் தமிழில் இந்தக் கதைகளைத் தந்திருக்கிறார். புத்தகம் பதிப்பதிலே மிக்க உயர்தரமான முறையைக் கடைப்பிடிப்பவர் ஸ்ரீ நடராஜன். அவரே மொழிபெயர்த்துள்ள இது, அவருடைய உயர்தரக் கலைச் சுவைக்கு ஏற்றபடி மிக அழகாகப் பதிப்பாகியிருக்கிறது. ஏதோ மொழிபெயர்ப்புப் போல் இராமல் தமிழிலே இயன்ற அசல் நூல்போல், நடை சரளமாக ஓடுகிறது. ‘ஒரு பானைச் சோற்றுக்கு ஓர் அவிழ்தானே பதம்?” இந்தக் கதையையேதான் படித்துப் பாருங்களேன்.

கலீபா அரூன் அல் ரஷீத் அவர்கள், ஒரு நாள் தம் மந்திரி ஜபாரை அழைத்து, “கவர்னர்களும் மற்ற அதிகாரிகளும் மக்களை ஆட்சிபுரியும் விதத்தை அறியவும் அவர்களைப்பற்றி மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை அறியவும் இன்று இரவு நகர் சோதனைக்கு நாம் புறப்பட வேண்டும். ஜனங்கள் போற்றிப் பேசுகிற அதிகாரிக்கு உயர் பதவி கொடுத்துத் தூற்றிப் பேசுகிற அதிகாரியைப் பதவியிலிருந்து விலக்கிவிட வேண்டும்” என்று கூறினார்கள்.

அதன்படி, அன்று இரவு மாறுவேடம் புனைந்து, கலீபா அவர்கள், மந்திரி ஜபார், கத்தி-கட்டி மஸ்ரூர் ஆகிய மூவரும் கிளம்பினார்கள். கடைத் தெருக்களையும் மற்ற வீதிகளையும் கடந்து, குறுகிய ஒரு சந்து வழியாக மூவரும் சென்றபோது, மீன் பிடிக்கிற வலையையும் கூடையையும் தலையில் வைத்துக்கொண்டு, கையில் ஒரு தடியைப் பிடித்தவாறு கிழவன் ஒருவன் வருவதை அவர்கள் கண்டார்கள். கீழ் வரும் கருத்துள்ள பாடலை அவன் வாய் முணுமுணுத்தது:

காப்பிரைட்: ஆயிரத்து ஓர் இரவுகள் என்ற அரபுக்கதைகள் - முதற் பாகம் (தமிழ்ப் புத்தகம்). மலிவுப் பதிப்பு: விலை ரூ. 4 8-0; பரிசுப் பதிப்பு: விலை ரூ. 6-0-0. விற்பனையாளர்: பாரதி பதிப்பகம், சென்னை-17.

அறிவு முதிர்ந்த தங்களை, மக்களிலே மாணிக்கம் என்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், நான் சொல்லுகிறேன்: பலவானாக இருந்தால் ஒழிய ஒருவன் புத்திமானாக இருக்க முடியாது.

ஒரு நாளை உணவுக்குக் கூட எனக்கு வழி பிறக்கவில்லை. ஏழைகளுக்குத்தான் வாழ்க்கையில் எத்தனை துன்பங்கள்; எத்தனை இன்னல்கள்; எத்தனை தொல்லைகள்!

கோடைக்காலத்தில் உண்ணச் சோறு கிடைப்பதில்லை. மாரிக்காலத்தில் அடுப்பங்கரையில் இருந்து குளிர் காய்வதுதான் மிச்சம்.

ஏழை என்று கண்டால், தெருவிலே போகும்போது, நாய்கள்கூட அவனைச் சும்மா விடுவதில்லை. குரைத்தும் கடித்தும் அவனைத் துரத்துகின்றன.

தனக்குள்ள கஷ்டத்தையும் வருத்தத்தையும் ஏழை உண்மையாகச் சொன்னாலும் அந்தச் சொல் அம்பலம் ஏறுவது இல்லை.

ஏழைகளுக்கு வாழ்வே இல்லை. அப்படி ஒன்று இருப்பின், அது மயானந்தான்.

இந்தப் பாடலைச் செவிமடுத்த கலீபா அவர்கள், "இவன் அதிக தரித்திரத்தில் வருந்துகிறான் என்பதை இவனுடைய பாட்டும் தோற்றமும் தெரிவிக்கின்றன" என்று ஜபாரிடம் சொன்னார்கள். பிறகு கிழவனை அணுகி, "அப்பா! நீ யார்? உன் தொழில் என்ன?" என்று விசாரித்தார்கள்.

"நான் ஓர் ஏழைச் செம்படவன்; வயதானவன்; குடும்பம் பெரிது. மத்தியானம் சென்றவன், இப்பொழுதுதான் திரும்புகிறேன். எவ்வளவு பிரயாசைப்பட்டும் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் உணவு அளிக்க அல்லா இன்று திருவுளம் பற்றவில்லை. ஒரு கவளத்துக்குக் கூட வழி பிறக்கவில்லை; குழந்தை குட்டிகள் பட்டினியால் தவிக்கின்றனர். வாழ்க்கைமீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டதால், நான் சாகப் போகிறேன்" என்றான் கிழவன்.

"பெரியவரே, என்னோடு வந்து, என் அதிர்ஷ்டத்தைச் சொல்லி, டைகரீஸ் நதியில் ஒரு முறை வலை வீசும். அதில் விழுகிறதை, எதுவாயினும் சரி, நூறு தீனாருக்கு நான் எடுத்துக்கொள்கிறேன்" என்றார் கலீபா.

இதைக் கேட்டு ஆனந்தம் அடைந்த செம்படவன், அவர்களுடன் சேர்ந்து சென்று, மீண்டும் டைகரீஸ் நதியில் வலையை வீசினான். சிறிது நேரம் காத்திருந்து பிறகு வலையைச் சுண்டிக் கரைக்கு இழுத்தான். உறுதியான பூட்டுப் போட்ட கனத்த பெரிய பெட்டி ஒன்று வலையில் விழுந்து இருந்தது. இதைப் பார்த்துவிட்டு, கலீபா அவர்கள் கொடுத்த நூறு தீனார்களை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு, செம்படவன் தன் இல்லம் திரும்பினான்.

மந்திரி ஜபாரும் கத்தி-கட்டி மஸ்ரூரும் பெட்டியை அரண்மனைக்கு எடுத்துப் போனார்கள். கலீபா அவர்கள் தீவட்டியைக் கொளுத்திய சமயத்தில், மஸ்ரூரும் ஜபாரும் பூட்டை உடைத்துப் பெட்டியைத் திறந்தார்கள். பனையோலையால் முடைந்து நாற்புறமும் சிவப்பு நாடாத் தைத்த கூடை ஒன்று அதற்குள் இருந்தது.

பெட்டியை விட்டுக் கூடையை வெளியே எடுத்து அதைப் பிரித்தார்கள். முதவில் ஒரு கம்பளி, அதை அடுத்துப் பெண்கள் அணியும் வெள்ளைப் புர்கா, சொக்க வெள்ளியோ என்னும்படியான பெண் ஒருத்தியின் உடல் ஆகிய மூன்றும் அடுத்தடுத்துக் கூடைக்குள் இருப்பதைக் கண்டார்கள். கண்ட துண்டமாக ஒரு பெண்ணை வெட்டிக் கொலை செய்து யாரோ இப்படி அடக்கம் செய்திருக்கிறார் என்று தோன்றியது.

கோரமான இந்தக் காட்சியைக் கண்ட கலீபா அவர்கள் பதறிவிட்டார்கள். கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகக் கொட்டியது. அப்படியே, ஜபாரின் பக்கம் திரும்பி, "ஏ கேடு கெட்ட மந்திரி! நம் ஆட்சி நடை பெறும் லட்சணத்தைப் பார்! ஒரு பெண்ணை இப்படிக் கண்ட துண்டமாக வெட்டிக் கொன்று, துணிகரமாக அடக்கம் செய்து ஆற்றிலே எறிந்திருக்கிறார்கள். இதற்கு இறுதித் தீர்ப்பு நாளன்று நான் அல்லவா ஆண்டவனிடம் பதில் சொல்ல நேரும்? இந்தப் பெண்ணைக் கொலை செய்த பாதகனைக் கண்டுபிடித்து, கொடிய முறையில் பழிக்குப் பழி வாங்காவிட்டால் எனக்கு நிம்மதி ஏற்படாது. கொலையாளியைக் கண்டுபிடித்து என் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்துவது உன் பொறுப்பு. அப்படி நிறுத்தாவிட்டால், உன்னையும் உனக்குத் துணையாக உன் சுற்றத்தார்களில் நாற்பது பேரையும் அரண்மனைவாயில் முன்பு கட்டாயம் கழுவில் ஏற்றி விடுவேன். ஜாக்கிரதை!" என்று ஆத்திரத்தோடு கூறினார்கள்.

மூன்று திங்கள் கெடுவு தருமாறும் அதற்குள் தாம் கொலையாளியைக் கண்டுபிடித்துவிடுவதாகவும், ஜபார் வேண்டியதற்கு, கலீபா அவர்கள் சம்மதித்தார்கள்.

அப்பாவி ஜபார் வருந்திய மனத்தோடு நகரத்தைச் சுற்றியலைந்தார். "ஆண்டவனே! கொலையாளியை எவ்வாறு கண்டு பிடிப்பது? உண்மைக் கொலையாளி ஒருவன் இருக்க, வேறு ஒருவனைப் பிடித்துப் போய்க் கலீபா அவர்கள் முன்பு நிறுத்து வேனானால், ஆண்டவன் சந்நிதானத்திலே இந்தக் குற்றத்துக்காக நானும் அல்லவா நிற்க நேரும்? ஒன்றும் தோன்றவில்லையே! என்ன செய்வேன்?" என்று ஏங்கினார். பிறகு, நடப்பது நடக்கட்டும் என்ற எண்ணத்துடன் மூன்று நாட்கள் வீட்டிலேயே இருந்துவிட்டு, நான்காம் நாள் அன்று கலீபா அவர்களின் முன்னிலையில் போய் நின்றார்.

"கொலையாளியைக் கண்டு பிடித்துவிட்டாயா?" என்று கலீபா அவர்கள் ஜபாரைக் கேட்டார்கள்.

"அரசே, கொலையாளியை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஜன நெருக்கம் அதிகமுள்ள இந்த நகரில் குற்றவாளியைக் கண்டு பிடிப்பது அவ்வளவு எளிய காரியம் அல்லவே?" என்று மந்திரி சொன்னார்.

இதைக் கேட்டுக் கலீபா அவர்கள் அதிக ஆக்ரோஷம் அடைந்து, "நான் உன்னைச் சும்மா விடப் போவதில்லை. தண்டித்தே தீருவேன்" என்று கர்ஜித்தார்கள். தண்டனையை நிறைவேற்றுவதற்கான கட்டளையைப் பிறப்பித்து, இந்தச் செய்தியை ஊராருக்குத் தெரிவிக்கும்படி

பறையறைவோனுக்குப் பணித்தார்கள்.

"மந்திரி ஜபாரும் அவருக்குத் துணையாக அவருடைய சுற்றத்தாரில் நாற்பது பேரும் அரண்மனை முன்பு இன்று கழுவில் ஏற்றப்படுவார்கள். காண விரும்புவோர் திரண்டு வருக!" என்று அவன் நகர் முழுதும் பறையறைந்தான்.

இந்தச் செய்தியைச் செவிமடுத்த பாக்தாத் நகர ஜனங்கள், நகரின் நாற்புறத்திலிருந்தும் புறப்பட்டு, அரண்மனை முன்பு வந்து திரண்டனர். தயாள குணத்துக்கும் அன்புக்கும் பெயர் போன மந்திரியிடமும் அவருடைய குடும்பத்தாரிடமும் பெரிதும் அன்பு வைத்திருந்த அவர்கள், காரணம் தெரியாமல், அரண்மனை முன்பு அழுதுகொண்டு நின்றார்கள்.

கழுவிலேற்ற மேடைகள் தயாராயின. கலீபா அவர்களின் உத்தரவை எதிர்நோக்கி, கொலையாளிகளும் அதிகாரிகளும் காத்து நின்றார்கள். புலம்பி நின்ற நகர மாந்தரின் கூட்டத்தை விலக்கிக்கொண்டு உயர்ந்த ஆடைகள் தரித்த கட்டழகன் ஒருவன் விரைவாக ஓடிவந்து, ஜபாரின் கால்களைப் பிடித்துக்கொண்டு, "எஜமானரே! ஏழை பங்காளா! தாங்கள் சாகக் கூடாது. தங்களை விடுவிக்க நான் வந்திருக்கிறேன். பேழைக்குள் கிடைத்த பெண்ணைக் கொன்றவன் நானே. டைகரீஸ் நதியில் பெட்டியை எறிந்தவனும் நானே. ஆகவே, என்னைக் கழுவிலேற்றி அவளுக்கு நீதி வழங்குங்கள்" என்று கதறினான்.

தானே குற்றத்தை ஒப்புக்கொண்டு, தம்மை வாலிபன் மீட்டதற்காக ஜபார் ஒரு புறம் மகிழ்ச்சி அடைந்தார் என்றாலும், அவனுக்கு ஏற்படப் போகும் கதியை நினைந்து மறுபுறம் வருத்தமும் அடைந்தார். வாலிபனை எழச் சொல்லி, விவரம் அறிய அவர் முயன்ற சமயத்தில், கூட்டத்தை விலக்கிக்கொண்டு, கிழவன் ஒருவன் ஓடிவந்து வாலிபனைத் தடுத்து, ஜபாருக்குச் சலாம் செய்தான். பிறகு மந்திரியை நோக்கி, கீழ்வருமாறு சொன்னான்:

"மந்திரியார் அவர்களே! இந்த வாலிபன் கூறுவதைத் தாங்கள் நம்ப வேண்டாம். பெண்ணைக் கொலை செய்தவன் நானே. ஆகையால், என்னைத் தண்டியுங்கள்" என்றான்.

"இல்லை இல்லை, மந்திரியார் அவர்களே! தாம் இன்ன சொல்கிறார் என்பதை அறியாமல் இந்த முதியவர் பிதற்றுகிறார். பெண்ணைக் கொலை செய்தவன் நானே. ஆகவே, என்னைப் பழி வாங்குங்கள்" என்று வாலிபன் இடைமறித்துச் சொன்னான்.

"மகனே! நீ இளைஞன். வாழ்வை அநுபவிக்க வேண்டியவன்; நானோ கிழவன். வாழ்க்கையை ஓரளவு அநுபவித்து முடித்தவன். உனக்குப் பதிலாகக் குற்றத்தை ஏற்று, உன்னையும் மந்திரியையும், அவருடைய சுற்றத்தாரையும் விடுவித்துக் காப்பாற்ற மனமுவந்து முன்வந்திருக்கிறேன். ஆகவே, கொலையை ஒப்புக்கொள்ளும் என்னைத் தண்டியுங்கள்" என்று வேண்டினான் கிழவன்.

தாங்களே முன்வந்து இருவரும் குற்றத்தை ஒப்புக்கொள்வதைக் கண்டு ஆச்சரியமும் குழப்பமும் அடைந்த ஜபார், முக்கியக் காவலாளியிடம் அநுமதி பெற்று, இருவரையும் அழைத்துக்கொண்டு கலீபாவின் தர்பாருக்கு ஓடினார்.

கலீபா அவர்களைப் பேட்டி கண்டு, "அரசே, பெண்ணைக் கொன்ற குற்றவாளிகள் இதோ இருக்கிறார்கள்" என்றார்.

"எங்கே அவர்கள்?" எனக் கலீபா அவர்கள் கேட்கவே, "இஸ்லாமியர்களின் தலைவரே, தான் கொலை செய்ததாக இந்த வாலிபன் கூறுகிறான். அதை மறுத்துக் கொலை செய்தது தாமே என்பதாக இந்தப் பெரியவர் கூறுகிறார். குற்றவாளிகள் இருவரும் இதோ தங்கள் முன்னிலையில் நிற்கிறார்கள்" என்றார் ஜபார்.

"யார் உண்மையில் பெண்ணைக் கொன்றது?" என்று கலீபா அவர்கள் அந்த இருவரையும் கேட்டார்கள். "நான்தான்" என்றான் வாலிபன். "இல்லை, நான்தான்" என்றான் கிழவன். இதைச் செவி மடுத்த கலீபா அவர்கள், "அப்படியானால் இருவரையுமே கழுவில் ஏற்றிவிடு" என்று பணித்தார்கள்.

"கொலைகாரனைத் தண்டிப்பது நியாயமாகலாம். குற்றமற்றவனை

யும் சேர்த்துத் தண்டிப்பது அநீதி யாகாதா?'' என்று ஜபார் கேட்டார்.

உடனே வாலிபன் துள்ளி முன் வந்து, ''வானத்தைப் பெரிய திரைச் சீலை போலவும் பூமியைப் பிரம்மாண்டமான தோட்டம் போலவும் படைத்தருளிய ஆண்டவன்மீது ஆணையாகச் சொல்லுகிறேன்! பெண்ணை நானேதான் கொலை செய்தேன். அதை மெய்ப்பித்துக் காட்ட என்னிடம் போதிய ருசுக்கள் இருக்கின்றன'' என்று கூறி, பெண்ணைக் கொன்று பெட்டியில் தான் அடக்கம் செய்து, அதை ஆற்றில் விட்ட விருத்தாந்தம் முழுவதையும் அவர்களுக்கு அவன் கூறினன். கலீபா, ஜபார், மஸ்ரூர் ஆகிய மூவருக்கும் மட்டுமே தெரிந்துள்ள அந்த விஷயங்கள் அவன் குற்றவாளி என்பதை ஊர்ஜிதம் செய்தன. ஆகவே, ஆச்சரியம் அடைந்த கலீபா அவர்கள் வாலிபனை நோக்கி, ''நீ என் அவளைக் கொன்றாய்? உதை கொடுத்து உண்மையைக் கக்கச் செய்வதற்கு முன்பே, வலிய முன் வந்து, நீயே குற்றத்தை ஒப்புக்கொண்டு, தண்டனை கோருவதன் நோக்கம் என்ன?'' என்று வினவினர். கீழ்வரும் கதையை வாலிபன் சொன்னன்:

''இஸ்லாமியர்களின் தலைவரே! வெட்டுண்டு பெட்டியில் கிடப்பவள் என் மனைவி. என் குழந்தைகளுக்குத் தாய். என் சிற்றப்பாவான இந்தப் பெரியவரின் மகள். இளமையிலேயே எங்களுக்கு விவாகம் நடந்துவிட்டது. அவள் மூலம் மூன்று ஆண் குழந்தைகளைக் கடவுள் எனக்குக் கொடுத்தார். என்னிடம் மிகவும் நேசம் வைத்த அவள், மரியாதையாகவும் பிரியமாகவும் அடக்கமாகவும் நடந்து கொண்டாள்; பிழை ஏதும் காணுத அவளிடம் நான் மட்டற்ற பிரியம் வைத்திருந்தேன்.

''இந்த மாத ஆரம்பத்தில் என் மனைவி நோய்வாய்ப்பட்டாள். சிறந்த மருத்துவர்களைக் கொண்டும் அல்லாவின் அருளாலும், அரும்பாடு பட்டு அவளுடைய உயிரைக் காப்பாற்றினேன். நோய்வாய்ப்பட்ட காலம் முதல் இன்பம் துய்க்காது விலகியிருந்த நான் அன்று அவளுடன் இன்பம் துய்க்க ஆசைகொண்டு, ஹம்மாம் (குளிக்கும் இடம்) சென்று நீராடி வரும்படி சொன்னேன். ஆப்பிள் தின்ன வேண்டும் என்ற ஆசை தன் உள்ளத்தில் நீண்ட காலமாக இருந்து வருவதாகவும், தனக்கு ஓர் ஆப்பிள் வாங்கித் தரும்படியும் அவள் என்னை வேண்டினுள். 'எவ்வளவு விலையாக இருந்தாலும் சரி, வாங்கித் தருகிறேன்' என்று கூறி வெளியே புறப்பட்டுச் சென்றேன். ஒரு கடையிலாவது ஆப்பிள் இல்லை. எங்கே தேடி யலைந்தும் கிடைக்கவில்லை. மிக்க ஏமாற்றத்துடன் வீடு திரும்பி, 'ஓர் ஆப்பிள் கூடக் கிடைக்கவில்லை' என்று என் மனைவியிடம் சொன்னேன். இதைக் கேட்டு அவள் மனமுடைந்து போனுள். துர்ப்பலமாகவுள்ள அவளை மேலும் வருந்தவிடக் கூடாது என்று கருதி, பழம் கிடைப்பதற்கான வழிகளைப் பற்றி இரவு முழுதும் சிந்தித்தேன். பொழுது விடிந்ததும் தோட்டம் தோட்டமாகவும் தோப்புத் தோப்பாகவும் தேடியலைந்து பார்த்தேன். ஓர் ஆப்பிள்கூடக் கிடைக்கவில்லை.

''கடைசியாக ஒரு தோட்டக்காரக் கிழவனிடம் சென்றபோது,

'வாலிபரே, ஆப்பிள் இந்தப் பகுதிகளில் பயிரிடப்படவில்லை. ஆகையால், அந்தப் பழம் இங்கே கிடைப்பது அரிது. பாஸ்ராவில் கலீபா அவர்களின் தோட்டத்தில் பயிரிடப்படுவதாகக் கேள்வி. கலீபா அவர்கள்மட்டுமே அருந்துவதற்கு என்று விசேஷமாகப் பயிர் செய்யப்படுகிற அந்தப் பழம் பிறருக்குக் கிடைக்காது' என்று சொன்னான்.

"திரும்பி வந்து, என் மனைவியிடம் விவரத்தைச் சொன்னேன். அவள்மீது கொண்டிருந்த அளவற்ற அன்பு காரணமாக, பாஸ்ரா சென்றாவது பழம் வாங்கி வருவது என்று முடிவு செய்தேன். அதன்படி சென்று திரும்பப் பதினைந்து தினங்கள் பிடித்தன. அதிர்ஷ்டம் இருந்தபடியால், கலீபா அவர்களின் தோட்டக்காரன், மூன்று தீனார்களுக்கு மூன்று ஆப்பிள்கள் தந்தான்.

"வீடு திரும்பி, வாங்கி வந்த பழங்களை ஆசையோடு என் மனைவியிடம் கொடுத்தேன். ஆவல் தணிந்தவள் போல் அவற்றை வாங்கி என் மனைவி தன் பக்கத்தில் அலட்சியமாகப் போட்டாள். இதனாலும் இதர அறிகுறிகளாலும் நான் சென்ற பிறகு நோய் மீண்டும் கடுமையாகி விட்டது என்பதை அறிந்தேன். எனவே; ஒரு கணங்கூட அப்பால் இப்பால் நகராமல் அருகிலேயே இருந்து அவளுக்குச் சிகிச்சை செய்தேன். அல்லாவின் அருளால் பத்து நாளைக்குப் பின், நோய் குணமாகி என் மனைவி சுகம் அடைந்தாள். நான் கடைக்குச் சென்று வியாபாரத்தைக் கவனித்தேன்.

"நான் வாங்கி வந்த ஆப்பிள் பழங்களில் ஒன்றைக் கையில் வைத்து விளையாடியபடி ஆபாசமான நீக்ரோ ஒருவன் அன்று மத்தியானம் என் கடைவழியே சென்றான். அவனைக் கூவி அழைத்து, 'நண்பா, உனக்கு இந்தப் பழம் எங்கே கிடைத்தது? எனக்குக் கொஞ்சம் பழங்கள் தேவை. அதனால்தான் விசாரிக்கிறேன்' என்றேன்.

"இதைக் கேட்ட அந்த நீக்ரோ நகைத்தான். 'என் வைப்பாட்டி தந்த கனி இது. நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவளை இன்று நான் சந்தித்தேன். மூன்று ஆப்பிள் பழங்கள் அவளுக்குப் பக்கத்தில் கிடந்ததைக் கண்டு, அவை அவளுக்கு எங்கிருந்து கிடைத்தன என்று கேட்டேன். ஏமாந்த சோணகிரியான தன் கணவன் பாஸ்ராவுக்குச் சென்று மூன்று தீனார்களுக்கு அவைகளை வாங்கி வந்ததாகக் கூறி, அவற்றில் ஒரு பழத்தை எனக்குத் தந்தாள்' என்றான்.

"இதைக் கேட்டபின் உலகத்தையே அந்தகாரம் விழுங்கிவிட்டதாக எனக்குத் தோன்றியது. கடையைச் சடுதியில் மூடிவிட்டு, வெகு பரபரப்போடு வீதி நெடுகிலும் ஓடி என் வீட்டை அடைந்தேன். படுக்கையின் பக்கத்தில் இரண்டு பழங்கள்மட்டுமே கிடப்பதையும் ஒன்று குறைவாக இருப்பதையும் கண்டு, 'மூன்றாவது பழம் எங்கே?' என்று என் மனைவியை விசாரித்தேன். நீக்ரோவின் கூற்றில் எனக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில், 'எனக்குத் தெரியாது' என்று என் மனைவி பதில் சொன்னாள். சீறி எழுந்து ஒரு கத்தியை எடுத்து அவள்மீது பாய்ந்தேன். வயிற்றின் மீது

அமர்ந்து பலமாக அமுக்கிக் கொண்டு, அவளுடைய அவயவங்களைக் கண்டதுண்டமாக வெட்டி அங்கி ஒன்றில் வைத்து மூட்டையாகக் கட்டினேன். பிறகு, ஒரு கம்பளியால் அந்த மூட்டையைச் சுற்றி, ஒரு கூடைக்குள் வைத்தேன். கூடையைப் பெட்டியில் வைத்து மூடி, கழுதைமீது ஏற்றிச் சென்று, டைகரீஸ் நதியில் போட்டுவிட்டு, ஒருவருக்கும் தெரியாதபடி வீடு திரும்பினேன்.

"தன் தாய் கொலையுண்டாள் என்பதை அறியாத என் மூத்த மகன் வாசலில் அழுதுகொண்டு நின்றான். 'ஏன் அழுகிறாய்?' என்று நான் அவனைக் கேட்டேன். 'என் தாயார் வைத்திருந்த ஆப்பிள்களில் ஒன்றை எடுத்துக்கொண்டு, தம்பிகளுடன் சேர்ந்து விளையாடத் தெருவுக்கு ஓடினேன். அப்போது தடித்த நீக்ரோ ஒருவன் என் கையிலிருந்த ஆப்பிளை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு, இந்தப் பழம் ஏது என்று என்னைக் கேட்டான். இதையும் சேர்த்துத் தாங்கள், நோய்வாய்ப்பட்ட தாய்க்காகப் பாஸ்ராவில் மூன்று பழங்கள் வாங்கிவந்தீர்கள் என்பதைச் சொன்னேன். அதைப் பொருட்படுத்தாமல் என்னை அடித்துவிட்டு, பழத்தை அபகரித்துக்கொண்டு அந்த நீக்ரோ போய்விட்டான். பழம் எங்கே என்று கேட்டு, அம்மா என்னை அடிப்பாள். அதற்காகத்தான் அழுகிறேன்' என்றான்.

"என் மகன் கூறியதைச் செவிமடுத்த பின், என் மனைவிமீது களங்கத்தையும் அபவாதத்தையும் அபாண்டமாகக் கற்பித்துக்கொண்டு என் மனைவியை அநியாயமாகக் கொன்றதற்காக மனமுடைந்து ஆற்றாது அழுதேன். என் சிற்றப்பாவும் அவள் தந்தையுமான இவரிடம் நடந்த விவரங்களைச் சொன்னேன். அவரும் அதிகத் துக்கப்பட்டார். சென்ற ஐந்து தினங்களாக அவளை நினைத்து நினைத்து அல்லும் பகலும் நாங்கள் புலம்பிக்கொண்டிருக்கிறோம். அநியாயமாகக் கொன்றுவிட்டோமே என்ற எண்ணம் என்னைச் சதா வாட்டி வருகிறது.

"ஆகையால், கலீபா அவர்களே! தங்கள் முன்னோர்கள்மீது ஆணையாகச் சொல்லுகிறேன்! நான் புரிந்த படுபாதகமான இந்தக் கொலைக்காக விரைந்து என்னைத் தண்டியுங்கள்" என்றான் வாலிபன்.

இதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்த கலீபா அவர்கள், 'வாலிபனை மன்னிப்பதுதான் முறை' என்று கருதி அவனைத் தண்டிக்காது விட்டுவிட்டார்கள்.

பிசகிலிருந்து அறிவு

உங்கள் சொந்தப் பிசகுகளிலிருந்து நீங்கள் அறிவு பெற முடியாது; பிறர் பிசகுகளிலிருந்தே அறிவு பெற முடியும். அத்தனை பிசகுகளையும் ஒருவனே புரிய ஆயுள் போதாது.

—'லோன் ஸ்டார் ஸ்கான்னர்'

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

நீரில் உயர்ந்தது

எல்லாம் துறந்த முனிவர் ஒருவர் இமயமலைச் சாரலிலே தவம் செய்து வந்தார். அவருடைய புகழ் நாடெங்கும் பரவியது. அவருக்குச் சிஷ்யராகவேண்டும் என்ற எண்ணத்தோடு எத்தனையோ பேர் அவரிடம் வந்தார்கள். ஒருவரை யாவது அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

இப்படி எத்தனையோ ஆண்டுகளாகப் பல பேர் திரும்பி விட்ட பிறகு ஒரு நாள் ஐந்து பண்டிதர்கள் அந்த முனிவரிடம் தீட்சை பெறும் ஆசையோடு சென்றார்கள். அவர்கள் எல்லாருமே சாஸ்திரத்தில் கரை கண்டவர்கள். முனிவர் அவர்களைப் புன்முறுவலோடு வரவேற்றார். அவர்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்ததும், அவர் ஒரு கேள்வி கேட்டார்.

"உலகத்தில் எல்லாவற்றையும்விட உயர்ந்த நீர் எது?"

"கங்கை நீர்" என்று ஒருவர் பதில் சொன்னார்.

"அதைவிட உயர்ந்தது எது?"

"முதல் முதலில் பூமியில் விழும் மழைத்துளி" என்றார் இரண்டாமவர்.

"அதையும்விட உயர்ந்தது எது?"

"வைகறையில் இலைகளில் பளபளக்கும் பனித் துளி" என்றார் மூன்றாமவர்.

"அதையும்விட உயர்ந்தது எது?"

"வெகுநாள் பிரிந்திருந்த மகனைப் பார்க்கும்போது தாயின் கண்ணில் துளும்பும் நீர்" என்றார் நான்காமவர்.

"அதையும்விட உயர்ந்தது எதுவும் இல்லையா?"

ஐந்தாமவர் சிறிது நேரம் மௌனமாகச் சிந்தித்தார்; பிறகு மெதுவாகப் பதில் சொன்னார். "தன்னைச் சார்ந்தவர்களிடம் அன்புகொண்டு அவர்களுக்காக நாள்முழுவதும் உழைக்கிறானே, அவனுடைய வேர்வைத் துளியைவிட உன்னதமானது எதுவுமில்லை" என்றார்.

அவருக்கு உடனே தீட்சை கிடைத்துவிட்டது.

—'ஜீவன் ஸாஹித்ய'

July '54 Regd. No. M. 4975

மஞ்சரி

ஜய - ஆடி

ஊரும் உலகமும் 1
கனவு நேரம் 3
யட்ச கானம் .. .. பிரஜாமத 6
க்விஸ் 9
பொய் அல்லாத பொய் .. .. .. அமிர்த பஜார் பத்திரிகை 10
என் பொழுது போக்கு .. .. வஸந்த் 15
விவசாயியும முயலும் .. .. ஸோவியத் நாடு 17
கணக்கில் பிறந்த குண்டு 18
வேறுபட்ட நியாயம் .. .. மணிவிளக்கு 20
ஜப்பானில் கண்டது .. .. மேழிச் செல்வம் 21
என்னைக் கேளுங்கள் .. காப்டன் என். சேஷாத்திரிநாதன் 25
தன் குற்றம் தனக்குத் தெரியாது 28
சதுரங்கம் 33
சாவு எப்படி இருக்கும்? 36
மரங்களைப்பற்றிய கதைகள் .. .. விசால பாரத் 40
வனப்பு மிக்க வைத்தியநாதம்..ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன் 44
இதைப் படித்ததுண்டா? .. .. 'பிரஸ் நோட்' 48
கார்ட்டூன் கதம்பம (படம்) 49
டில்லி ஆராய்ச்சிச்சாலை .. .. .. காமன்வெல்த் டுடே 50
மூடன் .. .. டைம் 53
அமெரிக்க ஜனாதிபதி ஆசை (படம்) 55
ருஷியாவில் ஸம்ஸ்கிருதம் .. .. ஸண்டே கிரானிக்கிள் 56
ஒரு சொல் .. .. ஜப்பான் டைஜெஸ்ட் 59
திருட்டு 62
காமன்வெல்த் நிலைக்குமா? .. .. .. ஸ்பெக்டேட்டர் 64
வாமனாவதாரம் 70
எது இன்பம்? (ஆங்கிலச் சிறுகதை) .. .. ஓ'ஹென்ரி 76
மூன்று ஆப்பிள் கதை (அரபிக் கதை) 81
நீரில் உயர்ந்தது .. .. (3-ஆம் அட்டை)